வீரசைவ மகாகுரு

# ஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள்

(கைலாச தேசிகர்) அவர்களின்




பூம் ண்டு பூர்த்தி


University of Jaffna
230.92
AIY
107694(AR; Main)


# வைர விழா மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறையை ஓதுங்கள்
திருமுறையை கேழுங்கள்
திருக்கோயிலை வழிபடுங்கள்

ஆதரவு பெருகுதல்
அறப்பணிக்கு உதவும்

# மில்க்வைற் சோப் தொழிற்சாலை

ப்பாணம்.

பருவப் புடைவைகளின்
கவர்ச்சித் தெரிவுகளுக்கு

நியூ சிவாயம்'ஸ்
58, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

துலாம்பர விளம்பரம்!

காங்கேசன்துறையில்
பரஸ்பர
நன்மை விருத்திச் சங்கம்
இற்றைக்கு 47 ஆண்டுகளுக்கு முன்
1930-ம் ஆண்டில்
ஆரம்பிக்கப்பெற்று
1945-ம் ஆண்டு வரை
இயங்கிப் பல சாதனைகள் செய்ததை
இன்றைய இளைஞர்களே!
நீங்கள் கேள்விப்பட்டும்
மறந்துவிட்டீர்களா?

-பழமைப் பித்தன்

பழைய பவுண்-பொன்-வெள்ளி-நகைகள்
வாங்கி விற்பவர்

University of Jaffna
107694
Library

ஸ்ரீ திருப்பதி மாளிகை
இல. 132, யாழ்ப்[illegible]ண வீதி,
காங்கேசன்து[illegible]

ARCHIVES

107694

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*of*

★

# FREE LANKA ENGINEERING AND IRON WORKS

**Collapsible Doors Gates & Window Grills**

**Balcony Rails etc. and Lathe Works**

***Head Office :*** **31047**

**391, Old Moor Street,**

**Colombo 12.**

***Branch :***

**562 [illegible] Sangaraja Mawatha,**

**Colombo-10.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

V

# தா. திருநாவுக்கரசு

கல்லூரி - வீதி

காங்கேசன்[illegible]றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*of*

# Rajeswari Press

No. 16-18, PRINCE STREET.

**CO OMBO-11.**

**T'phone : 29639**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*of*

# Leela Stores

240, OLCOTT MAWATTA,
COLOMBO - 11.

T'phone : 25929

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*of*

V

# ARASAN PRINTERS

**30, HYDE PARK CORNER,**

**COLOMBO-2.**

**T'Phone: 26482 & 21551**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the best Compliments*

*of*

# T. GUNARATNAM

**159/4, MALAY STREET,**
**COLOMBO - 2.**

---

சிவஸ்ரீ சி. ஐயம்பிள்ளைக்
குருக்கள் அவர்களின்
75ம் ஆண்டு
பூர்த்தி விழாவைக்
கொண்டாடும் முகமாக
எங்கள் ஸ்தாபனத்தாரின் மனமார்ந்த
வாழ்த்துக்கள்.

நவீன ரக
ஜவுளித் தினுசுகளும்
பாத அணிகளும்
சகாய விலையில் பெற்றுக்
கொள்ள நாடுங்கள்!

## வாகினி ஸ்டோர்ஸ்

150, மலே வீதி,
கொழும்பு - 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரத்தில் உயர்ந்த

முயல் ஜோடி மார்க் பலப்பிட்டி 100×100 சாரங்களையே

கேட்டு வாங்குங்கள்

# கல்யாணி டிரேடிங் கொம்பனி

123, இரண்டாம் குறுக்குத் தெரு,

கொழும்பு 11.

*With best compliments*

*of*

# DOLLAR CORPORATION

JAFFNA.

14, DAM STREET,
COLOMBO 12.

*Phone:* 31910


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

of

# RAJESWARI BRAHMIN HOTEL

69, NORRIS ROAD,

COLOMBO - 11.

T'phone: 25939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*of*

# S. P. Samy & Co.

**72, 4th Cross Street.**
**Colombo-11.**

**T'phone: 22640**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
வீரசைவம் விளங்கிநின்றோங்குகவே!

230.92
AIY
ARI

ஈழவளநாடு
வீரசைவ குருமகா சந்நிதானம்
கீரிமலை ஸ்ரீ இரேணுகாச்சிரம

மகாகுரு
# சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள்
(கைலாச தேசிகர்) அவர்களின்

75-ஆம் ஆண்டு பூர்த்தி
# வைர விழா மலர்

தொகுப்பு:
வ. குமாரசாமி
காங்கேசன்துறை.

10-4-1977.

107694

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் துதி

அப்பனை நந்தியை ஆரா அமுதனை
ஒப்பிலி வள்ளலை உள்ளி முதல்வனை
எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்தினல்
அப்பரி சீசன் அருள் பெறலாமே.

கண்ணுல் காண்பது உன் காட்சி
கையால் தொழில் பண்ணல் பூசை
பகர்வது மந்திரம் மண்ணேடு
ஐந்தும் வழங்குயிர் யாவும்
அண்ணலே உன் அருள் வடிவாகுமே.

அகர முதல் எழுத்தெல்லாம் ஆதி
பகவான் முதற்றே உலகு
— குறள்

உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்வது, எப்படி என்று கேட்கலாம். வாயால் பேசும் மொழியை எளிதாகக் கற்றுத் தருவதுபோல, உள்ளத்தின் மொழியை யாரால் கற்றுத்தர இயலும்? பக்தன் அதாவது கடவுளிடம் உண்மையாக பற்றுக்கொண்ட ஒருவனே அந்த மொழியை அறிவான். அவன் மட்டுமே அதைக் கற்பிக்க முடியும்.

— மகாத்மா காந்தியடிகளின் அமுத வாக்கு

# தெய்வீக வாழ்க்கை

இந்த உலகம் மிக நல்லது. இதில் எத்தனை தரமும் பிறக்கலாம். சுத்தமாயிருந்தால் ஒன்றுக்கும் பயப்பட வேண்டியதில்லை. முறையாகச் சீவியம் செய்யலாம். கலியாணம் முடித்துத் தெய்வங்களாக வாழ்ந்து ஒரு பிள்ளை இரண்டு பிள்ளைகளைப் பெற்றுச் சுகமாகச் சீவியம் நடத்தலாம். அல்லது சிலர் கலியாணமின்றியும் வாழலாம்.

ஒவ்வொருவரும் அன்றன்று செய்யவேண்டியவைகளைக் கிரமமாகச் செய்யவேண்டும். நாளைக்கு என்ன நடப்பது என்பது ஒருவருக்கும் தெரியாது. அதை அறியவேண்டுமென்று கவலைப்பட வேண்டியதில்லை. சுத்தமாய்க் குளித்து, சுத்த உடை உடுத்து, ஒழுங்காய்ச் சாப்பிட்டு, அந்தி சந்தி கடவுளை வழிபட்டுச் சீவியம் நடத்தினல் கடவுள் காப்பாற்றி வருவார். என்னென்ன செய்ய வேண்டுமென்பதை அவர் எந்நேரமும் சொல்லித் தந்து கொண்டிருப்பார். அவர் எங்களுடனே எப்போதும் இருக்கிறுர். அவருக்குத் தெரியாமல் யார் தான் என்ன செய்ய முடியும்?

— எங்கள் யோகசுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் முகம்



வீரசைவ மதம் அனாதிகாலந் தொடங்கி ஈழவள நாட்டின் பல பாகங்களிலும், பாரத நாட்டின் பல மாநிலங்களிலும் மிகச் சிறப்புற்றோங்கியதெனச் சரித்திர வாயிலாகவும் புராணங்கள் வாயிலாகவும் அறியக் கூடியதாய் இருக்கின்றது. காலச் சூழலிலே எத்தனை எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. அக் காலத்திலே மிகுந்த சிறப்புடன் ஓங்கி வளர்ந்துகொண்டிருந்த வீரசைவம், இன்று சிறிது தளர்வடைந்து அருகி வருவது போலத் தோன்றுவதற்குக் காரணம் யாது? இம் மதபீடத்தைச் சார்ந்தவர்கள் பலர் இச் சமய வளர்ச்சிக்குப் போதிய கவனம் செலுத்தாது அயர்ந்திருப்பதே எனலாம். அந்த நிலை உடனடியாக மாறுதல் வேண்டும்.

இச் சமய வளர்ச்சியில் ஊக்கமுள்ள இளைஞர்கள் பலர் என்னிடம் வந்து, ஒரு வீரசைவ மாநாடு நடாத்துவதற்கும் இச் சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்கும், சிவஸ்ரீ சி. ஐயம்பிள்ளைக் குருக்களின் 75-வது ஆண்டு நிறைவு வைர விழாவினைக் கொண்டாடுவதற்கும் உதவியளிக்குமாறு என்னை வேண்டிக்கொண்டார்கள். எனவே, இம் மத வளர்ச்சியில் இம் மதபீடத்தைச் சார்ந்த பலர் ஊக்கங் கொள்ளாமலிருப்பதுபற்றி அவர்களுடன் கலந்துரையாடி, இளைஞர்களின் புனித நோக்கத்தைத் தட்டிக் கழிக்க முடியாமல், அவர்களுக்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்வதற்கு இணங்கிக்கொண்டேன்.

வைரவிழா நாயகராகிய சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்கள் நெடுங்காலமாக இச் சமய வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டு, தனித்து நின்று அயராது உழைத்து, சிவப்பணி செய்து வருகின்றார்கள். அவர்கள் புரிந்துவரும் புனித சேவை எம் மக்களின் ஆத்மீக வளர்ச்சிக்கு இன்றியமையாததொன்றாக விளங்குகின்றது. அவர்களின் சேவை நலத்தினை நான் நன்கு அறிவேன். அவர்களின் சிவப் பணியினைப் பாராட்டிப் பல்லாண்டு கூறுவதற்காக நடாத்தப்பெறும் இப் புனித விழாவிலே பங்குகொள்ளக் கிடைத்தமைக்காகப் பெருமையும் கொள்கின்றேன்.

பாரத நாட்டிலே, உப சனாதிபதியாக விளங்கும் மேதகு B. D. ஜெட்டி, திருமுருக கிருபானந்தவாரியார், தவத்திரு குன்றக்குடி அடிகளார், கும்பகோணம் ஸ்ரீ சாரங்க தேசிகேந்திர சுவாமிகள் போன்றோர் இச் சமய வளர்ச்சிக்காக அயராது உழைத்து வருகின்றார்கள்.

கூடிய விரைவிலே, இச் சமய வளர்ச்சியின் பொருட்டு இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும், இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் கல்விமான்களையும், பேரறிஞர்களையும், குருபீடத்தைச் சேர்ந்தவர்கள் கூட்டி மாநாடு ஒன்றினைச் சிறப்புற நடாத்துவதற்கு இப்பொழுது தொடங்கியே ஆயத்தஞ் செய்துகொள்ளுதல் வேண்டும் என்பதை யாம் எடுத்துக் கூறவேண்டுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்களவர்கள்மீது சைவப் பெருமக்கள் கொண்டிருக்கும் பேரன்புக்கும் பெரு மதிப்புக்கும் இவ் வைர விழா ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது. இன்று வெளி வரும் வைர விழா மலரும் அத்தகையதேயாகும்.

இம் மலருக்கு, இந்தியாவிலும் இலங்கையிலும் வாழும் பேரறிஞர்களும், கல்வி மான்களும், சைவச் சான்றோர்களும் வழங்கியுள்ள ஆசியுரைகளையும் கட்டுரைகளையும் படித்துப் பார்க்குபோது இச் சமயத்தின் சீரிய சிறப்பினையும், குருக்களவர்களின் விழுமிய தொண்டுகளையும்பற்றிச் சைவ உலகம் நன்கு அறிந்துகொள்ளுதல் கூடும். சிவஸ்ரீ. ஐயம்பிள்ளைக் குருக்கள் மேலும் பல ஆண்டுகள் உடல்நலம்பெற்று வாழ்ந்து சைவப்பணி செய்வதற்கு அருளுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வழுத்துகின் றேன். வீரசைவம் வாழ்க.

சமாதான நீதவான்,
சிந்தனைச்சிற்பச்செல்வர்,

**ச. த. சின்னத்துரை**

தலைவர்,
வைர விழாச் சபை.

'லீலா இல்லம்'
62/1, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12,
21-3-1977.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைர விழாக்காணும் ஈழவளநாடு வீரசைவ குருமகா சந்நிதானம் கீரிமலை ஸ்ரீ இரேணு காச்சிரம மகாகுரு சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்கள் (கைலாச தேசிகர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைர விழாக் கொள்ளும் முக்கால் நூற்றுண்டு (75) ஆண்டுகளைக் கடந்த கீரிமலை ஸ்ரீ இரேணுகாச்சிரமம் முதுபெரும் ஈழவளநாடு மகாகுரு வீரசைவக் குரு மஹா சந்நிதானம் யாழ் வண்ணை நகர் ஐயனார் கோயிலடி வாசரும் கீரிமலை ஸ்ரீ இரேணுகாச்சிரம ஸ்தாபகரும், கைலாச தேசிகர் எனப் புனித தீக்ஷாநாமத்தை அணைத்த சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

**யாழ். வண்ணைநகர், ஐயனார் கோவிலடி ஆகமப்பிரவீன சமாதான நீதிபதி, பிரதமகுரு பிரம்மஸ்ரீ பி. பா. பஞ்சாட்சரக் குருக்கள்**

எழுபத்தைந்து ஆண்டுகள் நிறை பூர்த்தியில் வைரப்பெருவிழாவைக் கொள்ளும் பண்புடையார், கைலாய தேசிகர் எனப் புனித தீக்ஷா நாமத்தைத் தன்னகத்தே கொண்ட ஈழத்தின் வீர சைவக்குரு மஹாசந்நிதியாம் சிவ ஸ்ரீ சி ஐயம்பிள்ளைக் குருக்களவர்களுக்கு முக்கால் நூருண்டு பூர்த்தி தின வைர விழா வைத்தாங்கி வரும் மலர்ப் பொய்கையிலுள்ள மலர்களுடன் என் மன மார்ந்த மலருரையொன்றினையும் மலரச் செய்யமனமுவந்துள்ளேன். ஏன் நானும் எனது மூதாதையோர்களும் அவரும் அவர் மூதாதையோர்களும் ஓரூர் ஓரிடத்தில் பிறந்து வளர்ந்து வந்தவர்களினாலன்றோ.

யாழ்ப்பாணக்கஸ்பாவில் வண்ணை நகர் ஐயனார் கோவிலடியில் குருக்கள் மடம் என்னும் பழம் பெருமகத்தில் வீர சைவமரபு வழியினரில் தோன்றிய குரு திலகமாய் விளங்குபவர் ஸ்ரீ ஐயம் பிள்ளைக் குருக்களவர்கள்.

> ''எப்போதும் இனியபிரான் இன்னருளால் அதிகரித்து மெய்ப்போத நெறிவந்த விதி முறைமை வழுவாமே அப்போதைக் கப்போது ஆர்வமிகு அன்பினராய் முப்போதும் அர்ச்சிப்பார் முதற்சைவராம் முனிவர்''

என்று சேக்கிழார் பெருமானால் புகழ்ந்து போற்றப் பெறும் பெருமையினையுடைய வீரசைவப் பெருமக்களின் பரம்பரையில் சிறந்தும், சிறந்த காயாரோரோகணக் குருக்கள் முதல் ஏழு எட்டுத் தலைமுறை (பழம் பெரும் தோம்புறுதி வம்சவழி) மரபில் தோன்றிய சிதம்பரப் பிள்ளைக் குருக்களின் அருந்தவப் புதல்வராவர். இவர் ஜனனமாகி இரண்டாம் வயதில் தனயனின் சிறப்பினைக் கண் குளிரக்காணாமலும் காதால் கேட்காமலும் சிவன் திருவடியையடைந்தார். அதிலிருந்து அவரின் மாமனார் வண்ணார் பண்ணை நகரில் ஒரு தமிழ்ப் பாடசாலையை அமைத்துக் கல்விபோதித்து வந்தவருமான சிதம்பரப்பிள்ளைக் குருக்களாவர். அன்னாரின் மேற்பார்வையில் கங்குல் பகலாக வளர்ந்து கல்விபயின்று வந்தார்.

சிறுபிராயத்திலிருந்தே அவரின் குணம், அமைதி இன்சொல் அடக்கம் தோற்றம், பொறுமை, உயர்பண்பு முதலிய ஏனைய அம்ங்கள் யாவும் அன்னாரின் பரம்பரைக் குருகுலமரபின் சிறப்பினை எடுத்தியம்புகின்றன.

சட்டம்பியார் பாடசாலையில் பிரபலம் வாய்ந்த அந்தணர் குலப்பிள்ளைகளும், பெருவேளாளகுலப் பிள்ளைகளும் கல்வி கற்றுவந்தனர். அப்போது இவர் தமது ஆரம்பத் தமிழ்க் கல்வியை இப் பாடசாலையில் கற்றுவந்தார். பின் உயர் கல்விக்காக ஆறுமுக நாவலர் பாடசாலையிலும் விசேட புலமை நிமித்தம் சுன்னாகம் குமாரசாமிப் புலவரிடமும் கைலாயபிள்ளையிடமும், கல்வி கற்றுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்க்கல்வித்துறையில் புலமையடைந்து சிறந்து விளங்கினூர்.

பின் வண்ணை ஐயனூர் கோயிலடியிலுள்ள பிரபல அத்தணர் குலத்தவரும் கல்வி கேள்விகளிலும் தனு கரண புவன போகங்களிலும் சிறந்து விளங்கிய நைஷ்டிகரும் ஆன்மார்த்த சிவ பூஜா துரந்தரருமாகிய பிரம்ம ஸ்ரீ மு பிச்சுக் குருக்களிடமும் அவரின் ஜேஷ்ட குமாரனும் பல மூர்த்திகளுக்குத் தியானங்களையும் அஷ்டோத்தர சத (108) அர்ச்சனை நாமாவழிகளையும் சேர்த்து தியாநார்ச்சனுகதம்பம் என்ற நூலை முதல் முதலில் சென்னையில் வெளியிட்டவரும் தர்க்கம், வியாகரணம் புராணம் பயன் ஆகியவைகளில் வித்துவத்தன்மையுடையவருமாகிய பிரம்மஸ்ரீ குமாரசாமிக் களிடமும் கிரந்தம், நாகரம் ஆகிய இரு மொழிகளைக் கற்றும், சுன்னுகம் சமஸ்கிருத பாடசாலை சிதம்பர சாஸ்திரிகளிடமும் பயின்று புலமையடைந்து விளங்கினூர். பின் ஆகம, வைதீகம், லௌகீகம், ஆகியதத்துவங்களையும் கிரியை முறைகளையும் எனது பாட்டனூர், பெரிய தந்தை ஆகியோரிடமும் கிரியா சாரமாகக் கற்றுணர்து ஆன்மார்த்தம், பரார்த்தமாகிய பூஜாகிரமம் கிரியாகிரமம் (2) வேள்வி (யாகம்) முதலியவைகளையும் ஆற்றும் புலமையுடையவரானூர். கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவமஹோற்சவங்கள் பிராயச்சித்தம் வரை தீக்ஷாவகையிலும் மக்களது ஆத்ம ஈடேற்றத்திற்கு வேண்டிய இருவகைச் சிறப்புக்கிரியைகளிலும் சிறப்புற்றவருமன்றி வீரசைவ நித்திய ஆன்மார்த்த பூஜையிலும் முப்போதும் தவருது ஒழுகும் நைஷ்டிகருமாவர்.

இவர் வீரசைவ தத்துவத்தை அறிந்தும் தெரிந்து தெளிந்துகொள்வதற்காகப் பல குருமார்களையும், வித்துவப் பிரவீனர்களையும் தேடியும் நாடியும் வீர சைவ நூல்கள் எங்கெங்குளதோ ஆங்காங்கு சென்றுவரும் சமயம் மட்டுவில் பண்டிதர் மகாலிங்கசிவம் அவர்களையும் கலைப்புலவர் அவர்களையும் சந்தித்து அளவளாவி ஆராய்ந்து அவர்களிடமுள்ள நூல்களையும் அவர்களால் இந்தியாவில் வீர சைவத்தின் அருமைபெருமைகளையும் குருபீடங்களையும் பீடாதிபதிகளையும் அவர்களின் முகவரிகளையும் அவர்கள் போதித்த உபதேச வாக்கியங்களையும் அறிந்து அவர்களுடன் தொடர்புகொண்டு வீரசைவ நெறிமுறையைக் கசடறக் கற்று விளங்குகின்ருர். இவர் எமக்கு மிக வேண்டியவர் பல கலை நுட்பங்களைப் பரிமாறிக்கொள்வதைக் கூருமருக்கமுடியவில்லை. இவ்வாருக மனதில் வீர சைவ நெகறிளையும் தத்துவங்களையும் பெருமைகளையும் கிரியாமுறைகளையும் அறிந்தும் தெரிந்தும்கொள்வதற்காகப் பெரும் ஆவலுற்றிருந்தகாலை விவாகம் நடக்கப் பின்னர் சட்டம்பியார் என்ற பெருமை மிக்க மாமனூர் சிதம்பரப்பிள்ளைக் குருக்களவர்களும் பூவுலக வாழ்கையை முடித்துக்கொண்டார்.

அவரின் சிவதருமோத்திரக் கிரியைகளையும் மோட்சதீபக் கிரியைகளையும் முறைதவருது தானே செய்யவேண்டிக் குருப்பட்டம் பெறுவதற்காக இந்தியா செல்வாரராயினூர்.

இந்தியாவில் வீர சைவ வீர சிம்மாசனுதிபதியாகிய சாரங்க தேசிகேந்திர மகாலிங்க சிவாச்சாரியாரவர்களிடம் வீர சைவக் கிரியா நெறிகளையும் ஒழுக்கங்களையும் அனுஷ்டானங்கள் பழக்கவழக்கங்களையும் மோட்சதீபக் கிரியைகளையும் தத்துவங்களையும் கற்றும் கேட்டும், பார்த்தும் தெரிந்து தெளிந்து சி.(றிதும்) ஐயம் பிழையாத ஐயம்பிள்ளைக் குருக்களாகக் குருப்பட்டம் பெற்றுவிளங்கினூர். ஈழந் திரும்பி மாமனூரின் ஆன்ம ஈடேற்றக் கிரியைகளைச் செவ்வனே செய்து வீர சைவ நெறிமுறையை தவருது மனை மக்கட் பெறு பேறுகளுடன் விளங்குவது மன்றித் தமிழ் கிரந்தம், தேவநாகரம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளைக் கற்றுணர்ந்த பேரறிஞருமானவர்.

ஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்களும் அவர் தம் சுற்றத்துடன் சக அபிமானியுமாகிய நானும் இந்திய க்ஷேத்திரங்களைத் தரிசிக்கச் சென்ற சமயம் இராமேஸ்வரம் சென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றேம். இங்கு எல்லா வகைக் குரு சந்நிதானங்கள், பீடாதிபதிகள், ஆச்சார்ய சுவாமிகளுக்கும் மடங்கள் உள்ளன. அதில் வீர சைவ லிங்காயதர்மடம், இரேணுகாசாரியர் மடமும் சிறப்புற்று விளங்குகின்றன. அம்மடங்கள் மிக வசதிபடைத்த மடங்களாக மிளிர்கின்தன. அங்குள்ள மடாதிபதிகள் ஆற்றல்மிக்க வீர சைவ நெறியின் பழங்களாக விளங்குகின்றனர். அங்கு சென்றபொழுது நம் குருக்களுக்கு நடந்த கௌரவமும், சிறப்பும் மரியாதைகளையும் இன்றும் மறக்கமுடியாமலிருக்கிறது. இப்புனிதமான வீர சைவ மடங்களையும் மடாதிபதிகளையும் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றேன். மைசூர், பெங்களூர், கர்நூல், அதோனி, தெலுங்கானு ஆகிய ஆந்திரப் பிரதேசம் முழுவதும் வீர சைவமாகவே விளங்குகின்றன.

கர்நூல். அதோனி ஓம் நகரில் பல அற்புதங்களைச் செய்தும் ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடின்றி அண்டிய அடியவர்களுக்கு இன்னல்களைப் போக்கி மனச்சாந்தியைக் கொடுத்தும் உலக மக்கள் உய்யும் பொருட்டு அருள்வாக்குகளை வழங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீ பகவான் நீலகண்ட தாத்தா அவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் அவரின் குருதேவரும் ஓர் கடும் வீர சைவ மரபினராவர். நான் இவரின் ஆத்ம பிரதம அபிமான சிஷ்யனுவேன் என்பதை உணர்த்தாமலிருக்க முடியவில்லை.

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பிய குருக்களவர்களுக்கு வண்ணார் பண்ணை மக்களாலும் மற்றும் பல ஊர்களைச்சேர்ந்த சிஷ்யப் பெருமக்களாலும் பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

பருத்தித்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு, தெல்லிப்பழை மயிலிட்டி, காங்கேசன்துறை, அளவெட்டி, மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி, கீரிமலை, சண்டிலிப்பாய், மருசுவில், புலோலி, உரும்பராய், யாழ்ப்பாணம், பூநகரி, வவுனியா ஆகிய ஊர்களிலுள்ள பெருமக்களின் பரம்பரைக் குருவாகவும் விளங்குகின்றார். இவ்வூர்களிலுள்ள குருமார்களும் கீரிமலை ஸ்ரீ இரேணுகாச்சிரம குருமகா சந்நிதானத்தை தங்கள் குருபீடமாகக்கொண்டுள்ளனர். ஆகம புராண இதிகாசங்கள் உபநிடதங்களிலுள்ள நுட்பக் கருத்துக்களையும், உண்மை முறைகளையும் உண்மையான முறையில் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதிலும் எடுத்துக்காட்டுவதிலும் நுண்ணறிவுள்ளவராவர். ஈழத்தில் புகழ்பெற்ற முருக ஸ்தலமான நல்லூர்க் கந்தசாமி கோயிலின் தேர்த் திருவிழாவுக்கு முதல் நாளும் மறுநாளும் இவரையும் ஏனைய வீர சைவக் குருமார்களையும் அழைத்துப் பட்டுக் காளாஞ்சி முதலிய கௌரவங்களை அறங்காவலர் வளங்கிவருகின்றார்கள். இக் குருக்கள்மார்களில் இவரே முதல்வராகப் போற்றப்பட்டுள்ளார்.

முறைதவறியவர்கள் எவ்வகையினராயினும் அவர்களுக்குக் கண்டனம் தெரிவித்து அவர்களின் பிழைகளைக் கண்டித்து அவர்களின் செயலுக்கு மறுப்புத் தெரிவித்து உண்மை வழிமுறைகளை எழுதுவதிலும் வெற்றி கண்டு பெரும்பெயரை உலகமறியத் தட்டிக்கொண்டவர்.

இப்படியான அருமைபெருமைகளையுடையவருக்கு என் ஊர்ப் பிறந்த பெருந்தகைக்கு ஆசியுரை உரைப்பதையிட்டு எத்தனை பெரு மகிழ்ச்சியடைசின்றேன் தெரியுமா? மிக மிக அளப்பறிய மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்படிப் பெருமைக்குரியவரும் மக்கள்வகைப் பெருமக்களினதும் எனது அபிமானத்துக்குமான உயர் சிவஸ்ரீ குருக்களவர்கள் இன்னும் கால்தாண்டி நூற்றுண்டுகளுக்கு மேலாகச் சகல சிறப்புக்களுடன் வாழ்ந்து சதசம்வற்சரம் தீர்க்கமாயும் தீர்க்காயுளுடன் வீர சைவத்திற்கும் வீர சைவ அபிமானிகளுக்கும் வீர சைவப் பரம்பரையினர்களுக்கும் வழிகாட்டும் குருமகா சந்நிதானமாய் விளங்கி வாழ எல்லாம் வல்ல 'எம்பெருமானார் இரேணுகாசாரியர் அவர்களையும் பிறந்த இடமாகிய ஐயனார் கோவிலடியில் ஆலயம் கொண்டு பழம்பெரும் பெருமையுடனும் குருக்களவர்களது மூதாதையோர்களினது நித்திய பூஜா வழிபாட்டு மூர்த்தியாகிய ஐயனாரையும் (பூரண புட்கலாசமேத ஸ்ரீ அரிகர புத்திரன்) ஏத்தி இறைஞ்சி இறைஞ்சும் இவ்வாசியுரையை வாழ்க வாழ்க என்று திரிகரணசுத்தியுடன் வாழ்த்தி ஆசி வளங்கிப் பெருமையடைகின்றேன். வாழ்க வாழ்க குருமகாசந்நிதானம். பரவுக பாரெங்கும் வீர சைவம் சுபம்பவது: ௐ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WORK IS WORSHIP

## புரியும் தொழில் பூசனை

### வாழ்க்கையையே வழிபாடாக மாற்றும் முறை

1. எந்தச் செயலையும் தொடங்குவதற்குமுன், நீங்கள் செய்யப்போகும் காரியம் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்த பரம் பொருளின் வழிபாடாக இருக்குமென்று எண்ணிக்கொண்டு, செயல் புரியத் தொடங்குங்கள்.

2. அக் காரியத்தைச் செய்துகொண்டு போகையில், அதனை எல்லாம் வல்ல இறைவனே உங்களைக் கருவியாகக் கொண்டு நடத்துவதாக இடைக்கிடை நினைத்துக்கொள்ளுங்கள். இறைவனின் சக்தி உங்கள் மூலம் பெருகி இயங்குவதாக எண்ணுங்கள். இந்தப் பாவனையுடன் அச் செயலைச் செய்து முடியுங்கள்.

3. செயல் முடிந்ததும் அதனை இறைவனுக்கு அர்ப்பணமாகச் சமர்ப்பித்து விடுங்கள்.

இங்ஙனம் ஒவ்வொரு செயலும் இறைவனது வழிபாடாக மாற்றப்படலாம். எனவே சரியான பாவனையே, மனோநிலையே, தற்காலத்தில் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய சாதனையாகும். அவன் செய்ய வேண்டிய கருமங்களைச் செய்யாமல் விட முடியாது. உயிர்வாழ்வதற்கே அவன் உழைக்க வேண்டியிருக்கிறது. எந்தச் சூழ்நிலையிலிருந்தாலும் அவன் முதற்கூறிய பாவனையை ஏற்படுத்திக் கொள்வானாக. மீண்டும் மீண்டும் அங்ஙனம் கற்பனை செய்வதன் மூலம் இந்தப் பாவனையை நிரந்தரமாகப் பெறுவானாக. அப்போது அவன் வாழ்க்கையே தொடர்ச்சியான இறைவழிபாடாக மாறிவிடும். இறைவன் அவனை வைத்துள்ள எந்த நிலையிலும் வாழ்ந்து கொண்டு, அவனை இடைவிடாத சாதனை செய்பவனுவான். குறுகிய காலத்தில் உலகமே அவனுக்கு மாற்றமடைந்ததாகக் காணப்படும். எல்லாவிடத்திலும் இறைவனுறைவதை அவன் எப்போதும் உணர்வான்.

'இரவும் பகலும் இதயத் துணையே
பரவும் அறிவும் பணியுந் தருவாய்
புரியுந் தொழில் யாவையும் பூசனையாய்
புரியும் படிசெய் பரிபூரணனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீரசைவ மூலாசாரியர்களின் முதல்வர் பிரசன்னயுகாதி
ஜகத்குரு ஸ்ரீ ரேணுக சிவாசாரியர்
(இவ்விக்கிரகம் இரம்பாபுரி வீர சிம்மாசனத்தால் கீரிமலை
ஸ்ரீ இரேணுகாச்சிரமத்திற்கு அன்பளிப்புச்செய்யப்பட்டது.)



வீர சைவ கோத்திர புருஷர்களின் முதல்வர்
சிவசிருட்டிப் பிரதம ஜாதர்
ஸ்ரீ வீரபத்திர குருசுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவேற்புக் கீதம்

வருக வருகவே — ஞானக்
குருவே வருகவே

வாழ்க வாழ்கவே — வீர
சைவம் வாழவே — வருக
அருள் பெருக இருள் விலக
திருமலியும் குருமணியே — வருக

ராஜராஜ ஜகத்குருவாம்
ரேணுக சிவாச்சார்ய
வீரசைவ குருமரபு
வளங்கவந்த ராஜகுரு — வருக

எழுபத்தைந்து ஆண்டு நிறை
வெய்திவரும் ஞானகுரு
தொழுமடியார் பவந்தீர்க்கத்
துலங்கிவரும் வீரகுரு — வருக

கும்பகோண ஞானபீடக்
குருமடத்தில் பட்டம்பெற்ற
எங்கள் வீர சைவகுரு
இனிய ஐயம்பிள்ளைக்குரு — வருக

காங்கேசன் துறை யுறையும்
கவின் வீர சைவர்களின்
பாங்கான உள்ளம் நிறை
பரஞ்சுடரே பெருங் குருவே — வருக

உலகம் வாழவே — ஞானம்
ஓங்கி வளரவே — வீர
பத்ர குருபரன் — அருள்
பரவி நிற்கவே — வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சிவஸ்ரீ சி. ஐயம்பிள்ளைக்குருக்கள்

அவர்களின் வைரவிழாவின் நினைவாகக் கூறிய

# வாழ்த்துப்பா

## 'உள்ளந் தெளிவாகுமே'

### வெண்பா

ஆர்வீர சைவ அருளொளியை அன்பருக்கு
ஏர்சேர ஏற்றிவரு மெங்குருவை—சேர், ஐயம்
பிள்ளைக் குருக்களவர் பேசினுல் தீர்ந்துனது
உள்ளந் தெளிவாகு மே.

பொல்லா வினைபோக்கப் புண்ணியத்தின் நல்லுருவாய்
வல்ல குருவாக வந்தவன்ருன்—நல்ல
அருள்சுரக்க ரேணுகமா மாச்சிரமம் வைகும்
இருளிலாஐ யம்பிள்ளை யே.

### விருத்தம்

அருமறை யமுதே! எங்கள் அருட்குரு வாகிவந்த
இருளிலா மணியே! ஐயம் பிள்ளையே! ரேணுகத்தில்
ஒருவுப தேச மாற்றிக் குவலயம் போற்றத், தெய்வப்
பெரு நிதி யாகிவைகும் பெரியரே! நீடு வாழி.

அருள்பெருக வைரவிழா அளிக்கின்ற அடியார்கள்
இருளகல இனிதமர்ந்து இன்னருளை யென்றென்றும்
பெருகமுத வாக்குடனே பீடுபெற நல்கி வரும்
குருமணியே! பல்லாண்டு குவலயத்தில் வாழுகவே.

அற்புதத் தமிழினேடு அருமறை நூல்களெல்லாம்
பொற்புற வறிந்து தேர்ந்த புனிதனே! வீரசைவ
நற்பெருங் குருவே! ஐயம் பிள்ளையே! நவிலும்ஞான
சிற்பரனருளினுலே சிறந்து பல்லாண்டு வாழி.

காங்கேசன்துறை,
20-3-77.

மாவையாதீனம் செஞ்சொற் புலவர்,
மா. குமாரசாமி
தலைமைப் பேராசான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அளவையூர், அருட்கவி, சீ. விநாசித்தம்பி அவர்கள்
வழங்கிய

# வாழ்த்திசை.

## "தவசித்தி யோங்கி வாழ்க!"

ஆசிரியப்பா

திருவளர் இலங்கையிற் சிவப் பயிர் வளர்த்த
குருமணிக் கிரியே, குளிர்நகு லாசலம்
என்னும் பதியில் இரேணுகாச் சிரமம்
தன்னி லமர்ந்து சைவ நெறியைச்
சிந்தை குளிர்ந்து சீலமாய் உணர்த்தும்
சுந்தரக் குருவே தூயவர் பேணும்
ஐயம் பிள்ளையாம் அன்புத் திலகமே
மக்கள் பேண, மனமுடல் காயம்
மிக்க பணியாய் விருப்புடன் புகட்டும்
மார்க்கம் பிடித்த வள்ளல் கருணை
சேர்க்கும் செபமும், சிவாலய பூசையும்,
வேத வாகமம் மேவும் புராணம்
ஓதுதத் துவமும், உயிர் பதிபாசத்
தொடர்பும் விடுதலைச் சுவர்க்கப் பாதையும்
கடமை பூணும் கடவுட் டன்மையும்,
ஐந்தெழுத் தமைந்த அடக்கமும் அவற்றைச்
சிந்தையிற் காணும் செவ்விய யோகமும்,
அக்கைவெண் ணீற்றின் அரும்பெரு மகிமையும்
தக்க வழியிற் றவம்புரி தன்மையும்
ஈசன் சேவடி இணைபெறு வகையும்
நேச உளத்தால் நிதமெமக் கருளிய
வீரா கமநூல் விகிர்தா, கற்றோர்
பாராட் டுரைக்கும் பண்புத் தருவே,
எங்குரு நாதா, எழுபத் தைந்து
தங்கிய வயது சார்ந்தும் வாலிப
சிங்கமாய் விளங்கும் செல்வா, சைவச்
சங்கத் தலைவனுய்த் தழுவு கற்பகம் போல்
சிவன் சக்தி பூத்த திருவருள் பொங்கும்
தவசித்தி யோங்கி வாழ்க வாழியவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"கலைமகள்" ஆசிரியர்

# கி. வா. ஜகந்நாதன் அவர்கள்

## வாழ்த்துப்பா

ஈழவள நாட்டிலே கீரிமலை எனுந் தலத்தில்
இலகும் பீடம்

வாழையடி வாழையென வரும்ரேணு காச்சிரமம்
வளர்தல் கேட்டோம்;

ஏழுலகும் போற்றுகின்ற வீரசைவ மதம் வளர்க்கும்
ஏற்றம் பெற்று

வாழுமருட் குரவர்தம் வரிசையிலே வந்திலகும்
மாட்சி பெற்றான்

ஐயம்பிள் ளைக்குருக்கள் எனும்பேரான், சிவஞானம்
அமைந்த நல்லோன்;

மெய்யன்பர் கைலாச தேசிகரென் றேபோற்ற
விளங்கும் செம்மல்;

பொய்யறியாப் பேராளன் எழுபானே ரைந்தாண்டு
பூர்த்தி பெற்றுச்

செய்யும்நல் வைரவிழா ஏற்கின்றான்; இறையருளால்
சிறந்து வாழி.

கி. வா. ஜகந்நாதன்

கலைமகள் ஆசிரியர்
தமிழ்நாடு,
18-3-77.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குப்பகோணம் பெரியமடம் ஸ்ரீ வீரபத்திர
ஸ்தாபனாசாரிய ஸ்ரீ வீரசிம்மாசன பீடாதிபதி
ஜகத்குரு சாரங்கதேசிகேந்திர சுவாமிகள்
(கைலாச தேசிகரின் குருநாதர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2bbபூ.7
AIY
AR

உ
சிவமயம்

கும்பகோணம்

# ஸ்ரீ ஜகத்குரு சாந்ததேவ சாரங்க தேசிகேந்திர சுவாமிகள்

மகா சந்நிதானம் வழங்கிய

# அருளாசியுரை

**குருலிங்க சங்கமம் வாழ்க!**

வைர விழாக் காணும் ஈழவளநாட்டு வீரசைவப் பெருந்தகை கீரிமலை சிவத்திரு இரேணுகாச்சிரம குருநாதர், தவத்திரு கைலாசதேசிகர் (ஐயம்பிள்ளைக் குருக்கள்) அவர்களது வைரவிழா அழைப்பு அண்மையில் கைவரப் பெற்றேன். விழாவில் வந்து கலந்து வாழ்த்துரை வழங்க இயலாமைக்கு வருந்துகிறேன். 25.3.77-ல் இங்கு குருபூஜை விழா நடைபெற இருப்பது ஒரு காரணம். பிரயாணத்திற்குரிய ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்யமுடியாத, நாள் சுருக்கம் மற்றொரு காரணம்.

வைரவிழா நாயகர் ஈழவளநாட்டில் வீர சைவ. நெறி பரப்பிப் பல்லாண்டுகள் வாழ்ந்துவந்துள்ளார்கள் என்பதை அறியத்தொடங்கிய இந்நாளிலே நான் பெற்ற மகிழ்ச்சியை எழுத்தில் எழுதிக் காட்டமுடியாதவனுயிருக்கிறேன். அளவு குறிக்கப்படாத நெடுங்காலம், அளவிட்டுக் காட்டமுடியாத சிவஞானச் செல்வத்தைப்பெற்று, அச் செல்வத்தை மக்களுலகத்திற்கு வாரி வழங்கும் வள்ளலாய் இகவுலகும் பரவுலகும் புகழ்ந்தேத்தும் இணையற்ற பெருவாழ்வு பெற இதயங்கனிந்து வாழ்த்துகிறேன்.

அருட் செல்வம் செல்வத்துள் செல்வம்
பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுள.

இது வள்ளுவர் வாக்கு. இழிந்தவர் கைவசம் பொருட்செல்வம் குவிந்து கிடப்பதைப் பார்க்கிறுர் வள்ளுவர். பொருட்செல்வத்தை இகழ்ந்து ஒதுக்கமுடியாதென்பதை உணர்கிறுர். ஆனதால், அதை உரிமையாக்கிக்கொண்டிருப்பவனுக்கு நல்லுணர்வூட்டும்பொருட்டு, செல்வத்துள் செல்வம் ஒன்றிருக்கிறது. அதுதான் அருட்செல்வம். அந்தச் செல்வத்தை அனைவரும் பெறவேண்டும். பெற்றவர், கருணையுள்ளத்தால் மக்களுலகத்திற்கு, வாரி வழங்குதல் வேண்டும் என்பதை வலியுறுத்துகிறுர்.

ஆக, அருட்செல்வத்தை வாரிவழங்க, இப்பூவுலகத்தே தோன்றியவர்கள்தான் மதத் தலைவர்கள். மதங்கள், சமயங்கள், மார்க்கங்கள் என்றும் அழிவற்ற செல்வத்தை மக்களினத்துக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கவே, அருளாளர்களும், மத நெறியாளர்களும் பல்வகையாகத் தோன்றினுர்களென்பதை, மெய்ஞ்ஞானிகள் மட்டுமல்லாமல் விஞ்ஞானிகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நற்காலம் விரைந்து வந்துகொண்டிருக்கிறது.

இவை ஒருபுறம் நிற்க, மதத் தலைவர்களின் போட்டியும், பொருமையும் பல்வேறு மதத் தலைவர்களையும், பல்வேறு மத சமயங்களையும் தோற்றுவித்து, கடவுள் நம்பிக்கைக்கே உலைவைத்துவிட்டது; அழித்துவிட்டது என்பதாகப் பேசி, பொறுப்பற்ற மகிழ்ச்சி அடைவோரும் உளர்!

கடவுள் நம்பிக்கையில் சந்தேகம் தோன்றுவதும், விவாதிக்கப்பெறுவதும் கடவுள் நம்பிக்கை வளர்வதற்குரிய இயற்கைப்பாதை! ஆத்திகம் சிறப்பதற்கு நாத்திகமே பெருந்துணை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
107674

பல எண்ணிக்கையில் மதங்களும், மதத் தலைவர்களும் தோன்றியிருப்பது மனித நல்வாழ்வுக்கே! மத சமயச் சண்டைகள் நேர்ந்து, அழிவுகள் நேர்ந்துள்ளதை வரலாற்று ரீதியாக அறியமுடிகிறது. எனினும் நன்மையிலோ, தீமையிலோ அழிவுகள் நேருவது இயற்கைதான். நன்மை கருதி ஏற்படுகிற அழிவுகள் மங்கலச் சிறப்பாகவும், தியாகச் செயலாகவும் கருதப்பட்டு வந்திருக்கின்றன.

பல்வேறு பழக்கவழக்கமுடைய மக்களைப் பல்வேறு குணபாவங்கொண்ட மக்களை ஒரே கோட்டைக்குள் அடைக்கக்கூடாது! அடைக்கவும் முடியாது! எல்லா மதத் தலைவர்களுமே தெய்வ நம்பிக்கைக் கோட்டைக்குளேதான், மக்களைக் குடிபுகச் செய்திருக்கிறார்கள்.

மார்க்கம் வெவ்வேறாயினும் மக்கள் அனைவரும் கடவுள் நம்பிக்கையுடையவர்களாக வாழத் தொடங்கினார்கள். இந்தக் காலந்தான் கலாச்சாரமும் அகநாகரிகமும், புறநாகரிகமும் முளைவிடத் தொடங்கிய காலம்.

ஆக, மதத் தலைவர்களின் தோற்றமும், மதங்களின் தோற்றமும், மனித சமுதாயத்திற்கு எத்தகைய மகத்தான பணி புரிந்திருக்கின்றனவென்பதை உலகத்தவர் பாராட்டி இருக்கிறார்கள்.

இன்றைய நிலையில், வைரவிழா நாயகர் கைலாச தேசிகர் (ஐயம்பிள்ளைக் குருக்கள்) ஈழவளநாட்டில் வீர சைவ நெறியைப் பாதுகாத்தும், வளர்த்தும் வந்திருக்கிறார்கள். வீர சைவப் பெருநெறி பழமையினும் பழமையானது. புதுமையினும் புதுமையானது. எதிர் காலத்தில் இலிங்காயத வாழ்வில் மடைதிறந்த வெள்ளம்போல் மனித சமுதாயம் வந்து கலந்துகொள்ளப்போகிறது. இலிங்காயத சித்தபுருஷர்கள் வருகையை எதிர்பார்த்துத் தவம்புரிவதே நமது கடமையாகக் கருதுகிறேன். ஆங்காங்குள்ள வீரசைவ மடாலயங்களைப் புனிதப்படுத்துவதும் கற்றறிந்த, செல்வத்துட் செல்வம் படைத்த, செல்வர்களின் பணியாக அமையுமென்று நம்புகின்றேன்.

வாய்மையும், தூய்மையும், நல்லொழுக்கமும், பண்பாடும், தெய்வ சிந்தனையும் நிறைந்த மக்களுலகத்தை ஆட்சிபுரிந்து நல்வாழ்வளிப்பது, ஆளுவோர்க்கு எளிது. மேற்காணும் சிறப்பு அம்சங்கள் ஆளுவோரிடத்தில் அமையாதுபோனால், ஆளப்படும் மக்களுக்கு நல்வாழ்வு அமைவது அரிது.

நாம் வாழ்கின்ற புண்ணியபூமி வாய்மை, தூய்மை, நல்லொழுக்கம், பண்பாடு, தெய்வ சிந்தனை இவைகளின் பிறப்பிடம். இந்த மண்ணிலே மத சமய உணர்வுகள் வளர்க்கப்படாவிட்டால், நீதியும் நியாயமும் மதிப்பற்றனவாகிவிடும். மக்கள் வாழ்வு மாக்கள் வாழ்வாக மாறும்.

ஆகையால் செல்வத்துட் செல்வம் படைத்த அறக்கருணையாளர்கள் மத சமய வளர்ச்சிக்கு இயன்ற வகையெல்லாம் துணைநிற்கவேண்டும். மத சமய நெறிகளைக் காப்பாற்றுகிறவர்கள், மக்கள் உள்ளத்தைச் செந்நெறிப்படுத்துவார்கள். செந்நெறிப்பட்ட மக்களை, ஆட்சியாளர் சிறப்பாக நல்வாழ்வுக்கு அழைத்துச்செல்ல இயலும். மக்களின் நல்வாழ்வே, மாட்சிமைபெற்ற ஆட்சியாக மலரும். வீரசைவராகிய நாம் "மக்கள் தொண்டே மகேஸ்வரன் தொண்டு என்று" மகிழலாம்.

வைரவிழாச் சபைச் செயலாளர் வ. குமாரசாமிக்கும், மற்றும் நிர்வாகக் குழுவினர்க்கும், காப்பாளர் குழுவினர்க்கும், ஈழவளநாட்டு வீர சைவ சமுதாயத்துக்கும், ஏனைய மக்கள் சமுதாயத்துக்கும் இறைவன் திருவருள் பாலிப்பானாகவென்று வாழ்த்தி நிறைவுபெறுகிறேன்.

ஜகத்குரு சாந்ததேவ சாரங்கதேசிகேந்திர சுவாமிகள்

கும்பகோணம்,
தஞ்சாவூர் மாவட்டம்,
தமிழ்நாடு, 14-3-77.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருப்பனந்தாள்,
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்களின்
(அதிபர், ஸ்ரீ காசிமடம்)

# அருளாசியுரை.

"முக்கோடி வாணளும் முயன்றுடைய பெருந்தவமும், எக்கோடியாராலும் வெலப்படாய் என்று இசையும்" பெற்ற இராவணேஸ்வரன் சங்கரன் கொடுத்த வாழ் உடையவன்; உமையம்மையின் தணியாத ஊடல் நணியுமாறு அருவியங்குன்றம் எடுத்த ஆன்ற சிவபக்தன், நாவாரச் சாமம்பாடித் தேவாரப் புகழ்படைத்தவன். அவன் வழியிற் பூத்த இலங்கை வீரசைவம் சிவஸ்ரீ. சி. ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்களால் நல்வளர்ச்சி எய்துகிறது. இத்தகு சிவப்பணி புரியும் நல்லன்பருக்கு வைரவிழா நடைபெறுவதறிந்து மகிழ்ச்சி. அவர்களின் பக்தித்திறனும் சிவநிலைப் பணிகளும் பலரும் உணர்ந்து பின்பற்றத் தக்கனவாகும். அவர் நீடினிது வாழ்ந்து வீர சைவம் செழிக்கச் சலியாதுழைக்கும் நல் வலிமையுடன் பொலியவும் அவர்க்கு உறுதுணையாய் விளங்கும் அன்பர்களின் நலங்களும் வளங்களும் நனி தழைக்கவும் செய்திலதிபன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

ஸ்ரீ காசிமடம்,
திருப்பனந்தாள்,
தமிழ்நாடு,
10-3-77.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள்
குருமகா சந்நிதானம் அவர்களின்

# அருளாசியுரை.

இறைவன் மானுடச் சட்டை தாங்கி வந்து காட்சி தந்து ஞானோபதேசஞ்செய்து தீட்சைகளினாலே பாசக்கட்டினை அழித்து ஆன்மா முத்தியடைய வழிகாட்டுபவர் என்பது சைவ சித்தாந்தம் கூறும் உண்மை. தற்போது எழுபத்தைந்தாவது ஆண்டு பூர்த்தியடைந்தும், மக்களுக்கு நல்வழி காட்டிவரும் சிவஸ்ரீ. சி. ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்களுக்கு வைரவிழா எடுத்து அவர்களைக் கௌரவிக்கும் விழாச் சபையார், வைரவிழா எடுப்பதற்கு முன்வந்தமை பாராட்டிப் போற்றக்கூடிய பெரும் பணியாகும்.

குருக்கள் அவர்கள் இன்னும் பன்னெடுங்காலம் குருத்தொண்டு புரிந்து, மக்கள் நல்வழியில் செல்ல வழிவகுத்துத் தொண்டாற்ற வேண்டும் என ஞானசம்பந்தப் பெருமான் திருவடிகளை வழுத்தி நல்லாசி கூறுகின்றோம்.

வாழ்க குருக்கள்! வளர்க அவர்கள் தொண்டு!!

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய ஸ்வாமிகள்.

ஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர்,
1-3-77.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூலோகத்திலுள்ள பஞ்சலிங்கங்களின் நின்றும்
வீர சைவ மூலாசாரியர்களாகிய ஸ்ரீ இரேணுகாதி
பஞ்சாசாரியர்கள் தோன்றும் அருண்மிகு
அற்புதக்காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அருள் மிகு வேதாரணியசுவாமி தேவஸ்தானம் வரணி, கரணவாய் ஆதீன பரம்பரைத் தர்மகர்த்தா சபைக் கௌரவ செயலாளர் திருப்பெருந்திரு.

## கை. திருஞானசம்பந்த பண்டாரச் சந்நிதி

(சைவக் குருக்கள்) அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்பது சிவபுராணத்தில் வரும் சீரடியாகும். அவனென்பது சிவபரம் பொருள். அருளென்பது குருவருள். குருவருளாகிய திருவருட்டுணையின்றி இறைவனை வழிபட முடியாது. எனவே, குருவைப் போற்றிப் பணிய வேண்டிய தலையாய கடமை உடையேம் என்பது துணிபாம்.

இலங்கை வளநாட்டின் சிரஸ்தானமாக விளங்கும் யாழ்ப்பாண நகரின் வடபால், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்பும் ஒருங்கே அமையப் பெற்ற கீரிமலை என்னும் புனிதத் தலம் ஒன்று உள்ளது. ஆங்கு கண்ணுதலும் கண்டக்கறையும் கருந்தருளி மண்ணிடை மாக்கள் மலமகற்றக் குருவடிவு தாங்கப்பெற்று வீராகம நெறி நின்று ஒழுகிவரும் சிவஸ்ரீ சி. ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்கட்கு எழுபத்தைந்தாவதாண்டு நிறைவை வைர விழாவாகக் கொண்டாடச் சைவ அன்பர்கள் முன்வந்திருப்பது குருவைப் போற்றிப் பணிவதாகிய பெருநெறியெனப் பெருமகிழ்ச்சியடைகிறேன். மேலும், குருக்கள் அவர்களுக்குத் தீர்க்க ஆயுளும் அஷ்ட ஐசுவரியங்களும் மேன்மேலும் பெருக, தில்லைக் கூத்தன் திருவடியை வாழ்த்தி வணங்குகிறேன்.

வீரச் சைவ நெறி வாழ்க, மிகு சைவத்துறை விளங்குக.

கை. திருஞானசம்பந்தக் குருக்கள்

கரணவாய் தெற்கு,
கரவெட்டி,
20-3-77.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மாவை ஆதீனகர்த்தா, சிவாகம வித்யாபூஷணம்,

# பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களின்

# ஆசிச் செய்தி

'ஈழநாடு' ஒருகால் 'சிவபுரம்' என்ற இலக்கணத்திற்கமைய இலங்கியதெனப் பல நூல்களிலிருந்தும் அறியப்படுகிறது. "வீரபத்திரருக்கு ஏற்ற பருவம், குணம், அழகு, கல்வி, கற்பு, நாகரிகம், ரிதவத்தன்மை முதலிய ஸ்திரீ லக்ஷணங்களெல்லாம் ஒருங்கே பொருந்திய யுவதி, எவ்வுலகம், எம்மரபு, எந்நிலையினளேனும்சரி, அவளைத் தேடிப் பார்த்து, நிச்சயித்துத் திருமண ஏற்பாடுகளும் செய்து வருவாயாக; திருமணத்தன்று யாமும் உமையும் தேவ கணங்களோடு பிரசன்னமாவோம்" — எனச் சிவபிரான் இந்திரனுக்குக் கட்டளை பிறப்பிக்கின்றார். இவ்வளவு தன்மைகளைக்கொண்ட ஒரு பெண் சுவர்க்க, மத்திய, பாதாள, உலகங்களில் காணப்பெறாது, ஈற்றில், இரவைப் பகலாக்கும் இரத்தினங்கள் நவலோகங்கள், மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், சஞ்சீவி மூலிகைகளைக் கொண்ட பிரதேசங்கள் இத்யாதிகளும் "சிவனையல்லாது நாம் வேறொன்றினை அறியோம்"— என நிட்டையில் வாழ்நாளைப்போக்கும் ரிஷி கூட்டத்தினரும் இன்னும் பல சிறப்புக்களோடும் கூடிய ஈழநாட்டிலே மேற்கூறிய தகைமைகளோடு வாழும் ஓர் பெண்ணைக் கண்டனர். இவள்தான் இளவரசி கயல்மணி. வீரபத்திரருக்கும் கயல்மணிக்கும் விவாகம் நடந்தேறியது. இவ்வாறு "சிவருத்திரர் கலிவெண்பா"விலே கூறப்படுகிறது.

இத்தனை சிறப்புப்பொருந்திய ஈழநாடு இன்று சோபையிழந்து காணப்படுவதற்குப் பல காரணங்களுண்டு. "உலோகாயதம்" என்னும் பிடிப்பும், மாயாவாதிகளினால் மனிதன் மயக்கப்படுவதும், தொடர்ந்து தனது இஷ்ட சித்திகளை எது தருகிறதோ அதுதான் "உண்மைப்பொருள்" எனும் நம்பிக்கையில் மனிதன் தடுமாறுவதும் முக்கிய காரணங்களாக அமைகின்றன. இவற்றை அடிப்படையாகக்கொண்டு வாழ்ந்தவர்களது கொள்கைக்கேற்றவாறு மதாசாரியர்களும் தமது போதனைகளை வகுத்தனர். செயல்களிலும் மாற்றத்தைப் புகுத்தினர். இதனால் வெகு வேகமாகத் "திருவருள்" குன்ற ஆரம்பமானது. ஏமாறுபவனும் ஏமாற்றுகிறவனும் மலிந்துவிடவே ஈழநாடும் சோபையிழந்தது. இருப்பினும் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சிலர் தத்தமது பழமையான சித்தாந்தங்களைச் சிதறவிடாது ஆற்றும் பெருந் தவப்பவனால் ஈழநாடு முற்றும் சோபையிழக்காது காக்கப்படுகிறது. அத்தகைய பெருந்தகையோர்களுள் சிவஸ்ரீ. சி. ஐயம்பிள்ளைக் குருக்களும் (கைலாசதேசிகர்) ஒருவராவர்.

அனாதிமூலத்துக்கப்பாலாய், மகா மூலத்திற்கு மூலமாய், இரண்டாவது பொருளில்லாததாய், மூலசுவாமியொருவனே எனும் தத்துவத்தோடு குருலிங்கபத்தியுடையவராய் மௌனமாகவிருந்து செயலாற்றிவரும் இக்குருக்களவர்கள் "கீரிமலை" எனப்படும் "நகுலேஸ்வரம்" எனும் புண்ணிய பகுதியில் தமது மடாலயத்தை ஸ்தாபித்து அருள் தொண்டாற்றி வருகிறார். "நகுலமுனிவரால் தோற்றுவிக்கப்பட்ட இத்தலம், பல்லாண்டுகளுக்கு முன்பதாகவே வீர சைவத்தோர்களாலும், ரிஷிகளாலும், மகான்களாலும் புனிதப்படுத்தப்பட்டது. யோகத்தையும் ஞானோபதேசங்களையும் உறுதுணையாகக் கொண்டு வாழ்ந்த இவர்கட்கு மெல்ல மெல்ல இடையூறுகள் செலுத்தப்பட்டதனால், இஞ்ஞானிகள் தத்தம் கடமைகளைச் செய்வதற்கான வாய்ப்புகளையும் இழக்க நேரிட்டதோடு இடம்விட்டுப்போகவும் நேர்ந்தது. காசியிலிருந்து இங்கு வந்து குடியேறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராக்ருதர்களுடைய தொல்லைகளும், இத்தொல்லைகளைத் திறம்படச் செயற்படுத்துவதற்காக நியமனம்பெற்ற காடையர்களது செயற்பாடுகளும் இத் துறவிகளையும் மெய்ப்பாடுடையோர்களையும் நகுலேஸ்வரத்திலிருந்து மறைப்பதற்குக் காரணமாயின. இதனால் இத் திருத்தலம் சோபையிழந்தது. இப்படியிழந்துபோய்க்கொண்டிருக்கும் தருணத்தில் சிவஸ்ரீ. சி. ஐயம்பிள்ளைக் குருக்கள் தனித்துநின்று " சிவனே துணை " என்ற தாரக மந்திரத்தோடு துணிந்து ஆற்றும் தர்மசேவைகளும், ஞானோபதேசங்களும் மிகவும் வரவேற்கத்தக்கது. கள்ளங்கபடமுள்ள நெஞ்சுடனும் ஊரையே ஏமாற்றும் சில மதாசாரியர்களை போலல்லாது. இக் குருக்களவர்கள் சிவலிங்கதாரண சிவவேடத்தினராய், பல மொழியையுணர்ந்ததனால் பல்வேறு பாஷைகளால் தயாரிக்கப்பட்ட புத்தகங்களோடும் ஊர்வலம் வருவதை யாரும் அறிவர். இக்குருக்களவர்கள் கீரிமலையை ஓர் தெய்வீக அருட்சக்தி நிறைந்த பிரதேசமாக்க வேண்டுமென்ற பேரார்வத்துடன் பாரத நாட்டிலிருந்து இங்கு எங்குமே காணப்பெறாத ஓர் "இரேணுகேஸ்வரரை" பல சிற்ப அம்சங்களைக் கொண்டதாய் வரவழைத்து, தமது ஆச்சிரமத்தில் ஸ்தாபித்துள்ளார்கள். இங்கு இப்பிரதிஷ்டையின் பின்னர் பல அற்புதங்கள் நிகழ்வதோடு இப்பிரதேசமும் துரிதமாக முன்னேறி வருவதையும் பலரும் அறிவர். இரேணுகர் பூமியில் அவதரிப்பதற்கும் காரணங்கள் பலவுண்டு. சிவபெருமானே இரேணுகரை அழைத்து "நீ பூமியிலே பிறவியெடு" என உத்தரம் கூறுகிறார்.

"சாதமி ருருகன் றனைக்க டந்தனை
யாதலி னிரேணுக வரவு தாங்குறு
மேதினி தனி லொரு பிறப்புமெவென
வோதின னடியவர்க் குதவி செய்பவன்."

"மறையோடு மறைமுடி மதமதாகுமென்
னிறையுமத் துலித நூனிலத்தி லியாவரு
மறிவுற மொழிதியென் னடியர் மேன்மையுங்
குறைவிலென் மேன்மையுங் கொடுத்தி யெங்கணும்."

(சித்தாந்த சிகாமணி)

தொல்லைகளும் கஷ்டங்களும் தோன்றும் போது அவதாரங்களும் நிகழும். பாவத்கீதையிலே கூட கிருஷ்ண பகவான் இதனைக் கூறுகிறார். அதேபோல நகுலேஸ்வரம் இன்று பெருந் தொல்லைகளுக்கும் கஷ்டங்களுக்கும் இடமாயிற்று. இவ்வேளையில் "இரேணுகேஸ்வரரும் லிங்கவடிவில் வந்துவிட்டார். கௌரீசங்கரைக் கொண்ட உருத்திராக்க மாலைகளையே திருடுமளவிற்கு இப்பிரதேசம் மாறும் வேளையில் நல்லவேளையாக எமது ஐயம்பிள்ளைக்குருக்கள் அவர்கள் தமது முயற்சிகளால் அப்படி நடைபெறாது இப்பிரதேசத்தைப் புனிதமாக்கி பிரஜைகளைச் சிவதொண்டர்களாக்க முயற்சி செய்கிறார். இவ்வேளையில் நாமெல்லோரும் இக்குருக்களவர்களுக்கு வேண்டிய பல உதவிகளை நல்கி உறுதுணை கொடுத்து, அவர்தம் தொண்டினைப் பூரணமாக நடாத்த அவர்களை ஆற்றுப்படுத்துவோமாக.

சிவாகம வித்யாபூஷணம்
பிரம்மஸ்ரீ. சு. து. ஷண்முகநாதக் குருக்கள்

மாவை ஆதீனம்,
மாவிட்டபுரம்,
14-3-77.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

சித்தாந்தபானு

சிவஸ்ரீ. சோ. சுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை.

ஈழநாட்டிலுள்ள நகுலேஸ்வர க்ஷேத்திரத்தில் ஸ்ரீ இரேணுக சிவாச்சாரிய மடத்துத் தலைவராய் அங்கலிங்க ஐக்கியமே இலட்சியமாகக்கொண்ட இலிங்காயத மதாநுட்டான சிரேட்ட குருவாய்ச் சிவாகம ஞான, சிவ ஞான சிவலிங்க பூசாதுரந்தரராய்த் தம்மையடைந்த மாணவ சிஷ்யகோடிகளுக்கு இலிங்காங்க சமரஸீபாவப் பிரகாச தீக்ஷாதானநைபுண்ணிய மகானுபாவராய்ச் சைவாலய நித்திய நைமித்திக பிரதிஷ்டா மகோற்சவாதிகளை மிகுந்த பக்தி சிரத்தாபூர்வகமாக நடாத்தும் சித்தர்ம கைங்கரியராய்ச் சர்வஜீவகோடிகளது இம்மை மறுமைப் பயன்களாகிய போகமோட்சப் பிரதமான காரியங்களைச் செய்வதே தமது வாழ்வின் இலட்சியமாகக்கொண்ட ஸ்ரீ கைலாசதேசிகரென்னும் தீட்சாநாமத்தையுடைய சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்கள் தமது வைர விழாக் கொண்டாட்டத்தை அன்பரும், அடியவர்களும் நடாத்த இனிது மகிழ்ந்து ஆசிபுரிந்து சுற்றமும் சூழலும் நன்கு அமைவுற விரும்பும் பேறுகள் அனைத்தும் பெற்று வாழ்க பல்லாண்டு!

வாழ்க ! வாழ்க !!

சித்தாந்தபானு சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள்

பிள்ளையார் கோவிலடி,
கோப்பாய்,
20-2-77.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ இரம்பாபுரி

வீரசிங்காசனாதிஸ்வர ஜகத்குரு
பிரசன்ன இரேணுக வீரகெங்காதர
சிவாசாரிய மஹா சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறைவன் துணை

காங்கேசன்துறை, தேசியப் பேரவை உறுப்பினர்

சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களின்

# ஆசியுரை

ஈழத்துப் பாடல்பெற்றுயர்ந்த தலங்களுள் நகுலேஸ்வரம் எனப்படும் கீரிமலையும் ஒன்று. அப்பதியிலே தோன்றி சைவமும், தமிழும், வளர்த்த பெருமகனார் ஸ்ரீ இரேணுகாச்சிரம மகாகுருவாய்த் திகழும் சிவஸ்ரீ சி. ஐயம்பிள்ளை குருக்கள் அவர்கள். இலௌகீக நோக்கு மேலீட்டால் சமய நெறி குன்றிவிடுமோ என மக்கள் அஞ்சும் இந்நாளில் வேதாகம நெறி வழுவாது போற்றி வளர்ப்பதிலும் சமய ஆசாரங்களையும், விழா முறைமைகளையும் பேணி வளர்ப்பதிலும் குருக்கள் அவர்கள் ஆற்றிய தொண்டினை உலகம் நன்கறியும். அன்னாரின் சமயத்தொண்டும் தமிழ்ப்பணியும் மேலும் வளரும்வகையில் அவர் நீடூழி வாழ இறைவன் அருளை வேண்டி வாழ்த்துகிறேன்.

சா. ஜே. வே. செல்வநாயகம்

16, அல்பிரட்ஹவுஸ் தோட்டம்,
கொழும்பு 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## இலங்கைப் பாராளுமன்ற, முன்னைநாள் மூதவைச் சபை உறுப்பினர் திரு. த. நீதிராசா அவர்கள் மனமுவந்தளித்த

# ஆசிச்செய்தி.

இப்பாரினில் தோன்றிய ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் செம்மையாகவும் புனிதமாகவும் அமையவேண்டுமெனில் அவர்கள் மெய்ச் சமய அறிவைப்பெற்று அவ் வழியொழுகவேண்டியது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். இப்படியான சமய நெறிகளை மக்களுக்குப் போதித்து, அவர்களை ஒழுக்கசீலர்களாக விளங்கச்செய்து, உலகத்திலே தருமத்தையும் ஞானத்தையும் மிளிரச்செய்யவேண்டியது சமயக் குருமார்களின் இன்றியமையாத கடமையாகும்.

சைவ சமயத்தின் மிக உயர்ந்த நிலையாகிய வீர சைவம் பாரத நாட்டிலும் இலங்காபுரியிலும் மிகச் சிறப்புற்று விளங்கியதாகப் புராண நூல்களிலும் சமய சரித்திர ஆராய்ச்சி நூல்களிலும் காணக்கூடியதாகவிருக்கின்றது. இச்சமயம் இலங்காபுரியில் அனுதிகாலத்தில் பூரணமதி போன்று மிகச் சிறப்புடன் பிரகாசித்து விளங்கியது. ஆனல் காலமாற்றங்களினலே இச்சமயம் தேய்மதிபோல் அருகில் வந்துள்ளது.

ஈழவளநாடு வீர சைவ குருமகா சந்நிதானம் கீரிமலை இரேணுகாச்சிரம மகாகுரு சிவஸ்ரீ. சி. ஐயம்பிள்ளைக்குருக்கள் அவர்கள் புனித நகரான கீரிமலையிலே இச் சமயத்தின் மூலாசாரியர்களின் முதல்வராகிய ஸ்ரீ இரேணுக சிவாசாரியரின் புனித நாமத்தின் பெயரால் ஒரு ஆச்சிரமத்தை அமைத்து, அதன் பிரதம குருவாக வீற்றிருந்து மக்களுக்கு நல்லுபதேசங்களைச் செய்து, அவர்களின் ஆத்மீக வளர்ச்சிக்காக அயராது உழைத்து வருகின்றார்கள். இவர்கள் தமிழ், சமஸ்கிருதம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளிலே பாண்டித்தியம் பெற்றும், வேத சிவாகமங்களிலே கூறப்பட்டுள்ள சமயக் கிரியா நெறிகளையும் பழுதறக் கற்றும் எல்லோரும் போற்றும் ஞானக் குருவாக விளங்குகின்றார்கள்.

இக் குருமகாசந்நிதானம் அவர்கள் தமது 75 வது வயதைப் பூர்த்திசெய்து வைர விழாக் காணவுள்ளார்கள் என்ற நற்செய்தியைக் கேட்டு அகமிக மகிழ்ந்தேன். ஒரு குருவுக்குரிய சகல இலட்சணங்களும் ஒருங்கே அமையப்பெற்ற இப்புனிதருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு மிகப் பெருமையடைகின்றேன்.

எங்கள் ஈழநாட்டிலே சைவமும் தமிழும் நீடூழி வாழத் தொடர்ந்து அவர் தொண்டாற்ற எல்லாம் வல்ல இறைவன் சகல நலங்களையும் அவர்களுக்கு அருளுதல் வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

புதுச்செட்டித் தெரு,
கொழும்பு, 23-3-77.

த. நீதிராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

முன்னைநாள் அரசாங்க அதிபர்

ஸ்ரீகாந்தா (ஓ. பி. ஈ.) அவர்கள் வழங்கிய

# ஆசிச் செய்தி

## வீரசைவரின் கலங்கரை விளக்கம்

கீரிமலை ஸ்ரீரேணுகாச்சிரம மகாகுரு சிவஸ்ரீ சி. ஐயம்பிள்ளைக் குருக்கள் (கைலாச தேசிகர்) அவர்களின் வைர விழாவினை அவர்தம் அன்பர்களும் ஆதரவாளர்களும் சிறப்பாகக் கொண்டாட ஆயத்தஞ் செய்வதையறிந்து மிகவும் மகிழ்ந்தேன்.

கடந்த அரைநூற்றுண்டுக்கு மேலாக அரிய சமயத்தொண்டினை ஆற்றிவரும் இப் பெரியார் ஆழ்ந்த சைவ சாத்திர அறிவும், அவ்வறிவின் பயனாக அடக்கமும் வாய்க்கப் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து வருவதனை யாவரும் அறிவர். ஈழம்வாழ் வீரசைவர்களுக்கு இவர் ஒரு கலங்கரை விளக்கமாய் அமைந்து வழிகாட்டி வருவது பெரிதும் போற்றத்தக்கது.

வீரசைவம் மேலோங்கி வளரும் மைசூர் இராச்சியத்திலுள்ள வீரசைவ சமய பீடங்களின் தலைமைப் பீடமான ரம்பாபுரி மகா சந்நிதானத்தின் ஆசியையும் ஆதரவையும் பெற்றுள்ளமையே இவர் தம் சிறப்பிற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். இவரின் வீரசைவப் பணியினைப் பாராட்டுமுகமாக ரேணுகாசாரியர் தோன்றுவதுபோல அமைந்த சிவ லிங்க விக்கிரகத்தைச் சந்நிதானம் இவருக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். குருக்களவர்களின் சேவையைப் பாராட்டி விழா எடுப்போர் இப்புனித விக்கிரகத்தைப் பிரதிட்டைசெய்யும் பணியில் இவருக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்குவதே உண்மையான நன்றிக் கடனும் நற்பாராட்டுமாகும் என்பதில் ஐயமில்லை. 'சிறுதுளி பெருவெள்ளம்' என்பதை உணர்ந்து அன்பர்கள் செயற்படுவார்களாக. இதுவே குருக்களுக்கு அவர்கள் செலுத்தும் உண்மையான அஞ்சலி.

குருக்களவர்கள் நெடுங்காலம் வாழ்ந்து சிவப்பணியாற்ற எல்லாம் வல்ல இறைவனை மனமொழி மெய்களால் வாழ்த்துகின்றேன்.

ம. ஸ்ரீகாந்தா.

யாழ்-பலாலி வீதி,
கோண்டாவில்,
19-3-77.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

வைத்தீஸ்வர வித்தியாலய முன்னாள் அதிபர்

ச. அம்பிகைபாகன் பி. ஏ. அவர்களின்

# ஆசியுரை

சிவஸ்ரீ. ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்களை இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நான் அறிவேன். கலைப்புலவர் நவரத்தினம் அவர்களும் குருக்களவர்களும் சமய விஷயங்கள் சம்பந்தமாக உரையாடும்போது பல முறை கூட இருந்துள்ளேன். அந்த உரையாடல்கள் மூலம் குருக்கள் அவர்களுக்குச் சயத்துறையில், சிறப்பாக வீர சைவத்துறையிலிருந்த ஆர்வத்தை நன்கறியக் கூடியதாகவிருந்தது.

பின்னர், நான் பல வீரசைவ நூல்களைப் படிக்கும் வாய்ப்புப் பெற்றேன். கலைப்புலவர் அவர்கள் வீரசைவத்தைப்பற்றி ஆற்றிய சொற்பொழிவு குருக்கள் அவர் களின் விருப்பப்படி அச்சிடப்பட்டது. அதனை முதலிலே படித்தேன். பின்னர், குமார தேவரின் சுத்தசாதகத்துக்குத் தென்கோவை, கந்தையாபிள்ளை எழுதிய உரையையும். அதற்கு சாகு இராவ்சாயிப் நல் முருகேச முதலியார் எழுதிய ஆங்கில மொழி பெயர்ப்பையும் வியாக்கியானத்தையும் படித்தேன். இவற்றின் மூலம் வீரசைவக் கொள் கைகளை ஒருவாறு அறிய முடிந்தது.

வீரசைவத்தின்படி முத்தியென்பது இலிங்க (சிவ) அங்க (ஆன்மா) ஐக்கிய மாகும். இம்முத்தி சதேக முத்தியெனப்படும். சாதாரண பாஷையில் இதனைக் கூண்டோடு கைலாயம் போவதென்பர்.

ஆசாரத்திலும் வீரசைவம் மறுசமயங்களிலும் வேறான கொள்கைகளையுடையது. வீரசைவத்திலே சாதியப்பிரிவுகள், தீட்டுவிலக்குகள், தீண்டாமை முதலியவற்றிகு இட மில்லை. இவைபற்றி ஒரு வீரசைவ ஆசிரியர் கூறுவது பின்வருமாறு "பால் வேற்றுமை யாலும், சாதி வேற்றுமையாலும் ஏற்படும் பிரிவுகள் முத்திசாதனத்துக்குத் தடையாகு மென வீரசைவன் கொள்வதனால் அவனது பார்வையிலே பெண் பாலாரும் தீண்டத் தகாதாரும் சம அந்தஸ்து உடையவர்களாகவே காணப்படுகின்றார்."

கொள்கையளவில் வீரசைவத்துக்கும் சைவசித்தாந்தத்துக்கும் சில வித்தியா சங்களிருந்த போதிலும், நடைமுறையில் இரு சமயப்பிரிவுகளும் ஒன்றுக் கொன்று உதவியாயிருந்து வந்துள்ளன. வீரசைவர்களுக்குச் சைவ சமயக் கோயில்களில் முக்கிய இடமுண்டென்பதைச் சகலரும் அறிவர். சில கோயில்களில் வீரசைவர்களே பூசையை நடத்திவருகின்றனர். இலிங்கதாரியான ஞானியார் சுவாமிகள் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராவர். இன்னுமொரு இலிங்கதாரியான திருமுருக கிருபானந்த வாரியார் சைவத்துக்கு ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது.

இலங்கையில் ஒப்பற்ற வீரசைவக் குருவாக விளங்கும் சிவஸ்ரீ. ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்கள் உருத்திரபுரச் சிவாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டபோது அக்கோயிலுக்குப் பிரதம குருவாக நியமிக்கப்பட்டார். இக்காலத்தில் அவர்கள் நிகழ்த்திய நித்திய நைமித்தியக் கிரியைகளைப் பார்க்க முடிந்தது. இவற்றையெல்லாம் சிறப்பாக, கூடியிருக்கும் பக்தர்கள் மனதைக் கவரும் வண்ணம் செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைமித்தியங்களை நடாத்தும்போது இவர் கொள்ளும் சிவ வேடம் மறக்க முடியாத தொன்றாகும்.

இப்பொழுது இவர்கள் யாழ்ப்பாணம் முற்றவெளியிலுள்ள முனீஸ்வரன் கோயிலுக்குப் பிரதம குருவாகவிருந்து வருகின்றார். ஒரு காலத்தில் முனீஸ்வரன் கோயிலிருக்கும் சூழல் கிறீஸ்தவ சூழலாகவிருந்தது. இக்கோயில் வளர்ச்சியடைந்த திலிருந்து அச்சூழல் சைவச் சூழலாக இப்பொழுது மாறிவிட்டது. நூற்றுக்கணக்கிலே மக்கள் தினசரி அங்கு வழிபாடு செய்துவருகின்றனர்.

குருக்கள் அவர்களின் வாழ்க்கை இலட்சியம் வீரசைவத்துக்கு ஒரு புத்துயிர் கொடுப்பதாகும். அதற்காகக் கீரிமலையில், ஒரு காலத்தில் குமரகுருசுவாமிகள் தங்கியிருந்த மடத்தில் வீரசைவ ஆதிகுருவான இரேணுகாச்சாரியர் பெயரால் ஓர் ஆச்சிரமம் அமைத்துத் தொண்டாற்றி வருகிறார்கள். இதன் பொருட்டு இந்தியாவிலுள்ள வீரசைவப் பிரமுகர்களுடன் தொடர்பு கொண்டுள்ளார்கள். அவர்களில் இந்தியாவில் தற்பொழுது பிரதி ராஷ்டிரபதியாகவிருக்கும் மேதகு. பி. டி. ஜட்டியும் ஒருவராவர்.

எழுபத்தைந்து பிராயமடையும் குருக்கள் அவர்கள் இத் தள்ளாத வயதிலும் அறிவைப் பெருக்கிக்கொள்வதிலே காட்டும் ஆர்வம் பிரமிக்கத்தக்கதொன்றாகும். அவர் கையில் எப்பொழுதும் ஒரு நூல் காணப்படும்.

குருக்கள் அவர்களின் முன்மாதிரியை வீரசைவ இனச் சந்ததியார் பின்பற்றினால் அச்சமூகம் முன்னேறும் என்பதில் ஐயமில்லை. குருக்கள் அவர்கள் திடகாத்திரத்துடன் பல்லாண்டு வாழ்ந்து சேவைபுரிய இறைவன் அருள் புரிவானாக.

பிரதான வீதி,
மல்லாகம்,
20. 3. 77.

ச. அம்பிகைபாகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

முன்னைநாள் இலங்கைப் பாராளுமன்ற உபசபாநாயகர்

# திரு. மு. சிவசிதம்பரம் அவர்களின்

# ஆசிச் செய்தி

"அந்தணரென்போர் அறவோர் மற்றெல்லாவுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலால்"
என்பது வள்ளுவர் வாக்கு.

அவ்வாக்குக்கமைய, குருக்கள் என்போர் பிறப்பினால் தோன்றுவதில்லை. மற்றெல்லா உயிர்களுக்கும் செந்தண்மை பூண்டொழுகக்கூடிய அறிவினாலும், ஆசாரத்தினாலுமே அவர்கள் அந்நிலையை அடைகின்றார்கள். அத்தகைய ஒரு பாரம்பரிய நிலையினை ஆரம்பித்து வாழ்ந்ததுதான் வீர சைவ பரம்பரை. இப் பரம்பரையிலே தோன்றி வேதாகமங்களின் அறிவினோடு சிவ தொண்டு செய்துவரும் சிவ ஸ்ரீ சி. ஐயம்பிள்ளைக் குருக்கள் தமது 75 வயது பூர்த்தியையும், நற்றொண்டையும் குறிக்குமுகமாகக் கொண்டாடப்படும் விழாவினையொட்டிய மலருக்கு இவ்வாசிச் செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்வெய்துகிறேன். அவருடைய சேவை இன்னும் பல்லாண்டு காலத்துக்கு நிலைத்து ஒரு நன்மார்க்க ஆசாரசீலத்தைப் பரப்ப உதவவேண்டுமென எல்லாம்வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

கொழும்பு 4,
15-3-77.

மு. சிவசிதம்பரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்காவற்றுறை, தேசியப் அரசுப் பேரவை உறுப்பினர்

## பண்டிதர், கா. பொ. இரத்தினம் அவர்களின்

## ஆசியுரை.

சிவத்திரு சி. ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்களின் வைரவிழாவை நடாத்த ஒழுங்குகள் செய்யப்படுவதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ் மறைகளாம் தேவார திருவாசகங் களைப் பாடிப் பூசை செய்யும் தன்னிகரற்ற தொண்டினைச் செய்துவரும் குருக்கள் அவர்களின் தமிழ்ப் பற்றும், சைவப் பற்றும், உண்மை நிலையும் பராட்டுக்குரியன. மக்களுக்கு விளங்கும் மொழியிலே - தாய் மொழியிலே - தெய்வச் செந் தமிழ் மொழியிலே சமய வழிபாடுகள் நடைபெற வேண்டும் எனும் கொள்கையை நிலைநாட்டுவதற்குக் குருக்கள் அவர்கள் முன்னணியில் நின்று உழைத்து வருதல் செயற்கருஞ் செய லாகும். அவர்களுடைய கொள்கையும் தொண்டுகளும் சிறந்து உயர்ந்து பொலிக.

கா. பொ. இரத்தினம்.

வேலணை,
ஊர்காவற்றுறை,
18-3-77.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## விளிசிட்டி, சேர். கனகசபை வித்தியாசாலை தலைமையாசிரியர் பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை அவர்களின்

# ஆசியுரை.

நாவலர் என்னும் காரண இடுகுறிப்பெயர் நல்லூர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களையே அறிவிப்பதுபோல வீரசைவகுரு மகாசந்நிதானம் என்பது சிவஸ்ரீ ஐயம் பிள்ளைக் குருக்கள் அவர்களையே அறிவிக்கும்.

ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் தமிழும் சைவமும் தழைக்கத் தம்மையே அர்ப்பணித் தது போல இவரும் வீரசைவமும், வீரத் தமிழரும் மேம்படத் தமது உடல், பொருள், ஆவி அத்தனையையும் உதவிக்கொண்டேயிருக்கின்றார். வீர சைவ வீறு நடை கண்டு வியவாதார் யார்?

நம்முடைய உடம்பாகிய கோயிலுக்குள் சிவலிங்கம் இருக்கிறது. சிவம் மேல்நோக்கி இருக்கின்றது. சிவசக்தி அதைச் சூழ்ந்திருக்கிறது. உயிர் அதனைத் தாங்கி நிற்கிறது. எனவே, ஆன்மாவுள் அருட்சக்தி; திருவருட் சக்திக்குள் சிவம்.

"உடையாள் உன்றன் நடுவிருக்கும்,
உடையான் நடுவுள் நீ இருத்தி, அடியேன்
நடுவுள் இருவீரும் இருப்பது" என்கிறது திருவாசகம்.

"தெள்ளத் தெளிந்தார்க்குச் சிவன் சிவலிங்கம்" என்பது திருமந்திரம்

சிவஸ்ரீ குருக்கள் அவர்கள் சிவலிங்கப் பெருமானை அகத்தும், புறத்தும் அனவரத மும் அருச்சிக்கத் தவறுதவர்கள். திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் அடிகள் போல சரீரத்திலே சிவலிங்க தாரணம செய்து, சீடர்களுக்கும் சிவலிங்கப் பெருமானைச் சந்நிதானப்படுத்துவதால் குருமகா சந்நிதானமாகவும் விளங்குகின்றார்.
குருமகா சந்நிதானத்தின் கொலுவைக் கண்டு குதூகலிக்காதவர் யார்?

வேதாகமங்களை விபரீதமறக் கற்றவர். வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்களை விளங்கிக் கற்றவர். திருமுறைகளைத் தினமும் சிந்திப்பவர். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் போன்றோரது திவ்ய பிரபந்தத் திரட்டுக்களைத் திருப்பித் திருப்பி நெட்டுருச் செய்பவர். திருஐவந்தெழுத்தைச் சதா காலமும் செபிப்பவர் இவரது அறிவாற்றலின் ஆழத்தை அளந்தறியவல்லார் யார்?

கீரிமலை ஸ்ரீ இரேணுகாச்சிரமத்தை ஆக்கினர். இந்தியப் பிரமுகர்கள் பலரை அழைத்து வீரசைவப் பெருமக்களின் பெருவிழாக்களை அதிவிமரிசையாக விரும்பிச் செய் பவர். குருபூசைகளையும் கொண்டாடுபவர். அநேகரை வீரசைவராகச் செய்து சிவலிங்க தாரணமும் செய்வித்தவர். படாடோபமின்றி வாழப் பயின்றவர். கிரியைகளைப் பயபக்தி யோடு விளங்கிச் செய்பவர்.

குருமகா சந்நிதானத்தின் தொண்டுகளின் சிறப்பை இத்துணைத்தென்று கூறவல் லார் யார்?

வீரசைவ குருமகா சந்நிதானமாகிய சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து வீரசைவத்துக்கும், தமிழுக்கும் பற்பல தொண்டுகள் புரிய எல்லாம்வல்ல எம்பெருமான் இன்னருள் புரிவாளுக.

விளிசிட்டி,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.
15-2-77.

பண்டிதர், வே. சங்கரப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிரிமலை ஸ்ரீ இரேணுகாச்சிரமத்தில் ஜகத்குரு
ஸ்ரீ இரேணுகசிவாசாரியர் எழுந்தருளியிருக்கும்
புனித ஆலயத்தின் கவின்மிகு காட்சி



காங்கேசன்துறையில் வீர சைவம் விளங்கிநின்
றோங்கும் குரக்கன்துறை ஸ்ரீ வீரபத்திர குருசுவாமி
ஆலயத்தின் எழில்மிகு காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

### மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர்

## பண்டிதர் மு. கந்தையா அவர்களின்

# ஆசியுரை

வீரசைவக் கோட்பாடுகளை விளங்கிக் கொள்ளும் வேட்கையுடையவர்களுக்குச் சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக்குருக்கள் அவர்கள் பத்தியமான ஒரு பாத்திரம். ஆசாரியர் ஒருவருக்கு இன்றியமையாத அறிவு, அடக்கம், நோன்மை, மேன்மை, வாய்மை, தூய்மை, பக்தி வினயம் ஆதிய பண்புகள் எல்லாம் அவரிடத்திலே பரிமளிக்கக் காணலாம்.

வீரசைவக் கோட்பாடுகளை விளங்கிக் கொண்டது போலவே சைவ சித்தாந்த வேதாந்த கோட்பாடுகளிலும் அவர்க்கு விரிவான ஆராய்ச்சியும் விளக்கமும் உண்டு. சித்தாந்த வேதாந்தக் கோட்பாடுகளுக்கும் வீரசைவக் கோட்பாடுகளுக்கும் எவ்வளவு அந்யோன்ய முண்டோ அவ்வளவுக்கும் அதிகமாக வேதாந்த சித்தாந்த அறிஞர்களோடு ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்களுக்கு அந்யோன்யமுண்டு. அவர்களிடத்தில் ததும்பும் உண்மையான சமயஞான விசாரம், ஆர் சொல்லும் எதனையும் அமைந்திருந்து கேட்கவைக்கின்றது. அவரோடு உரையாடச் சென்றிருப்பவர் தாமும் ஒரு வீரசைவ அனுதாபியாகத் தம்மைத்தாமே உணரவைக்கும் பாங்குள்ளது, மாசுமறுவற்று அவர்பால் விளங்கும் ஆத்ம நேயம்.

சிவலிங்க ஆராதனை சைவச் சார்பான எக்கோட்பாட்டினர்க்கும் ஏற்புடையதே. உண்மை வேதாந்தங்கூட அதற்கு விலக்கல்ல. எனினும், வீரசைவம் அதற்குக் கொடுத்திருக்கும் முக்கியத்துவமும், அதற்குத் தகுதி பெறுமாறு வீரசைவர் ஒருவர் பின்பற்றற்குரியனவாயுள்ள அனுட்டான விதிகளின் கண்டிப்பும் மிக அபாரமானவை. இருந்தும், இந்திய நாட்டில் ஒரு பெருந்தொகையினர் அதனை ஒழுங்காக அநுசரித்து வருகின்றனர். ஆத்மீகத் துறையிற் போல லௌகீகத் துறையிலும் உண்மை வீரர்களாகவே அவர்கள் விளங்குகின்றனர். தெலுங்கு கன்னடப் பிரதேசங்கள் ஒருமுகமாக வீரசைவத்தையே தழுவியிருப்பக் காண்கின்றோம். இது வீர சைவத்துக்குரிய மகத்துவங்களில் ஒன்றாகும்.

எம் ஈழ நாட்டிலும் வீரசைவம் பரவலாக எங்குமிருந்துள்ளது. எங்கள் இராவணேஸ்வரன் வீரசைவனென்பதே வழக்கம். எங்கள் பிரசித்திபெற்ற யாத்திரா தலங்களுளொன்றான சிவனொளிபாதம் இந்நாட்டுப் பண்டைய வீரசைவ பரம்பரையின் வழிபாட்டு நிலையமே என்னும் வழக்கும் உண்டு. வீரசைவச் சார்புள்ள இந்திய மன்னர்கள் இலங்கையை ஆண்ட காலங்களில் இது சம்பவித்திருத்தல் தவிர்க்க முடியாததொன்றாகும். அதன் விபரங்கள் ஆராய்ந்து வெளிவரவேண்டியவையாம். இவற்றைவிட 12-ம் நூற்றாண்டிலே தோன்றி வீரசைவ மறுமலர்ச்சி விளைத்துள்ள பசவேஸ்வரர் என்ற ஆசாரியர் ஈழ நாட்டில் ஆயிரக்கணக்கான பிரதேசங்களிலே சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வைத்துள்ளாரெனவும் வரலாற்றுச் செய்தியுள்ளது.

இங்ஙனம் ஈழத்தில் ஆங்காங்கு பிரபல்யம் பெற்றிருந்த வீரசைவ மேதைகள் கால ஓட்டத்திற் பெரும்பாலும் மறைந்தொழிந்தனர். அவர்களின் ஸ்தானங்கள் வெற்றிடமாயின. அவர்களின் உறவினர்களோ பின்னோர்களோ அவ்விஸ்தானங்களுக்குத் தம்மைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதிப்படுத்தும் ஊக்கமற்றொழிந்தனர். அண்மையிலே சுன்னாகத்தில் திகழ்ந்த குரு. சி. ஸ்ரீ மாணிக்கத்தியாகராஜ பண்டிதர் மிகப் பிரசித்திபெற்றிருந்த ஒரு வீரசைவ சிவாசாரியர். அவர் மறைந்து முப்பது ஆண்டுகளுக்கு மேலாகியும் அவர் வாரிசாக ஒருவரும் வரக் காணோம். அவ்வகையால் ஈழநாட்டில் இன்று ஒருசில வீரசைவ சிவாசாரியர்களையே காணமுடிகின்றது. அவ்வொருசிலர்க்கு நாயகமாக விளங்குபவர் சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்கள்.

பரிசுத்த தலமாகிய கீரிமலையை இடமாகக் கொண்டு வசிக்கும் ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்களின் வாசஸ்தலத்துக்கும் குறிப்பிடத்தக்கதொரு விஷேடமுண்டு. யாழ்ப்பாணத்து ஞான மூலமெனப் பிரசித்திபெற்ற ஸ்ரீ கடையிற் சுவாமிகள் காலத்தில் இராமநாதபுரம் பகுதியிலிருந்து இங்கு எழுந்தருளிக் கீரிமலை, மருதனார்மடம், மாத்தளை முதலிய பகுதிகளிற் சஞ்சாரம் செய்தவர் ஸ்ரீ பரம குரு சுவாமிகள். ஸ்ரீ குழந்தைவேற் சுவாமிகள், சேர். பொன். அருணாசலம் இருவரும் அவரைத் தமது அபிமான குருவாகக் கொண்டு போற்றியிருக்கிறார்கள். அவர்க்கு மற்றொரு பேரன்பனாய் விளங்கிய சேணிய தெரு சின்னத்தம்பி என்னும் பெரியார் சுவாமிகள் கீரிமலையிலேயே பரிபூரண தசையெய்தக் காணும் விருப்பால் தம் பொறுப்பிற் காணி வாங்கி அமைத்த மனையே தற்பொழுது சிவஸ்ரீ குருக்கள் அவர்களின் வாசஸ்தலமாகத் திகழ்கிறது. சிவஸ்ரீ குருக்கள் அவர்களின் தெய்வீக வாசனைக்கேற்றாற் போல் அவர் மனைக்கும் எதிர்பாராதவிதமான தொடர்பிருத்தல் இதனால் அறிய வருகின்றது. வீரசைவ ஆதி சிவாசாரியருள் முதல்வராகிய ஸ்ரீ இரேணுக சிவாசாரியரின் பெயரால் "இரேணுகாச்சிரமம்" என வழங்கும் அம் மனையில் தற்பொழுது சில ஆண்டுகளாக ஸ்ரீ இரேணுக சிவாசாரியர் தாமே குடிபுகுந்திருக்கும் சிறப்பும் அறியத்தக்கதொன்றும்.

கன்னட நாட்டு வீரசைவ மூல நிலையப் பரமாசாரிய சுவாமிகள் ஸ்ரீ இரேணுக சிவாசாரியரின் திவ்விய சிலாபடிமம் ஒன்றும் சிற்ப நலந்திகழும் திவ்விய நந்தி ஒன்றும் இம் மனைக்கனுப்பி ஆசீர்வதித்துள்ளார்கள். அதற்குரிய கடவுண் மங்கலம் நிகழும் வரைக்கும் தற்காலிகமாக அது இங்கேயே இடம் பெற்றிருப்பதால் ஸ்ரீ இரேணுகாச்சிரமம் இரேணுகர் மனையாகவே விளங்கக் காண்கின்றோம்.

"எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழி நிலனே" – புறநானூறு

சிவஸ்ரீ குருக்கள் அவர்களின் நல்லியல்பால் இம் மனைக்கு இந்த நற்பேறு வாய்த்திருத்தல் போற்றற்பாலதாகும்.

இனிதே நிறைவேறும் எழுபத்தைந்தாண்டுப் பூர்த்தியை முன்னிட்டு, குருக்கள் அவர்களுக்கெடுக்கும் வைர விழா சைவ உலகு முற்றிலும் மகிழ்ச்சியோடு வரவேற்கும் மங்கல விழாவாக மலர்வதாக. அவர் சேவை நலத்தினைப் பேணிப் போற்றி அத்தகைய சேவையின் நீடிப்புக்கு மென்மேலும் ஆக்கமும் ஊக்கமும் நல்கும் பணியைத் தம் பெருங்கடனாக உணர்ந்து வீரசைவ மக்கள் நல்வாழ்வுறுவார்களாக.

சிவஸ்ரீ குருக்கள் அவர்களுக்கும் அவர் திவ்விய சேவைக்கும் பல்லாண்டு கூறி வாழ்த்துகிறோம்.

வணக்கம்.

ஏழாலை, சுன்னாகம். 20-3-77.

பண்டிதர், மு. கந்தையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

சிவநெறிப் புரவலர்

க. கனகராசா (சமாதான நீதிபதி) அவர்களின்

# ஆசியுரை.

வைர விழாக் காணும் வீர சைவக் குருமகா சந்நிதானம் இன்னும் பல்லாண்டு சைவத் தொண்டும், தமிழ்த் தொண்டும் செய்து மக்களை ஈடேற்ற இறைவன் அருள்புரிவாராக.

திரு. ஆலவாய்,
யாழ்ப்பாணம்.
5-3-77

க. கனகராசா
சமாதான நீதவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் குருநாதரும் அவர்தம் சமய நெறியும்

(வ. குமாரசாமி - காங்கேசன்துறை)

“ எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிது அரிதுகாண் இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ ’ என்ற தாயுமான சுவாமிகளின் திருவாக்கையும் “அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது” என்ற செந்தமிழ் மூதாட்டி ஔவையாரின் அருள்வாக்கையும் உற்றுநோக்குமிடத்து மானிடப் பிறவியின் பெரு மகத்துவத்தை நாம் நன்குணரலாம். இப்பெரும் பேற்றின் மகத்துவத்தை அறியாத மக்களிற் பலர் மாக்களாக வாழ்ந்து தம் வாழ்நாளை வீணுகக் கழிக்கின்றனர். நாம் செய்த பூர்வீக நற்றவத்தின் பயனுகவே இப்பெரும் பாக்கியத்தை இறைவன் எமக்கு அளிருயுள்ளான். ஆன்மாக்கள் தன்னை வந்தடைந்து பேரானந்த முத்தியை அடைவதற்காகவே இப்பிறவியை ஒரு கருவியாக அருளியதோடுமட்டுமல்லாமல் மற்றப் பிறவிகளிலும்பார்க்க ஓரறிவைக் கூடப் படைத்ததும் அவன் திருவருட் சிறப்பேயாகும்.

மானிடராகிய நாம் இறைவனின் இப் பெருங் கருணையை உணராது வந்த வேலையை மறந்து வழி தடுமாறி பத்தபாச வலையிடைப்பட்டு அஞ்ஞான இருளில் மூழ்கித் தத்தளிக்கின்ருேம். ஆனுலும், பூர்வீக நற்புண்ணிய முதிர்வினுல் பல மானிட ஜீவன்கள் உண்மையையுணர்ந்தும், ஜீவனிலே சிவனைக் கண்டும் உலகுக்கு நற்கருணை பொழிந்தும் தெய்வீக வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கின்ருர்கள். இப் பெருவாழ்வு வாழ்ந்துவரும் புனிதர்களின் வரிசையிலே, வீர சைவ ஞானியரும், முனிவர்களும், பெருந் தவசிகளும் நிட்டைகூடி அமர்ந்த புனித நகராம், கண்டகியெனும் புனித தீர்த்தமும், கருணையே வடிவமான நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர சுவாமியின் பொன்னம்பலமும், ஒருங்கே அமைவுற விளங்கும் நகுலகிரியில், சிவாத்வைதமாகிய வீர சைவ நெறியை உலகிலுள்ள ஜீவகோடிகளுக்குணர்த்திப் பெறற்கரிய லிங்காங்க சாமரஸ்ய முத்தியை அருளவேண்டி கொல்லிபாகத்திலுள்ள ஸ்ரீ சோமேசலிங்கத்திலுதித்த ஜகத்குரு, ஸ்ரீ இரேணுக சிவாசாரியரின் திவ்விய புனித நாமத்தின் பெயரால் திகழும் ஸ்ரீ இரேணுகாச்சிரமத்தின் வீர சிம்மாசனுதிபதியாக எழுந்தருளியிருக்கும் ஈழவளநாடு வீரசைவ குருமகா சந்நிதானம், கருணையேவடிவமான சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்களும் ஒருவராவர். கைலாசதேசிகரென்ற (தீட்சா நாமம்) சிவநாமம் பெற்ற பெருந்தகையோன், ஐயம்தீர கைலாசபதியையடையும் பெருநெறியையுணர்த்திநிற்கும் பெருங்குரவன், அண்டினேர்க்கும் அண்டாதோர்க்கும் அன்பு சொரியும் ஆனந்தக்கூத்தன்.

இப்பெருமைவாய்ந்த பேரானை, நகுலமலையுறையும் நற்றவத்தோனை என் குருநாதனுகப் பெற்றது யான் செய்த தவப் பயனே. அன்று என் காதிலே செப்பிய திருமொழி இன்றும் தேனுக இனிக்கின்றது.

எனக்கும் என் குருநாதனுக்கும் ஏற்பட்ட தொடர்பு மாதோட்டத் துறையும் திருக்கேதீஸ்வர மகா லிங்கனின் பெருங் கருணையினுல் ஏற்பட்டதாகும். ஒருநாள் இரவு சிந்தையில் பெரும் வேதனையுற்று உணவையும் மறந்து கண்ணில் நீரருவி சொரியக்கண் துயின்றேன். மாதோட்ட மன்னனுகிய மகாலிங்கேஸ்வரனின் அருகில் நான் நிற்க, எனது குருநாதரின் திருமேனியைத் திரிபுண்டரம், கௌரி சங்கம், உருத்திராக்கம், செச்சை, நறுஞ் செஞ்சந்தனம் அழகிய மலர்மாலைகள் என்பன அழகுசெய்ய, கையிலே கமண்டலமும் உருத்திராக் கமாலையும் தாங்கியவராய், பால் வெண்ணீற்றைக் குழைத்து மகா லிங்கேஸ்வரனின் திருமேனியில் திரிபுண்டரமாகத் தரித்து நாயேனையும் அருட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோக்கி நின்றார். மறுநாட்காலை துயிலெழுந்து என் ஐயனை, கைலாசதேசிகனை, என் உயிர்க்காரமுதை, தேனை, பாலை நாடி ஓடி என் குருவாகப்பெற்றேன். என் உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் அவர் தம் பாதாரவிந்தங்களிலே சமர்ப்பித்துப் பூரண சரணாகதியடைந்தேன்.

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பது குறிந் தோரார்
குருவே சிவனுமாய் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே"

எனத் திருமந்திரத்திலும் "குரவரை மனிதராகக் குறிப்பவர் குருத்துரோகர்" என வீராகமத்திலும் கூறப்படுகின்றது.

ஜீவர்கள் அவைகளின் பக்குவநிலைக்கேற்ப பிரளயாகலர், விஞ்ஞானகலர் சகலரென முப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். சாதாரண மானிடர்களாகிய நாங்கள் சகலரினத்தைச் சேர்ந்தவர்களாவோம். இவ்வான்மாக்கள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களினாலும் பிடிக்கப்பட்டவர்களாவர். இவர்களை ஆட்கொள்ளவேண்டி இறைவனின் திருவருள் மானிட வடிவந்தாங்கி குருவடிவாக எழுந்தருளுகின்றது. இதிலிருந்து குரு என்பவர் இறைவனின் சொரூபமென்பதை நன்குணரலாம். குருவை யார் நிந்திக்கின்றார்களோ அவர்கள் சிவனை நிந்திக்கும் குற்றத்துக்கு ஆளாவார்கள். இவர்கள் குருத் துரோகிகளும் சிவத் துரோகிகளுமாவர். இவர்கள் நரகத்தில் வீழ்ந்து அழுந்துவார்கள். மானிடப் பிறவி எடுத்ததன் பயனையே இழந்தவர்களாவார்கள்.

ஒருவன் சகல சௌபாக்கியங்களையும் பெற்றிருந்தபோதும் குருவின் ஆசி அவனுக்கு இல்லையேல் அவன் தான் பெற்ற இப்பேறுகளினால் எதுவித பயனையும் மனச் சாந்தியுடன் அனுபவிக்கமுடியாது. அவனை அறியாமலே அவனது உள்ளத்தில் ஒரு அமைதியினம் குடிகொள்ளும். வேறொருவன் சகல பாக்கியங்களையும் பெற்றிருக்காவிட்டாலும் குருவின் ஆசிர்வாதத்தைமட்டும் பெற்றிருப்பானேயானால் அவன் மிகப் பெரிய சாந்தியையும் ஆனந்தத்தையும் அடைவான் என்பதை அனுபவரீதியாகக் கூறுகின்றேன். "குருபக்தியே பெரும்பேறு. கொண்டாடிக்கொண்டாடி ஆறு" என்ற யோகர் சுவாமிகளின் திருவாக்குச் சிந்திக்கற்பாலது. யோகர் சுவாமிகளின் சிஷ்யர்களென்று தம்மைக் கூறிக்கொள்பவர்கள் இப் பொன்மொழியை அறியார்கள்போலும். ஆனபடியாலேயே அவர்கள் குருவுக்குப் பங்கமாக வாழ்கின்றார்கள்.

ஐயா அவர்களை என்று என் குருவாகப் பெற்றேனோ அன்றுமுதல் என் குருநாதனுக்கும் எனக்கும் மிக நெருங்கிய தெய்வீகத் தொடர்பு ஏற்பட்டது. திருக்கேதீஸ்வரனே என் குருநாதனாக எழுந்தருளியுள்ளான் என்ற எண்ணம் என் சிந்தையிற் குடிகொண்டது. என் தாய் தந்தை சுற்றம், தெய்வம், குரு சகலதும் அவரே யென்ற எண்ணம் என் மனதில் தானாகவே எழுந்தது.

"மலமகற்று ஞானவிதை யஞ்செழுத்தாகுஞ் சிவமந்திரத்தா லுற்பவித்த சீடன் குருபுத்திரனாமே" என ஓதுகின்றது வீராகமம். அவரின் திருவுருவத்தையும் அவரின் திருநாமத்தையும் நினைத்தால் சிறியேனின் மனத்திலே என்னை அறியாமலே சாந்தியும் அமைதியும் ஏற்படுவதை உணர்கின்றேன். என் குருநாதரும் மாறாக் கருணைகொண்டு பல ஞான நூல்களை எனக்கருளியதுமட்டுமன்றி அந் நூல்களையும் வீர சைவ நெறிகளையும் எனக்குப் போதித்தார். தான் சிவபூசை செய்யும்பொழுது என்னையும் தன் பக்கத்தே யமர்த்தி நித்திய கருமங்களையும் சிவபூஜா விதிகளையும் செய்கைமூலம் கற்றுத் தந்துள்ளார்கள். ஒன்றும் போதா நாயேனை நயந்து ஆட்கொண்டார்கள். தமது சிஷ்யகோடிகளனைவரையும் தமது புத்திரர்களாகவே மதிப்பவர்.

"சூத்திரன் பிராமணனுடன் ஒரே ஆசனத்தில் உட்கார்ந்தால் சூத்திரனது இடுப்பில் சூடுபோட்டாவது அல்லது ஆசனவாய்ப் பக்கத்தைச் சிறிது அறுத்தாவது ஊரைவிட்டுத் துரத்தவேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சூத்திரன் வேதத்தை ஓதினல் அவன் நாக்கைகத் துண்டிக்கவேண்டும். அவன் வேதத்தைக் காதால் கேட்டால் ஈயம் காய்ச்சி அவன் காதில் ஊற்றவேண்டும். அவன் படித்த வேதத்தை நெஞ்சில் வைத்திருந்தால் அவனது நெஞ்சைப் பிளக்க வேண்டும்."

(மனுஸ்மிருதி. 8 : 281)

இப்படிக் கூறுகின்றது ஆரிய தர்மம். ஆனல், ஐயா அவர்கள் இக் கொடூர மார்க்கங்களைக் கண்டித்தும் வட மொழியைத் தேவ மொழியென்றும் தித்திக்கும் செந்தமிழைச் சூத்திரமொழியென்றும் வாதிட்ட பிரம்மஸ்ரீக்கள் சிலருடன் தமிழும் தெய்வீக மொழியென வாதிட்டு வெற்றிகண்ட சிவாகமச் செல்வரல்லவா ? பக்தி நெறி நிற்கும் கருணைக் கடலல்லவா ?

ஆதிசிவனல் தோற்றுவிக்கப்பட்டதும் அகத்தியனல் வளர்க்கப்பட்டதுமான அருந்தமிழ் மொழியிலுள்ள மூவர் தமிழினலும் அருள்மணிவாசகரின் தேன்மொழிகளாலும் மற்றும் அருட்பாக்களினலும் மனமுருகிப் பாடிப் பாடிப் பூசைசெய்யுமுகமாக "இட்டலிங்க பூசாத்திரட்டு" என்ற நூலை ஆக்கித் தமிழின் தெய்வீகத் தன்மையை நிலைநாட்டியுள்ளார்கள்.

'தாரமும் குருவும் தலைவிதியே காண்' என்ற பொன்மொழியை உற்று நோக்குமிடத்து இறைவனலேயே ஒருவருக்குக் குரு யாரென்பது கருவிலேயே நிலைநிறுத்தப்பட்டுள்ள காரியமாகும். " எப்பவோ முடிந்தகாரியம் " ஒருவனுக்கு யார் தீட்சா குருவாக எழுந்தருளுகின்ருரோ அக்குருவினலேயோ அல்லது அக் குரு பரம்பரையினலேயோ அவனது பூர்வ அபரக் கிரியைகள் நிகழ்த்தப்படவேண்டுமென்றும், ஒரு சிஷ்யனுக்குத் தீட்சை விவாகம் அந்தியக் கிரியை, என்பன ஒரு குருவினலே நிகழ்த்தப்பட்டால் அச் சிஷ்யனது ஆன்மா மோட்சகதியை யடையுமெனவும் ஞான நூல்களிலே கூறப்படுகின்றன. இக்கிரியைகளுள் "அந்தியக் கிரியை பற்றிச் சிறப்பாகக் கூறப்படுகின்றது. ஒருவனது வாழ்விலே ஏற்படும் நாற்பது சம்ஸ்காரங்களிலே இறுதியாக நடைபெறும் யாகமே இவ் வந்தியக் கிரியையாகும். ஜீவனைச் சிவனுடன் ஐக்கியப்படுத்திவைக்கும் இப்புனித கிரியையைச் செய்துவைக்கின்ற குரு மிக உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துப் போற்றப்படவேண்டுமெனக் காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் தமது அருளுரையிலே கூறியுள்ளார்கள். ஆனல், இன்று நவநாகரீகத்தில் சிக்கிய சிலர் தீட்சாகுருவிருக்க அவரை மறந்து மாற்றுக் குருமாரைத் தேடியலைவது அவர்களின் ஆத்மீக பூச்சியத்தையே எடுத்துக் காட்டுகிறது. இவர்களின் செயல் கரும்பிருக்க இரும்பைக் கடித்தவனின் கதை போலாகிவிட்டது.

ஆத்மீகமென்பது வெளிவேடத்தாலும் சாதி, மத வேற்றுமைகளாலும் வளரமுடியாததொன்று. ஒரு சாதகனுடைய உள்ளத்திலே உண்மையான பக்தியும் தூய்மையும் ஏற்படவேண்டும். இன்று சிலர் சமூகத்தில் கீழ் நிலையிலிருந்துகொண்டு (குருவுக்குப் பக்கமாகச் செயற்படுகின்றவர்கள் கீழ்மக்களே) தங்களை உயர்வாகக் காட்டவேண்டுமென்ற ஒரேயொரு காரணத்திற்காகச் சந்ததி சந்ததியாகப் பேணிப் பாதுகாத்துவந்த குருமுறையை மாற்றி அமைப்பதுபோன்ற இழிசெயல் பாரினில் வேறொன்றுமில்லை, பெற்ற தந்தையிருக்க அவரை விடுத்து வீதியில் போகிற ஒருவனை தந்தையென உரிமை கொண்டாடுவது போன்ற அநாகரீகமான செயலாகும்.

கொக்கை எரித்த சர்வ வல்லமை படைத்த கொங்கண மகரிஷி கடமை தவருத பத்தினிப் பெண்ணையும் எரிக்க நினைத்தார். அப்பொழுது "கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா ?" என்றதும் வியப்புற்ற மகரிஷி அவரின் குருவாகிய கசாப்புக்கடைக்காரனை அறிந்து அங்கே சென்று அவனைக் குருவாகப்பெற்று ஞானமடைந்தார். இதிலிருந்து உண்மையான ஆத்மீக ஞானம் வேடத்திலேயோ சாதியிலேயோ தற்புகழ்ச்சியிலேயோ தங்கியிருக்கவில்லை என்பதை உணரவேண்டும். உண்மையான அறிவாளிகள் இதனை ஒப்புக் கொள்வர்.

இந்து சமயத்தில் சைவம், வைஷ்ணவம், சாக்தமென முப்பெரும் பிரிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. இதன்படி, சிவனை பிரம்மமாக வணங்குபவன் சைவன். விஷ்ணுவைப் பிரம்மமாக வணங்குபவன் வைஷ்ணவன். சக்தியைப் பிரம்மமாக வணங்குபவன் சாக்தன் எனப்படுவர். ஒரு சைவனுக்குத் தீட்சா குருவாகவோ அல்லது அவனது மற்றுங் கிரியைகளுக்கோ குருவாக வருபவர் சிவனைப பிரம்மமாக வணங்கும் சிவ ஞானியாகவே அமைதல் வேண்டும். சைவத்தின் மிக உயர்ந்த நிலை வீர சைவ நெறி முறையாகும். இச் சைவன் 'வீர' என்ற ஞானத்தில் மூழ்கியிருப்பவன்.

எம் குருநாதர் பற்றி நிற்கும் இச்சமய நெறியோ பாரினில் மிகப் பெருமையுடன் பிரகாசிக்கின்றது. இந்நெறி பக்திநெறியாக விளங்கும் சிவாத்வைத நெறி (வீர சைவம்) ஆகும். இந்நெறி இலிங்காங்க சாமரஸ்ய முத்தியை அடைவதற்குச் சுலப மான வழியை எடுத்துரைக்கின்றது. இச் சைவமே அநாதி சைவமெனவும் சக்தி விசிட்டாத்துவைதமெனவும் சிவாகமங்களில் கூறப்படுகின்றது.

ஒவ்வொரு மனிதனும் தூல, சூக்கும காரணமாகிய மூன்று தேகங்களையுடையவனாக விளங்குகின்றான். மனிதன் தினமும் இம்மூன்று வகையான தேகங்களினாலும் பாவங்களைச் செய்துகொண்டிருக்கின்றான். ஆகவே, இத்தேகங்களைப் பீடிக்கும் பாவங்களை நீக்குவதற்காக வீரசைவத்திலே புனிதமான இலிங்க தாரணமும் இஷ்டலிங்க, பிராணலிங்க, பாவலிங்க வழிபாட்டு முறைகளும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இவ் விஷ்டலிங்கபூசையினாலே ஒரு ஜீவாத்மா தன்னுள்ளே பரம்பொருளாகிய இறைவனைக் கண்டு மோட்சநிலையை அடைகின்றது

வீரசைவக் கோட்பாடுகளின்படி ஒரு வீர சைவனை ஆசௌசங்கள் பற்றுவதில்லை. சிவாகம வாக்கின்படி வீர சைவ இலிங்கிப் பிராமணர்களுக்கு (பிரம்ம ஞானத்தை உணர்ந்தவன் எவனோ அவனே பிராமணன்) ஸ்நானத்துடன் திரிகாலத்திலும் இட்டலிங்கபூசை செய்து எடுக்கும் இட்டலிங்க தீர்த்தம் கிருகசுத்தத்தையும் குருலிங்க பாதோதகம் ஆத்ம சுத்திக்கும் நாடோறும் கிடைப்பதால் இவர்களுக்கு ஆசௌசமில்லையாகும். பின்பு தனக்குக் கிடைக்கும் தனு, கரண, புவன போகங்களைச் சிவார்ப்பணம் செய்வதினாலும் ஆசௌசமில்லையென்பதறிக. இதோ, அதற்குரிய சிவாகம வாக்கியங்கள்.

சிரார்த்த பிண்டப் பிரதா நாதி சூதகா
நிசவர்ஜயேத்
மாதா பித்ரோச்ச மரணம் புத்திர
மித்திரஸ்யதத்ததா
ஆசௌசம் சாபி ஸந்தாபம் லிங்கதேகி
விவர்ஜயேத் – (வீராகமம்)

''ந தஸ்ய சூதகம் சிம்கித் பிராணலிங்
காங்கஸங்கிந
ஜநநோக்தம் மிருநோக்தம் சவித்தியதே
பரமார்த்த (சித்தாந்தசிகாமணி)
9 சுலோகம் 43

'' சைவம் தேவதார்ச்சனம் யஸ்ய சாக்ஷி
பரிக்ரஹ
பிரம்மசாரியதிநாஞ்சசரீரே நாஸ்தி சூதகம்
லிங்கார்ச்சன ரதாநாரி சூதகிவாரஜஸ்வாலா
ரவிரக்கிறிர்யதா வாயுஸ்ததா கோடி
குணோஜவலா '' ஸ்ரீகரபாஷியம்

சீரியலிங் கத்தொழிலே சேர்ந்து சிவாசார
தாரி பிரியாமற் றனைடைந்து – பேரருளா
லாண்டசிவ லிங்கத்தடங்குஞ் சரணனுக்கே
யீண்டிறக்குஞ் சூதகமே யில்
(வீராகமம். 123. தமிழ்)

இவ்வுண்மைகளையும் வீர சைவ தத்துவங்களையும் அறியாத சிலர் வீண் வாதங்களைப் புரிந்து தங்கள் காலத்தை வீணே போக்குகின்றார்கள். வீர சைவத்தைக் கரைத்துக் குடித்துவிட்டோமென்றும் தங்களைத் தாங்களே அறிவாளிகளென்றும் கூறிக்கொள்ளும் கலியுக மகா மேதைகளின் கண்களில் இவ்விதி முறைகள் தென்படவில்லையா? அரைகுறைப் படிப்பா? அல்லது விதண்டாவாதமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா அவர்கள் காங்கேசன்துறை குரக்கன் துறையெனப் பெயர்பெற்று விளங்கிய அனுதி காலத்தில் முழுமுதல் மூர்த்தியாக எங்கள் மூதாதையோர்களினுல் ஸ்தாபிக்கப்பட்டதுமான எமது குலதெய்வமுமாகிய குரக்கன்துறை ஸ்ரீ வீரபத்திர குருசுவாமி கோயில், கலியமடம் ஞான வைரவர் கோயில், தெல்லிப்பழை கிழக்கு கவளாவத்தை ஸ்ரீ ஞானவயிரவர் கோயில் மற்றும்பல சிவாலயங்களுக்கும் பிரதம குருவாகவும், எங்கள் குருகுல மக்களுக்கும் மற்றும் வேளாளப் பெருமக்கள் பலருக்கு தீட்சா குருவாகவும் விளங்கி வருகின்ருர்கள்.

எம் குலமக்கள் இலிங்கத்தை அங்கத்திலேவைத்துப் பூசை செய்யும் சிவஞானிகளிடம் தீட்சை பெறுவதையே பெரும் பாக்கியமாகக் கருதுகிருர்கள். இக்குருமார்களிடம் தீட்சை பெற்றவர்களே! எம்மினத்தில் மிக உயர்ந்தவர்களாகப் போற்றப்படுகின்ருர்கள். இவர்களினுல் எங்களினத்துக்கு ஒரு தனிச் சிறப்புண்டு.

ஐயா அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக்கிடைத்ததன் பயனுக அவரின் நற்குணங்களேயும் இரக்க சிந்தையையும், சிவபக்தியையும் தமக்குத் தீமை புரிபவர்கள்மீதும் பேரன்பும் இரக்கமுமுடைய பெருங்குணத்தையும் யானறிவேன். தமக்குத் தீமைபுரிவோரைப் பார்த்து அவர்களே இறைவனின் மறக் கருணையெனப் போற்றுவார்.

இருளேயகற்றும் இரவி போன்று உபதேசம் செய்து எங்கள் சிந்தையிலுள்ள இருளேநீக்கிப் பேரொளியாக விளங்கிநிற்கும் பெருங் கருணைக் கடலாகிய குருதேவ ஐயா அவர்களின் பாதாரவிந்தங்களைச் சரணடைந்தேன்.

குருவே துணை! குருவே துணை! குருவே துணை!

## திருவள்ளுவர் கொள்கை

இறைவன் என்று ஒன்று உண்டு என்று நம்பு. அதை வணங்காவிட்டால் கற்றும் பயனில்லை. மழையானது உண்ணும் பொருளை உண்டாக்கித் தானும் உணவாகின்றமையால் போற்ற வேண்டியது ஒன்று. பெரியோர்களைப் போற்றுங்கள், மனைவி மக்களோடு வாழுங்கள். விருப்பு வெறுப்பு அற்று வாழுங்கள்.

படிக்க வேண்டியவற்றைக் குற்றமறப்படி படிக்கா விட்டாலும், கேள்! படித்துக் கேட்டு அறிந்தபடி நட.

சூதாடாதே! பொய் பேசாதே! புலால் உண்ணுதே! கள் குடியாதே! களவு செய்யாதே! வஞ்சம் கொள்ளாதே! தீமை எண்ணுதே!

நட்புத் தேவை. அதை ஆராய்ந்து கொள். தீயவர் உறவை நோயென விலக்கு பெரியோரைத் துணைக்கொள் பிறரோடும் அன்பாயிரு; மனைவியை மதி. மக்களைப் பெறு. அறிவை அடை. இனியன கூறு. செய்வன திருந்தச் செய். அறத்தின் வழி நின்று பொருளைத் தேடி, இன்பத்தைப் பெறு; வீடு உண்டாகும் அது உன்னை நாடி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரசைவமும் யாழ்ப்பாணக் குருபீடமும்

சைவப் புலவர், பண்டிதர், வித்துவான், இளைப்பாறிய உரும்பராய் இந்துக் கல்லூரி
கனிஷ்ட அதிபர்
சிவஸ்ரீ. இ. நவரத்தினக்குருக்கள்

குருகுலத் தோன்றல்களான பாண்டவர்க்கும், கௌரவர்க்கும் இடையே நடைபெற்ற பாரத யுத்தம் தொடர்ந்து 18 நாட்கள் நிகழ்ந்தன. அந்நாட்களில் கௌரவர் பக்கத்துச் சேனாநாயகனைப் 10 நாட்கள் தலைமை வகித்து வீட்டுமர் வீழ்ந்தார். 11-ம் நாளிலிருந்து 15-ம் நாள் வரை துரோணாசாரி சேனாதிபதித்துவம் நடாத்தித் திட்டத்துய்மனால் மரணித்தார். அதைப் பொறுக்கமுடியாத துரோணாது வளர்ப்பு மகனும் உருத்திராம்சம் பெற்றவனுமான அசுவத்தாமன் பாண்டவர் சேனையை அழிப்பேனென்று சபதம்செய்து, தந்தை கொடுத்த உக்கிர நாராயணாஸ்திரத்தை விட்டான். அது கிருஷ்ணருடைய சூழ்ச்சியால் செயலிழந்தது. பின் அக்கினியாஸ்திரத்தை விட்டான். அதனை அர்ச்சுனன் பிரம்மாஸ்திரம் விட்டுக்கெடுத்தான். அப்போது மந்திரதெய்வங்களை வெறுத்த அசுவத்தாமன் முன் வேதவியாசர் தோன்றினார். அவரை வணங்கி, "எனக்கும் அர்ச்சுனனுக்கும் ஒரேமாதிரிப் பயிற்றி அஸ்திரங்களைத் தந்தையார் தந்துள்ளார். ஆயின் யுத்தத்தில் விடப்பட்ட அஸ்திரங்கள் செயலிழக்க, அர்ச்சுனனால் விடப்பட்ட அஸ்திரங்கள் வலியுடையனவாகின்றன. இதன் காரணம் என்ன?" எனக் கேட்டான். அவர் பின்வருமாறு விடை பகன்றார். "நரநாராயணராகிய அர்ச்சுனன் கிருஷ்ணனிருவரும் அம்பிகைபாகனைப் பாணலிங்கமாகிய இட்டலிங்கத்தை அங்கலிங்கமாய்ப் பூசிப்பதாலும், அசுவத்தாமன், சந்தனம் முதலியவற்றால் உடனுக்குடன் லிங்கவுருச் சமைத்துப் பூசித்து உடன் விடுவதாலும் ஏற்பட்ட வேறுபாடே இதற்குக் காரணம்." இவ்விடையிலிருந்து அங்கலிங்க பூசை, பஹிர்லிங்க பூசையினும் ஆயிரம் மடங்கு அதிக பலனுடையது என்பதை அறிந்த அசுவத்தாமன் உடனே வேதவியாசரிடம் அங்கலிங்க தீட்சை பெற்றுச் சிவபூசை செய்து முத்தியடைந்ததாக வியாசபாரதங் கூறும்.

வேதங்களிற் பதிதர்மம் பசுதர்மமென்றிரண்டு தர்மங்கள் சொல்லப்பட்டுள்ளன. பூர்வகாண்டத்திற் சொல்லப்பட்ட ஜ்யோதிஷ்டோமாதி கர்மங்கள் பசுதர்மங்களெனப்படும். உத்தரகாண்டத்திற் சொல்லப்பட்ட சிவலிங்கதாரணம், சிவலிங்கார்ச்சனை, சிவத்தியானாதிகர்மங்கள் பதிதர்மங்கள் எனப்படும். பசுதர்மங்களை அனுட்டிப்பனால் அநித்தியமான சுவர்க்காதி பதவிகள் சித்திக்கின்றன. பதிதர்மங்களையனுட்டிப்பதனால் நித்தியமான கைவல்ய பலன் சித்திக்கின்றது. ஞான காண்டத்திற் கூறியவீர சைவ தர்மங்கள் (பதிதர்மங்கள்) பிரம்ம வித்தைக்கு உபயோகிகளாவதன்றி, சுவர்க்காதி அநித்திய பலனையுண்டாக்கும் ஜ்யோதிஷ்டோமாதி (பசு) தர்மங்கள் உபயோகிகளாவதில்லை. பசு தர்மங்களையனுட்டிப்பதனால் புண்ணியங் கிடைப்பினும் முத்தி கிடைப்பதில்லை. பதிதர்மத்தை அனுட்டிப்பதனால் புண்ணியங் கிடைப்பதோடு சமுசார பந்தமும் முற்றிலும் நீங்கும். ஆகவே முக்திசாதனமாகிய சிவலிங்கதாரணாதிகர்மங்களே வீர சைவ தர்மங்களாம்.

"ஏகேந ஜந்மனாமுக்திர் வீராணந்து மகேஸ்வரி" எனச் சிவபெருமான் உமையம்மைக்குக் கூறியாங்கு அங்கலிங்கார்ச்சனையினால் ஒரு பிறப்பிலேயே முக்தி கிடைக்கிறது.

மார்க்கண்டேயர் சிவலிங்கத்தை அங்கலிங்கமாக்கிய பொழுதே :- அஃதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டித் தழுவியபோதே யமபயந் தீர்ந்து நித்தியத்துவம் பெற்றார். காஞ்சி காமகோடியம்மையார் ஏகம்பமாநதி தம் ஆத்ம நாதரை அள்ளிப்போகாதபடி கட்டித் தழுவி முலைத் தழும் பேற்றியபோதே அர்த்தநாரியானார். இதனைக் கடவுண்மாமுனிவர் "நீலநிறத் திருமாதின் வட்ட முலைத் தழும்புபட வந்தணையுந் திருமார்பா" என வந்தியம்மை வாயில்வைத்துச் சோமசுந்தரரைப் போற்றுகின்றதினால் அறியலாம். மாணிக்கவாசக சுவாமிகளும், "அங்கலிங்க வேகாந்தமெற்களித்த புத்தமுதைப் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ" என்று திருவாசகம் பாடுவதிலிருந்து அவரும் அத்துவித முக்தியடையக் காரணமாயிருந்தது அங்கலிங்கதாரண பூசையேயென்பது வெள்ளிடைமலை.

"அற்பக் கிரியா வெகுபலம்" என்கிறது வேதம்.

"ஏலவுடம்பிடங்கொண்டாய்" என்கிறது மணிவாசகம்.

குருவானவர் சீடனது பக்குவ நிலையையுணர்ந்து அவனது ஆத்மாவை லிங்க சொரூபமாக்கித் தமது கைக்கு வரச் செய்து அதில் இறைவனைச் சாந்நித்தியப்படுத்தி. அவ்விட்டலிங்கத்தை " உனதுயிருள்ளவரையும் இதனைவிட்டுப் பிரியாதே; நீ அனுபவிப்பனவெல்லாவற்றையும் இவ்விட்டலிங்கத்துக்கு அர்ப்பித்தே அநுபவி. நித்தியமும் இயன்றமுறை பூசிப்பாயாக" என்று சொல்லிக் கொடுக்கப் பெற்றுக் கொண்டு குருவுபதேசப்படி இட்டலிங்கார்ச்சனை செய்து வருபனே உண்மை வீரசைவனாவான். அவனது சந்ததியினரும் அப்படியொழுகினால் அவர்களும் வீர சைவரே. இந்நிலையிலுள்ளவருக்கு வருணாச்சிரம தர்மங்களில்லை. பஞ்சசூதகங்களுமில்லை. அவர்களுடைய உடம்பில் என்று லிங்கதாரணஞ் செய்யப்பட்டதோ அன்றே சிவாலயமாய் விடும். சிவாலயத்திற்கு நெருப்பு வைப்பார் உண்டா? இல்லையே. அதுபோல் வீர சைவனின் சிவாலயமாகிய உடம்பைத் தீக்கிரையாக்காது புதைக்கவேண்டும். அன்றியும் "நிலத்திடை ஐந்தாய் நிகழ்ந்தாய் போற்றி" என்ற மணிவாசகத்துக்கமைய நிலம், நீர், தீ, வளி, வான் எனும் ஐம்பூதங்களுமமைந்த நிலத்திலேயே ஐம்பூதங்களாலாய இவ்வுடம்பை அடக்கஞ் செய்யின் அவ்வுடம்பின் பஞ்சபூத மூலகங்கள் நிலத்திலுள்ள பஞ்சபூத மூலகங்களுடன் கலக்கும். அதை விடுத்துத் தீயிடை எரிப்பின் தீயிலுள்ள மூன்று மூலகங்களுடன் செறிந்தன போக மீது இரு மூலகங்களுக்காக நிலத்தையும் நீரையும் நாடவேண்டியுள்ளது. இட்ட, பிராண, பாவலிங்கார்ச்சனையினால் உடம்பு சிவலிங்கமாகிறது. அவ்வுடம்பாகிய சிவலிங்கத்துக்குச் சிவபூசை செய்து புதைக்கவேண்டியது. பின் குளியிலுள்ள உடம்பாகிய சிவலிங்கத்தின் அறிகுறியாகக் குழியின் மேல் சிவலிங்கதாபனம் உறுதியற்றோ உறுதியாகவோ செய்யவேண்டும். அவ்வுடம்பிற் குடியிருந்த சீவசோதி சிவசோதியுடன் கலக்கும் பாவனையாக சிவபூசையில் தீபமேற்றி ஆலயத்து மூலவரின் திருவடியிற் சேர்ப்பிக்கவேண்டும்.

யுகந்தோறும் சிவபெருமானின் ஐம்முகங்களினின்றும் ஐங்குரவர்கள் சிவலிங்கோற்பன்னராகத் தோன்றிச் சிவ தீட்சையளித்துச் சிவ ஜங்கமரைப் பாதுகாப்பர். சீடனது அஞ்ஞானத்தை நீக்கி மெஞ்ஞானத்தையளிப்பவரே உண்மைக்குருவாவர்.

பஞ்சலிங்கோற்பன்னருள் ஒருவராகிய ஸ்ரீ இரேணுகாசாரியர் வான்வழியே வந்து இலங்கா தீவத்துச் சிரஞ் சீவியாய் இருந்து விபீஷணனுக்குச் சிவலிங்க தீட்சையும் நாடெங்கும் ஒரே முகூர்த்தத்தில் மூன்று கோடி சிவலிங்கப் பிரதிட்டையுஞ் செய்து திரும்பினர். அவ்வழியே இலங்கையில் வீர சைவம் வளர்ச்சியுற்றது. அவ்விரேணுகா சிவாசாரியரிடத்தேயே சிவமூர்த்தமாகிய அலங்கார சொரூபனும் பிரம புத்திரனை தக்கனதுயாக சங்கரமூர்த்தி வீரபத்திரப் பெருமான் லிங்க தீட்சை பெற்று லிங்காயத்ததின் பாதுகாவலரானர். அப்பெருமானைத் தம் குலதெய்வமாகவும் குருமூர்த்தமாகவுங் கொண்ட குருகுல வம்சத்தார் அப்பெருமானுக்குத் தம்வசிப்பிடமாகிய குரக்கன் துறையில் (காங்கேசன்துறை) கோயிலமைத்து அவரை எழுந்தருளச் செய்து வழிபட்டுய்தி பெறுவாராயினர். அவர்களிற் சிலர் தற்கால நவநாகரிகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழல் காற்றிலகப்பட்டுத் தம்பரம்பரை வீரசைவ ஒழுங்கு முறைகளைக் கைவிடினும் பலர் தம் பழைய லிங்காயத சைவ ஒழுங்கின்படியே வாழ்கின்றனர். அவர்களை குரக்கன்துறை வீரபத்திர குருமூர்த்தம் காத்து அருள் பாலிக்கின்றார்.

ஸ்ரீ இரேணுகாசாரியரின் வருகையால் இலங்கையில் வீரசைவ குரு பீடமொன்று ஸ்தாபிதமாயிற்று. மட்டக்களப்புக்குத் தெற்கே 72 மைல் தூரத்திலுள்ள திருக்கோயிலும் திருஞானசம்பந்தரால் தேவாரத் திருப்பதிகம் பாடப்பெற்ற திருக்கோணேச்சுரமும், வீரசைவக் குருமாரின் ஆராதனைத் தலங்களாயின. மட்டக்களப்புத் திருக்கோயிலிலுள்ள மூலவர், இந்திரனால் முசுகுந்தச்சக்கரவர்த்திக்குக் கொடுக்கப்பட்ட 25 சோமாஸ்கந்த மூர்த்தங்களிலொன்றாகும். அச் சோமாஸ்கந்த லிங்க மூர்த்தத்தை ஆராதிக்கும் லிங்காயத ஜங்கமக் குருவுக்கு, அத்திருக்கோயிலுக்குச் சமீபத்தேயுள்ள தம்பட்டை யென்னும் கிராமம் மானியமாக விடப்பட்ட செய்தி இன்றும் அக்கிராமத்து வாழும் ஜங்கமக்குரு பரம்பரையினரிடமிருக்கும் செப்பேட்டிலிருந்து அறியலாம். திருக்கோணச்சுர ஆராதனை செய்த ஜங்ககமக் குருபரம்பரையைப் பற்றிய விபரம் 1802ம் ஆண்டு திருக்கோணமலையைப் பிடித்த ஆங்கில அரசிரம் அமைந்துள்ளது. அப்பரம்பரையினர் யாழ்ப்பாணத்துக்கும் பரவினர். அவர்கள் யாழ்ப்பாணத்திலே ஒரு வீரசைவ குரு பீடத்தை ஸ்தாபித்தனர்.

யாழ்ப்பாண வீரசைவ குருபீடம் ஸ்ரீ இரேணுகாச்சிரமத்தையமைத்து வண்ணார் பண்ணையில் அமர்ந்து தென்னிந்திய கும்பகோணத்து வீரசைவக் குருபீடத்துடனிணைந்து அதன் கீழமைந்து இலங்கையில் வீரசைவத்தை வளர்த்துவரலாயிற்று. அதன் 108வது குரு பீடத்தில் சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக்குருக்களென்னும் கைலாச தேசிகர் அமர்ந்துள்ளார். அக்குருவானவர் வீரசைவத்தை யாழ்ப்பாணத்தில் விசேடமாகவும் இலங்கையிற் பொதுவாகவும் வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். தென்னிந்திய மைசூர் இராச்சியத்திலுள்ளார் பெரும்பான்மையோர் வீரசைவரே அவர்களுடனும் கும்பகோண வீரசைவவக் குரு பீடத்துடனும் நெருங்கிய தொடர்பு கொண்டு தாம் நல்குரவெய்தியக்கண்ணும் சமய வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாகவுள்ளார். வீரசைவ நித்திய கர்ம விதியும், லிங்கோபநிடதமும் தமிழில் வெளிப்படுத்தியுள்ளார். அவரைக் குருவாகக் கொண்ட குரக்கன்துறை ஸ்ரீ வீரபத்திர குருசுவாமி அடியார்கள் அவரது 75வது வயதுப் பூர்த்தி விழாவைக் கொண்டாடுவதும் இம்மலரை வெளியிடுவதும் மிகப் பொருத்தமானதே. குருமலரடி துணை வீரபத்திர குருசுவாமி துணை. வீரசைவம் வாழ்க. ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லொழுக்கங்கள் ஆறு.

தொகுப்பு: சி. ஆறுமுகம் வெள்ளவத்தை - கொழும்பு.

ஆசை வசப்பட்டு அல்லலுறும் மானிடர்களை ஈடேற்றுவான். அரும்பெரும் தவ முனிவர்கள் காலத்துக்குக் காலம் அவதரித்துக் காலத்துக்கும் இடத்துக்கும் சந்தர்ப்பத்துக்கும் தகப் பல பல போதனைகளைப் போதித்துச் சென்றனர்.

சைவ சமயாசாரியர்கள், புத்தபகவான், கிறீஸ்துநாதர், முகம்மது நபி ஆதி சங்கரர், ஸ்ரீ கிருஷ்ணபகவான் போன்ற மகான்கள் போதித்த போதனைகளே இன்று உலகிலுள்ளவர்களுக்கு வழிகாட்டிளாகக விளங்குகின்றன. பஞ்சமா பாதகங்களாகிய கொலை,களவு,கள், காமம், பொய் என்பவற்றைக் கடியவேண்டுமென்று கூருத பெரியோர்கள் இல்லையெனலாம். இவ்வைந்தினையுஞ் செய்யாமையே பஞ்ச சீலம் எனப் புத்த சமயம் விதந்தோதும். இதனைப்பற்றிப் பிறிதோரிடத்தில் விளக்கப்பட்டிருக்கின்றது. ஆண்டு கண்டு கொள்க.

திரிகரண சுத்திபெற்றவனே பூரண மனிதனுதற்கு அருகதையாகின்றனன். அவனிதயத்திலேயே இறையருள் இடையருது பிரகாசித்துக்கொண்டிருக்கும். ஏனையோரின் திரிகரணசுத்தியெவ்வளவுக்கிருக்கிறதோ இதற்குத் தக்கவே அவர்கள் அவனருளைப் பெறுவர். மேலே கூறிய பஞ்ச சீலங்களைக் கடைப்பிடித்து ஒழுகுபவர்கள் உண்மையாக நன்னெறியிலேயே செல்கின்றனர். மக்களாகப் பிறந்தோர் யாவரும் உய்வடைய வேண்டுமாயின் இவ்வைந்து சீலங்களையும் கடைப்பிடித் தொழுகுதல் அவசியமாகும். இச்சீலங்கள் சமூக வாழ்வினைச் சீர்பெற செய்தலிலேயே பெரும்பாலும் சாதகமாகும். ஒருவன் வாயாற் பொய் கூருமல் வாழமுடியும். கையாற் களவு செய்யாது வாழமுடியும். கொலையைத் தவிர்த்தும், கள்ளைக் கழித்தும், பிறர் மனைவியைத் தீண்டாமலும் வாழலாம். இவையெல்லாம் காயத்தாலும் வாக்கினுலும் அநுட்டிக்கத்தக்க சீலங்களே, ஆயின் எத்தனை மனிதர்கள் தங்கள் மனத்தினுல் இவற்றைக் கடைப்பிடிக்கத்தக்கவர்கள்? மிகமிகச் சிலரேயாகும். மாநிலம்போற்றும் மகாத்மா காந்தியே தன்னுல் சினத்தை அடக்கமுடியவில்லையென்று பலமுறை கூறுயிருக்கிருர், காமவாசையையடக்க அவர் பட்ட கஷ்டம் யாவர்க்கும் தெரிந்ததேயாகும். ஏறக்குறைய இருபது வருடங்களாசத் தென்னுப்பிரிக்காவிலிருந்து பிரமச்சாரிய வாழ்வினை மிக விழிப்பாக வாழ்ந்து கடைப்பிடித்த அவர் பம்பாய் திரும்பியபோது ஒருமுறை பாலியகால வாசனைப் பதிவால் காமத் தீக்காளாளுரென அவரே கூறியிருக்கிருர். அருட்பாடல்கள் பல பாடிய திருவருட் செல்வர்கள் கூற்றுக்களைக் கவனியுங்கள். 'எத்தனை புத்திசொன்னுலும் இழிந்த மனமே நீ பிறந்த இடத்தையே நாடுகின்ருய்' (பட்டினத்தார்) கூர்வாட் கண்ணியர் கொடுமையிற்படாது கூர்ந்தருள் செய்வாய் அருணசலா! (ரமண மகரிஷிகள்) ஆகவே திரிகரணங்களுக்குள் மனத்துக்கண் மாசிலாது வாழ்தல் மட்டுமே உண்மை நெறியாகும். அதுவே தவமாகும். ஏனைய இரண்டும் இந்நெறிக்கரண் செய்வனவாகும். இந்த மனத்தினுள் மிகச் சூக்குமமாக இயங்கி மனிதனை மயக்கும் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம். ஆகிய ஆறினதும் இன்மையே ஆறு சீலங்களாகும்.

இவ்வாறு (உள்ளத்தின்கண் நிகழ்வதனுல் உட்பகை என்பர்) இப்பகையை வெற்றிகொள்பவனே மாவீரன். இதனுலன்றே கம்பநாடரும்,

வெள்ளநீ ருலகினில் விண்ணினுகரில்
தள்ளரும் பகையெலாம் தவிர்த்து நின்றயான்
கள்ளரிற் கரந்துரை காம மாதியாம்
உள்ளுறை பகைளுருக் கொதுங்கி வாழ்வேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று புறப்பகையெலாம் ஒழித்து நாட்டினைக் காத்த தசரதன் இனித் தன் உயிர்க்குறுதி பயக்கும் தவத்தினை மேற் கொள்ளத் துணிந்ததை நயம்படக்கூறியுள்ளார். 'என் நாட்டுக்கு வெளியே வெளிப்பகையாய் வாழ்ந்தபெருஞ்சேனைபலம் படைத்திருந்த, மாற்றரசரான பல புறப்பகைவரை அஞ்சியொதுங்காமல் எதிர்த்து வெற்றி பெற்றிருக்கின்ற யான் என் நாட்டுக்குள்ளே மறைந்து வாழ்கின்ற சிறு கூட்டபலமேயுள்ள சில திருடர்போல, என்னகத்துக்குள்ளே மறைந்து வாழ்கின்ற காம குரோத உலோப மோக மத மாற்சரியங்களான சில உட்பகைவருக்கு அஞ்சியொதுங்கியிருந்து உயிர் வாழ்வேனோ? வாழேன் என்பதே இப்பாவின்பொருளாகும்.

இந்திரியங்கள் தங்கள் சேட்டைகளைச் செய்யாது வாக்காலும் செயலாலும் தடுத்து நிறுத்தலாம். சிறைச்சாலையில் இருப்பவனுக்கு இந்திரியார்த்தங்களைப் பார்க்கவும், கேட்கவும், நுகரவும் முடியாது; விடயங்களையெல்லாம் விட்டு அவன் பலவந்தமாக விலக்கப்பட்டிருக்கிறான். ஆனாலும் அவைகளை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை அவன் மனதில் உதித்துக்கொண்டே இருக்கிறது. இதை வேறெவரும் அடக்க முடியாது. புலனடக்கம் முதலிய தபசுகளைச் செய்பவனது நிலைமையும் இத்தகையதே.

பழைய வாசனைகள் மிகச் சூட்சுமமாக இருந்து கூத்தாடும் இவ்வாசனைகளைத் தவமாகிய தீயிலேயிட்டு வறுக்க வேண்டும். இதனைத்தான் சுடச்சுடரும் பொன்போல ஒளிவிடும் என்றனர். இந்திரியவயமயங்காத மனிதனே மேலோன் ஆகின்றான். மனிதனின் அல்லது சமூகத்தின் பண்பாடு அவ்வவரிடத்துக் காணப்படும் புலனடக்கமேயாகும். மனம் போன போக்கெல்லாம் போதல் மாண்புடைமையாகாது. இதன் விருத்திமுறையையும், காரணங்களையும் கவனிப்போம்.

தன் விருப்பப்படி எண்ணிக்கொண்டு சாதாரண மனிதன் வீதியொன்றினில் செல்கின்றான். ஆங்கு பல காட்சிகளைக் காண்கிறான். கண்ணாடியில் தோன்றி மறையும் காட்சிகளைப் போன்று அவன் மனத்தில் அக்காட்சிகள் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டு இருக்கின்றன. அவைகளுக்கிடையில் ஓர் கட்டழகுள்ள வடிவம் தோன்றுகிறது. அதைக் கூர்ந்து பார்க்க மனம் விரும்புகிறது. திரும்பவும் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் எழுகிறது. பலமுறை பார்க்கிறான். அதைப்பார்ப்பதிலும், பின் நினைப்பதிலும் மகிழ்வு உண்டாகிறது. நினைத்து நினைத்து அவ்வழகு வடிவத்தில் விருப்பம் வருகிறது. விருப்பம் தடித்து. வருதலே பற்று எனப்படும். பார்த்தல் என்ற ஒரு இந்திரிய நிகழ்ச்சி ஏனைய இந்திரிய நிகழ்ச்சிகளுக்கும் இடந்தேடி விடுகிறது. அவ்வடிவத்தைத் தனதாக்கிக் கொள்ளத் தீர்மானித்து விடுகிறான் அவன். இத்தீர்மானமே காலம் அல்லது ஆசை எனப்படும். எரிந்து கொண்டிருக்கும் தீயில் ஊற்றிவிடும் எண்ணெய் போன்று சிந்தனைகள் காமத்தை வளர்க்கின்றன. காமத்தீயால் மனிதன் தீர்க்கப்படுகிறான். இத்தீயினை வளர்க்காது. எண்ணங்களைப் பொருள்களிடத்துப் பற்றவிடாது, பார்ப்பதெல்லாம் சிவரூபமாகப் பார்த்து பழகல் வேண்டும். இதுவே காம மின்மையாகும்.

இவ்வாறு தனது ஆசைகளைப் பூர்த்தி செய்ய எத்தனிக்கும் போது உலகம் அதற்கு முட்டுக்கட்டையாக நிற்கும் அப்போது ஆசை தடைப்படுகின்றது. தடைப்படுத்தப்பட்ட ஆசை சினமாக வடிவெடுக்கிறது. இது குரோதம் எனப்படுகின்றது. சினம் பைத்தியத்துக்குச் சமனானது. சினம் தற்காலிகமாகவுள்ளது. பைத்தியம் நிலைத்துள்ளது. இவ்வளவுதான் இவற்றின் வேறுபாடு இத்தீய குணத்தினை அகற்ற வேண்டும் இதனாலன்றோ ஔவைப்பிராட்டியாரும் „உள்ளங் கவர்ந்தெழுந்தோங்கு சினம் காத்துக்கொள்ளும் குணமே குணமென்க" என்றார்.

காமம், வெகுளி (கோபம்), மயக்கம் என்னும் இவை மூன்றினையும் இல்லாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனுக்கு எவ்வித நோயும் இல்லையென்பதும் சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும் ஏமப்புணையைச், சுடுமென்பதும், பொய்யா மொழியன்றோ! ஆகவே கோபமின்மையே இரண்டாவதாக இருக்கவேண்டிய நல்லொழுக்கமாகும்.

கோபத்தின் விளைவு மனக்குழப்பம். காற்றடித்து அலைகள் எழும்பாத கடலின் அடித்தரை நன்றாகத் தெரியும். அலையெழுந்து கொந்தளிக்கும் கடல் எல்லாம் ஒரே அமளியாகவிருக்கும். ஆழமான இடமும் தெரிவதில்லை ஆழம் குறைந்த இடமும் தெரிவதில்லை. கற்பாறைகளுள்ள இடமும் மணற்பாங்கான இடமும் ஒருமாதிரித்தான் தோன்றும். சினத்தினால் மனக்குழப்பம் அடைந்த மனிதனுக்கு நன்று இது. தீது இது என்ற நினைவு இருப்பதில்லை. தன்னனுபவத்தாலும் பெரியோர் வாக்குகளாலும் பெற்ற நல்லறிவுயாவும் ஞாபகத்திலிருந்து விலகிவிடும். மறதியினால் விவேகம் அழிகிறது. இதனால் ஆன்ம நாசம் உண்டாகிறது.

வாழ்க்கையில் சீவராசிகளுக்குச் சகல தேவைகளும் இறைவனால் படைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைவரை இவ்வுலகினை ஓம்பிய இறைவன் இனி எங்களைக் கைவிட்டு விடுவாரா? இல்லை, இல்லை. பேய் மனம் பித்தலாட்டங்கொண்டு தன் தேவைக்கு மேலதிகமாகப் பொருள்களைத் திரட்டுகின்றது. எவ்விதமாயினும் பொருளைத் தேடிவைக்கப் பார்க்கிறது. இந்த நினைவு கூடுதலாகப் பதியப்பதிய அளவுக்கதிகமாகத் தேடுவதோடு மட்டும் நில்லாமல், தேவைப்பட்டு அதனால் கஷ்டமுறும் மக்களுக்கு ஈயாமலும் இருக்கப் பழகிக் கொள்கின்றது. தான் இன்பத்தைப் பெற மற்றவர்களுக்குத் துன்பமும் செய்ய முற்படுகின்றது.

இவ்வீயாமையே ஈனச் செய்கையாவுள்ளும் சடைப்பட்ட ஈனச் செய்கையாகும். இதனாலன்றோ இட்டார் பெரியோர் என்றும் இடாதார் இழிகுலத்தோர் என்றும் கூறுவர். காமமின்மை, கோபமின்மை ஆகியவைகளோடு அடுத்ததாகச் சிறந்தகுணம் யாதெனில் உலோபமின்மையாகும்.

கோபம் வந்தவன் மனம் அமைதியுறாதாகையால் அவனுக்கு மனக்குழப்பம் உண்டாகின்றது என்றும், மனக்குழப்பத்திலிருந்து ஞாபகமின்மையும், ஞாபகமின்மையிலிருந்து புத்தி நாசமும் உண்டாகிறதென்பதையும் அறிந்தோம். இப்புத்தி நாசமே மோகமாகும். இம்மோகத்தினால் ஒருவன் நித்யா நித்யவஸ்து விவேகமின்றித் தவறான நெறியில் செல்கிறான். இவனால் ஆத்மதியானம் செய்யமுடியாது ஆன்மதியானம் செய்யாதவனுக்கு ஆன்மசொரூபஞானமில்லை. ஆதலால் முன் கூறிய மூன்று சீலங்களும் இந்த மோகமின்மையாம், சீலத்தையும் நான்காவதாகக் கடைப்பிடிக்க வேண்டியது ஒவ்வொரு சாதகனதும் கடமையாகும்.

ஆணவச் செருக்கு அறியாமையால் உண்டாகின்றது. "நான்" என்னும் அகம்பாவமே நாம் அடையும் துன்பங்கள் எல்லாவற்றிற்கும் மூலகாரணமாகும். இச்செருக்கையே மதம் என்பர். இதனையொழிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தவே "மதமானபேய் பிடியாதிருக்க வேண்டும்", என்று இராமலிங்க சுவாமிகளும் பாடியுள்ளார். மோகத்தால் எழுவதே மதம். மதமின்மை மிகச் சிறந்த நல்லொழுக்கமாகும். இதுவே ஐந்தாவதாகும்.

மனிதனிடத்தில் இடையறாது எழும் ஆசையானது பொறாமைக்கு ஏதுவாகின்றது. தான் சம்பாதித்தலும் கூடுதலாக இன்னொருவன் சம்பாதிக்கிறான் என்றதும் மாற்சரியம் (பொறாமை) முளைகொள்கிறது மாற்சரியம் அடைந்த ஒருவன் பஞ்சமாபாதகங்களும் செய்வதற்கு அஞ்சுவதில்லை. எத்துணை நலமிருப்பினும் மாற்சரியம் வந்து விட்டால் அத்தனையும் அழிந்துவிடும். ஆகவே நல்லொழுக்க வாழ்வினை விரும்புகிறவர்கள், நன்னெறியைக் கடைப்பிடிப்பவர்கள், ஞானத்தையடைய விரும்புகிறவர்கள், திருவடி யாத்திரை செய்கிறவர்கள் ஆகிய எல்லோரும், காமமின்மை, குரோசதமின்மை, உலோபமின்மை, மோகமின்மை, மதமின்மை, மாற்சரியமின்மையாகிய ஆறு ஒழுக்கங்களையும் தவறாது கைக்கொள்வார்களாக. காமாதி குணமாறும் கட்டவிழுமாகில்' பேரின்பம் தானே நிலைத்து விடும்.

சிவ, சிவ.

மலர் 23 – இதழ் 3 – சிவதொண்டன் (பெப்ரவரி – மார்ச் 1959,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கீரிமலை ஸ்ரீ இரேணுகாச்சிரமத்திற்கு இரம்பாபுரி, வீரசிம்மாசனத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஸ்ரீ இரேணுகசிவாசாரியர் விக்கிரகம் காங்கேசன்துறை குரக்கன்துறை ஸ்ரீ வீரபத்திர குருசுவாமி ஆலயத்தில் தங்கிநிற்கும் காட்சி.

(இவ்வாலயம் மிகப் பழமை வாய்ந்ததாகவும் வீரசைவர்களின் விசேட வழிபாட்டுத் தலமாகவும் விளங்குகின்றது.)



காங்கேசன்துறையின் அருள்மூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் குரக்கன்துறை ஸ்ரீ வீரபத்திர குருசுவாமியின் ஆலயத்தைத் தரிசிப்பதற்காக 1969-ம் ஆண்டு மைசூரிலிருந்து வருகை தந்த "அந்தர் ஜோதிசி வேதமூர்த்தி வீரய்யசுவாமி சாஸ்திரிமூத் அவர்களும் குருமகாசந்நிதானம் அவர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நமசிவாய.

# ஏன் பிறந்தேன்? பிறவாதிருக்க!

## இந்நெறிகளுக்குரிய சாதனைகள்

இராஜயோகி, பிரசன்னதாருக, அந்தர்ஜோதிசி, வேதமூர்த்தி, விரய்ய சுவாமிஜி, சாஸ்திரிமுத்

ஸ்ரீகுரு தாருகாஸ்சிரமம்

41/3, 4-வது கட்டடம், இராஜாஜி நகர், பங்களூர் - 560010.

- உண்மை வெற்றியுடன் ஒளிர்வதாக.
- நேர்மையும் நல்லொழுக்கமும் வளர்ந்தோங்குவதாக.
- சன்மார்க்கமும் பக்தியும் ஓங்கி வளர்வதாக.
- ஒழுக்கமும் நேர்மையும் ஒருவரின் வாழ்க்கை வரலாருய் அமைவதாக.
- அன்பும் தாய்நாட்டின் பற்றும் ஓங்குவதாக.
- கொடிய பழக்க வழக்கங்களை தவிர்.
- உன்னிலுள்ள குரோதத் தன்மையை ஒழி.
- சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்றித் தர்மத்தை நிலைநாட்டு.
- அட்டூழியங்கள் அழிவதாக.
- அளவுக்கு மீறிய ஜெகத்குருவின் பிணைப்பு உனது சமூகக் கடமைக்குக் குந்தகமாக அமையும்.
- உழைப்பு உயர்வைத் தரும்.
- கடமை உணர்வு உன்னுள் உதயமாவதாக.
- கைலஞ்சம் பெறுவது ஒழியட்டும்.
- உதவியும் மீட்பும் பின்தங்கிய வகுப்பினருக்கும் அளிப்பாயாக.
- அறிவினர் ஞானமும் தன்னலமற்ற சேவையும் பெறுவதாக.
- கருத்தொருமித்த கணவன் மனைவியின் பிரார்த்தனையும் விருப்பமும் நிறைவேறுவதாக.
- ஜீவகாருண்யமானவனுக இரு.
- ஜனநாயக நாட்டின் நல்வாழ்விற்குத் திடமும் சக்தியும் ஒருங்கிணைந்த நிர்வாகமும் மிக அவசியம்.
- விதேசிய கலாச்சார ஊடுருவல் நமது தர்ம வளர்ச்சிக்குக் குந்தகமாக அமையும்.
- கண்ணியமும் கட்டுப்பாடும் எம்முள் மென்மேலும் ஒளிர்வதாக.
- நாட்டின் சட்டமும் விதிகளும் வேதவாக்காய் அமைவதாக.
- எமது நாடு மேலும்மேலும் வளர்ந்து ஓங்குவதாக.
- நாட்டின் சகல துறைகளிலும் திடமான அரசாங்க நிர்வாகம் அமைவதாக.
- மெய்வருத்தம் பாராமல் எமக்கு வழிகாட்டும் குருவின் தன்மை ஓங்குக.
- சன்னியாசிகளுக்குத் துறவறமே உள்ளுணர்வாக அமையவேண்டும்.
- தெய்வாம்சமும், பரவசமூட்டும் தெய்வ சிந்தனையும் ஒருவரைப் பிறவிக் கடலினின்றும் நீக்கும்.
- அன்பும், அமைதியும் சீரும் பெற்று மனிதகுலம் சிறப்புடன் வாழ்வதாக.

சத்தியம் — சிவம் — சுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவக் கிரியைகள்

ந. தம்பிப்பிள்ளை
(இளைப்பாறிய நிர்வாகசேவை உத்தியோகத்தர்)

வேத சிவாகமங்கள் பரம் பொருளினால் அருளிச் செய்யப்பட்டன. வேதங்கள் வழிபாட்டினைக் கூறுவன. சிவாகமங்கள் வழிபாட்டு முறைமைகளைக் கூறுவன. இறைவனை மந்திரம் தந்திரம், யந்திரம் ஆகிய மூன்று முறைகளாலும் வணங்கலாம். இவற்றுள் மந்திரம், தந்திர முறை, யந்திரமுறை ஆகியவற்றில் விரவிக்கிடப்பது மந்திரங்களைத் தகுதியுடைய குருமூலமாகப் பெற்றால்தான் பயன் தரும் என்பது நியதியாகும். சைவக்கிரியைகளோடு மந்திரம் பெரிதும் விரவிக்கிடக்கின்றது. ஆகவே சைவக் கிரியைகளை முறைப்படி அனுஷ்டிக்கத் தக்க குரு ஒருவர் தேவைப்படுவர் என்பது பெறப்படும்.

சைவக் கிரியைகளைச் செய்து வைக்கும் குரு தகுதியுடையவராயிருத்தல் அவசியம். அவற்றைச் செய்து வைக்கும் பயிற்சி, அவற்றின் உண்மைத்தத்துவங்களை உணர்ந்திருத்தல் மிக முக்கியம். இவை இல்லாதுபோனால் அக்கிரியைகளில் பக்தி சிரத்தை இல்லாமற்போய்ப் பயன் பெறமுடியாது போகின்றது.

சைவக்கிரியை ஆன்மார்த்தம், பரார்த்தம் என இருபிரிவினையுடையது. இவற்றில் ஆன்மார்த்தம்—தன் நன்மை கருதிச் செய்யப்படுவது. பரார்த்தத்துள், திருக்கோயில் அமைத்தல் வழிபாட்டிற்குரிய மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்தல், பூசைகள், உற்சவங்கள் ஆகியன அடங்கும். ஆன்மார்த்தம், பூர்வம், அபரம் என இருவகைப்படும். இவற்றுள் பூர்வக்கிரியையாவது, ஒரு உயிர் கருவில் உற்பத்தியாகி மரணிக்கும் வரையும் செய்யப்படும் கிரியைகளைக் குறிக்கும். அபரக்கிரியையாவது மரணம் தொடக்கம்சிரார்த்தங்கள்அமாவாசை தருப்பணம் வரை செய்யப்படும் கிரியைகளைக் குறிக்கும். பரார்த்தக் கிரியைகள், நித்தியம், நைமித்திகம், காமியம் என்னும் மூன்று பிரிவுகளையுடையதுபோல, ஆன்மார்த்தக் கிரியையும் நித்தியம் நைமித்திகம், காமியம் என மூன்று பிரிவுகளையுடையது. ஆன்மார்த்த நித்தியகிரியையில் தியானம். சந்தியாவந்தனம், சிவபூசை முதலியனவும், ஆன்மார்த்த நைமித்திகக் கிரியையில் தீட்சை, ஆசார்யாபிஷேகம், அந்தியேஷ்டி முதலியனவும், ஆன்மார்த்த காமியக்கிரியையில் விரதம் சாந்தி முதலியனவும் அடங்கும்.

சைவக் கிரியைகளை அனுஷ்டிப்பதால் இம்மையில் நல் வாழ்வும் மறுமையில் வீடுபேறும் உண்டாகும் என்பது ஆன்றோர் துணிபு.

அகோர சிவாசாரியர் அருளிய பத்ததியில் இச்சைவக் கிரியைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இப்பத்ததியே தமிழ் கூறும் நல்லுலகில் பெருவளக்கிலுள்ளது.

ஆன்மார்ந்த பூர்வக் கிரியையில், இருது சங்கமனம், கருப்பாதானம், பும்சவனம், சீமந்தம், ஜாதகருமம். கர்ணவேதனம், உத்தாபனம், நாமகரணம், உபநிஷ்கிரமணம்' அன்னப்பிராசனம், பிண்டவர்த்தனம், சௌளம், வித்தியாரம்பம், உபநயனம், காண்டோபகரணம், காண்டமோசனம், சமாவர்த்தனம், விவாகம், தீட்சை, சந்தியாவந்தனம், சிவபூசை, சிவாச்சிரமம் ஆகியன அடங்கும். இப் பூர்வக் கிரியைகளுக்கு அங்கமாக முதலில் சங்கற்பம், விநாயகபூசை, புண்ணியாகவாசனம், பஞ்சகவ்வியம், மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், காப்புக்கட்டுதல், நாத்திமுகம், நவக்கிரகசாந்தி, அக்கினி முகம் வாஸ்துசாந்தி முதலிய கிரியைகள் செய்யப்படுதல் முறையாகும் இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கக் கிரியைகளின் சுருக்கமான விளக்கம் பின்வருமாறு :-

சங்கற்பம் :- நாம் தொடங்கும் கருமத்தைக் கருத்திற்கொள்ளுதல்.

விநாயகபூசை :- நாம் தொடங்கும் கருமம் இடையூறின்றி நிறைவேற விநாயக பூசை செய்து வேண்டுதல் செய்வது.

புண்ணியாகவாசனம் : இது கிரியா மண்டபம், கிரியைக்குரிய பொருள், கருத்தா இவற்றின் சுத்தத்தின் பொருட்டுச் செய்யப்படுவது.

பஞ்சகவ்வியம்:-இது ஆன்ம,வித்தியா, சிவதத்துவங்களின் சுத்தத்திற்காகவும், தீவினைகள், அகால மரணம் இவை நீங்குவதற்காகவும் செய்யப்படுவது.

மிருத்சங்கிரகணம் : தொடங்கும் கருமத்தின் பயன் எப்படியாகும் என்பதை அறிந்துகொள்வதற்காகத் தானியங்களை முளைக்க இடுவதற்கு வேண்டிய மண்ணை எடுத்தல்.

அங்குரார்ப்பணம்:முளையிட்டுவைத்தல்.

காப்புக்கட்டுதல் : தொடங்கும் காரியம் இடையூறின்றி நிறைவேறும் வரையும் காவலாகக் கை மணிக்கட்டில் நூல் முதலியவற்றால் கட்டிக்கொள்ளுதல்.

நாத்திமுகம் : பிதுர் தேவர்களுக்குச் செய்யப்படும் தானமும் வழிபாடும்.

நவக்கிரகசாந்தி :- நவக்கிரகங்களை வழிபடுதல்.

அக்கினி முகம் :- முறைப்படி சிவாக்கினியை உண்டாக்கிக் குறித்த கிரியைக்குரிய தேவர்களைப் பூசித்து வழிபடுதல்.

வாஸ்துசாந்தி : புதிதாக அமைக்கப்பட்ட மண்டபம், ஆலயம், வீடு முதலியவற்றின் அதிதேவதையாகிய வாஸ்து தேவனை வழிபட்டு வேண்டிக்கொள்ளுதல்.

இனிப்பூர்வக் கிரியைகளின் சுருக்கமான விளக்கம் பின்வருமாறு:-

இருது சங்கமனம்:- இருது கால தோஷங்கள் நீங்கிச் சுபமுண்டாகவும், நல்ல சுப வேளையில் விவாகமான பெண்ணை நாயகனுடன் சேர்க்கவும் செய்யும் கிரியை.

கருப்பாதானம்:- பெண் கருத்தரித்தமையை அறிந்து அது நிலை பெறும் பொருட்டுச்செய்யும் கிரியை.

பும்சவனம்:- இது ஆண் குழந்தையுண்டாகும் பொருட்டுச் செய்யப்படும். கிரியை.

சீமந்தம்:- இது கருப்பவதியின் கூந்தலை உச்சி வகிர்ந்து முடியும் படி செய்யப்படும் கிரியை.

கர்ண வேதனம்:- காது குத்துதல்

உத்தாபனம்:- இது பிரசவ அறையிலிருந்து வெளிப்படுவதற்காகச் செய்யப்படும் கிரியை.

நாமகரணம் :- குழந்தைக்குப் பெயரிடும் பொருட்டு செய்யப்படும் கிரியை.

உப நிஷ்கிரமணம்:- இது வீட்டிலிருந்து முதலில் குழந்தையை வெளியே கொண்டு செல்வதற்காகச் செய்யப்படும் கிரியை.

அன்னப்பிராசனம் :- இது குழந்தைக்கு முதலில் சோறு ஊட்டுவதற்காகச் செய்யப்படும் கிரியை.

பிண்டவர்த்தனம்:- இது குழந்தையின் உடல் வளர்ச்சிக்காகச் செய்யப்படும் கிரியை.

சௌளம்:- குடுமிவைக்கும்பொருட்டுச் செய்யப்படும் கிரியை.

வித்தியாரம்பம் :- கல்வி கற்க ஆரம்பிப்பதற்குச் செய்யப்படும் கிரியை.

உபநயனம் :- பூணூல் தரிப்பதற்காகச் செய்யப்படும் கிரியை.

காண்டோபகரணம் :- காண்ட இருடிகளை (வேதாகம மந்திரங்களுக்கு அதிபர்) மகிழ்விக்கும் பொருட்டுச் செய்யப்படும் கிரியை.

காண்டமோசனம் :- காண்டோபகரணத்தில் மூன்று நாள் விரதமனுட்டிக்க வேண்டியவர், நான்காம் நாள் விரதத்தை நிறைவேற்றச்செய்யப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமாவர்த்தனம்:— இது இல்லற நிலையைக் கைக்கொள்ளுவதற்காகச் செய்யப்படும் கிரியை

விவாகம்:— இல்லற தருமத்தைக் கொள்ளத் தகுதியான கன்னிகையைக் கைப்பிடிப்பதற்காகச் செய்யப்படும் கிரியை

தீட்சை:— உண்மை அறிவு பெறும் பொருட்டு ஏற்கப்படும் உபதேசமாகும்.

சந்தியாவந்தனம்:— இது தீட்சை பெற்றவர், காலை, உச்சி, மாலை ஆகிய மூன்று காலங்களிலும் செய்யவேண்டிய வழிப்பாடாகும்,

சிவபூசை;— சிவபெருமானுக்கு பூசை செய்து வழிபடுதல்,

சிவாச்சிரமம்:— சிவனுடைய நிலை எய்தல், (ஆச்சிரமம் — நிலை)

**அபரக்கிரியைகள்**

இவை உத்கிராந்தி, தேகாந்த சூர்ணோற்சவம், அந்தியேஷ்டி, நிவா பாஞ்சலிதருப்பணம், நக்கினதானம், துர்மரணப் பிராயச்சித்தம், புனர்த்தகனம், அத்திசஞ்சயனம், பாஷாணத்தானம், இடபதானம், ஏகோதிஷ்டம்' பஞ்சதசமாசிகம், சோதகும்பசிரார்த்தம், சபிண்டீகரணம், மாசிகம், ஆப்திகம், வருஷசிரார்த்தம், மகாளயம், அமாவாசைத்தருப்பணம், என விரியும்.

உத்கிராந்திக்கிரியை:— உயிர் உடலை விட்டுப் பிரியும்போது செய்யப்படும் கிரியை.

தேகாந்த சூர்ணோற்சவம்:— இது பிரேத ஸ்நானத்தின் பொருட்டுச் செய்யப்படுவது,

அந்தியேஷ்டி:— தூலதேகத்தை விட்டுப் பிரிந்த ஆன்மா பரகதியடையும் பொருட்டுச் செய்யப்படும் யாகமாகும்.

நிவாபாஞ்சலி தருப்பணம்:— பிதுர் பொருட்டுச் செய்யப்படும் சல தருப்பணம் ஆகும். அந்தியேஷ்டிக் கிரியையின் முடிவில் கர்த்தா நீர்க்கரையை அடைந்து செய்யும் கிரியை

நக்னதானம்;— இறந்தவரின் பசி, தாகம், முதலியவற்றை நீக்கும் பொருட்டுத் தகன முடிவில் வஸ்திரம் அரிசி முதலியவற்றைக் குருவிற்குத் தானமாகக் கொடுத்தல்.

துர்மரணப் பிராயச்சித்தம்:— துர்மரணமடைந்தவருக்குச் செய்யப்படும் கிரியை

புனர்த்தகனம்:— மறுபடியும் சுடுதல் என்பதாகும். துர்மரணமடைந்தவருக்குப் பிரதி தேகத்தில் கிரியை முடித்து தகனம் செய்வது.

அத்திசஞ்சயனம்:— தகனம் செய்யப்பட்டவரின் என்பு, சாம்பல் இவற்றை முறைப்படி எடுத்துச் சமுத்திரம் முதலிய தீர்த்தங்களிலிடுதல்.

பாஷாணத்தானம்:— அந்தியேஷ்டி முடிந்தபின் கல்லு வைத்து பூசித்தல்

இடபதானம் ஏகோதிட்டம்:— இது இறந்தவரை மட்டும் குறித்துச் செய்யப்படும் தானமாகும். இறந்த திதிக்குரிய முதல் மாசிகம் இதுவே.

பஞ்ச தசமாசிகம்:— ஏகோதிட்டத்தின் பின் செய்யப்படும் பதினைந்து மாசிகங்கள்.

சோத கும்ப சிரார்த்தம்: இது இறந்த நாள் தொடக்கம் வருஷ முடிவு வரையுள்ள 365 நாட்களிலும் அவ்வான்மா தாகம் தீர்த்துக்கொள்ளும் பொருட்டுச் செய்யப்படும் தானமாகும்.

சபிண்டீகரணம்:— இறந்தவரின் ஆன்மா இறைவன் கதியினை அடைவதற்கு வருஷ முடிவில் அல்லது 12ம் நாள் செய்யப்படும் கிரியை.

மாசிகங்கள்:— சபிண்டீகரணத்தின் பின் செய்யப்படும் மாசிகங்கள்.

ஆப்திகம்:— இது வருஷ முடிவில் இறந்த திதியில் செய்யப்படுவது. இதுவே முதல் வருடச்சிரார்த்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருஷசிராா்த்தம்:— இறந்த மாதத் திதியில் வருஷம் தோறும் செய்யப்படுவது.

மகாளயம்: — இது புரட்டாதி மாதத்தில் அபரபக்கத்தில் இறந்த திதியில் செய்யப்படுவது மகாளயம் என்பது பெரிய ஒடுக்கம் எனப் பொருள்படும்.

அமாவாசை தருப்பணம்:— இது மாதந்தோறும் அமாவசைத் திதியில் பிதா மாதா பிதுர் தேவர்களின் தாகசாந்திக்காகச் செய்யப்படுவது.

இக்கிரியைகள் செய்யப்படும் முறைகளை சிவாகமங்கள், அகோர சிவாச்சாரியர் அருளியபத்ததி, சைவ பூஷணம், இவற்றின் விளக்கநூல்கள் ஆகியவற்றில் காணலாம்.

இனி ஆதிசைவர் முதலிய அந்தணர்கள் மற்றைய மரபினர்க்குப் பூர்வக்கிரியை அபரக்கிரியை இவற்றைச் செய்து வைப்பதில் பின்வாங்குகின்றனர். இது சைவாகம விதிக்கு மாறுபட்டதாகும். இதனால் சைவரொருவர் தமது சைவக்கிரிகைளில் சிலவற்றிற்கு ஒரு ஆசாரியரையும் வேறு சிலவற்றிற்கு இன்னொரு ஆசாரியரையும் அமர்த்த வேண்டி ஏற்படுகின்றது. ஒருவருக்கு சைவசமய குரு ஒருவரேயன்றிப் பலராக எங்கும் கூறப்படவில்லை. ஒருவர் தாம் ஆதியில் கொண்ட குருவை விட்டுவிட்டு வேறொரு குருவைக் கொள்ளுதல் முறையன்று. இந்நியதிகள் கிரியா குருமாரைப் பற்றியனவாம்.

ஆன்ம ஈடேற்றத்திற்காகவே சைவக் கிரியைகள் செய்யப்படுகின்றன. அவை உயிருக்கன்றி உடலுக்கல்ல. தூலதேகத்துடன் கூடிய உயிருக்குச் செய்யப்படும் பூர்வகக் கிரியைகள் தொடர்ந்து சூக்குமதேகத்துடன் கூடிய உயிருக்கு அபரக் கிரியைகள் என்னும் பெயரால் செய்யப்படுவனவாகும். ஆகவே பூர்வக்கிரியைகளைச் செய்வித்த குருவே அபரக் கிரியைகளையும் செய்வித்தல் முறை என்பது பெறப்படும்.

இனி, குரு மூவகைப்படுவர். பெற்ற தந்தை முதற் குருவாவார். சமயதீட்சை செய்வித்த குரு மத குருவாவார். வித்தியாரம்பம் செய்துவைத்தவர் மூன்றுவது குருவாவர். சமய தீட்சை என்பது ஒருவருக்கு உண்மை அறிவை உபதேசித்துப் பொய்யறிவை நீக்கி அவரைச் சைவ சமயத்துள் பிரவேசிக்கச் செய்தலாகும். இத் தீட்சையை செய்துவைப்பவர் மதகுருவே. அந்த மதகுருவே ஒருவருக்குப் பூர்வ அபரக் கிரியைகளையும் செய்வித்துவைப்பது முறையாகும்.

பரார்த்தக் கிரியைகள் செய்யும் ஆதிசைவ சிவாசாரியர்கள், ஆன்மார்த்தக் கிரியைகளாகிய பூர்வ அபரக் கிரியைகளையும் செய்விக்கலாமோவெனின் அது இக்காலத்தில் சர்ச்சைக்குரிய விஷயமாகிவிட்டது. ஆனால் பரார்த்தக் கிரியைகளைச் செய்யும் சிவாசாரியர்கள், ஆன்மார்த்த பூர்வக் கிரியைகளைச் செய்விக்கின்றார்கள், இப்படிச் செய்வது முறையெனின், அவ்வாசாரியர்கள் ஆன்மார்த்த அபரக் கிரியைகளையும் செய்யலாம் என்பது பெறப்படும். ஏனெனில் பூர்வக் கிரியைகள் உயிருக்கன்றி உடலுக்கல்ல. அதுபோல் அபரக் கிரியைகளும் உயிருக்கன்றி உடலுக்கல்லவே.

இக் கட்டுரையில் கூறப்பட்ட கருத்துக்கள் பெரும்பாலும் உயர்திரு சுப்பிரமணிய தேசிகர் எழுதிய 'சைவக் கிரியைகள்'' என்னும் நூலைத் தழுவியனவாகும். என் சிற்றறிவுக்கெட்டிய இக்கருத்துக்கள் சைவ நன்மக்களுக்குப் பெரிதும் பயன்படும் என்னும் நன்னோக்கத்துடன் எழுதப்பட்டமையால் அவற்றிலுள்ள குற்றம் ஓராது குணம் கொள்ளுமாறு சைவப் பெருமக்களை வேண்டுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரசைவ மதத்தின் தொன்மையும் மறுமலர்ச்சியும்

கி. வை. சிவசுப்ரமண்யம் பி ஏ., பி. டி.
சிதம்பரம், தமிழ்நாடு.

உலக முதல்வனுகிய பரமேஸ்வரனின் ஆணையின்படி பஞ்சாசாரியர்கள் சாமான்ய சைவத்தினும் பன்மடங்கு உயர்ந்த வீரசைவ சமயத்தைப் பரப்ப திருக்கைலாயத்திலின்றும் இந்திய மண்ணில் தெய்வீகத் தன்மையுடன் தோன்றினர் என்று சிவாகமங்கள் கூறுகின்றன. இம்மஹான்களின் தீவிர முயற்சியால் நமது தேசத்தின் பல பாகங்களிலும் சிவலிங்க வழிபாடு பரவலாயிற்று. ஒருகாலத்தில் உலகம் முழுவதும் இவ்வழிபாடே மலிந்திருந்த தென்பதற்கு எகிப்து, பாபிலோனியா, அரேபியா, கிரேசில், இத்தாலி, ஸ்கொட்லாந்து, மெசபொடேமியா காபூல், பொகாரா முதலிய நாடுகளில் காணப்படும் பாம்பணியும் புலித்தோலாடையும் கொண்டு நந்தியுடன் கூடிய சிவபெருமான் திருவுருவச்சிலைகளும் 2 அடி முதல் 16 அடி வரை உயரமுள்ள சருங்கல்லாலான சிவலிங்கங்களும் சான்றுக உள்ளன. நமது தேசத்திலும் இன்றுங்கூட இவ்வழிப்பாட்டிற்குரிய யாத்திரைத்தலங்களே அதிகமாயிருப்பது கண்கூடு. இராமேச்சுரம், காசி கேதாரம், ஸ்ரீ சைலம் முதலிய இடங்களில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் பன்னிரு ஜோதிலிங்கங்கள் பழம் பெருமையுடையவை அவையனைத்தும் வீரசைவ சமயாசாரியர்களின் ஆளுகையின் கீழ் இருந்து வந்ததாக கல்வெட்டுகள் பலவற்ருல் அறிகிருேம். ஆங்காங்கே ஆட்சிபுரிந்த மன்னர்கள் லிங்கதாரணமுடையவர்களாக இக்குருபீடங்களை ஆதரித்து வந்தனர். வீரசைவமதம் இவ்வளவு சீரும் சிறப்புடனும் விளங்கக் காரணமாயிருந்த பஞ்சாசாரியர்களைப் பற்றி ஒரு சிறிது நாமறியவேண்டியது அவசியம்.

**ஜகத் குரு ஸ்ரீ ரேணுகாசாரியர்:–** இவர் கொல்லிப்பாகை என்னும் க்ஷேத்திரத்தின் கண் சாமேசலிங்கத்தினின்றும் தோன்றினுரென்பது சித்தாந்த சிகாமணி ரேணுகர்காதை. 35ம் செய்யுளாலறிகிருேம். இவர் வீரசைவ சடுத்தல சித்தாந்தத்தை அரக்கர் குலத்தில் சிறந்தவனுக விளங்கிய விபீடனுக்கு உபதேசம் செய்ய இலங்கைக்குச் சென்று அவனது தூய பக்தியை மெச்சி அவனது வேண்டுகோட்கிணங்க ஏக காலத்தில் மூன்று கோடி லிங்கங்களை பிரதிஷ்டை செய்து வைத்தார். அதனுல் விபீடணன் இரேணுக கண நாதரின் சீடன் ஆனுன். சங்கரரின் வேண்டுகோளை நிறைவேற்றி சந்திர மௌலீஸ்வர லிங்கத்தைக் குருப்பிரசாதமாக அளித்தார். யக்ஷதம்பதிகளையும் கொடிய அரக்கர்களையுமழித்து உலகில் சாந்தியை நிலைநாட்டினுர். கொல்காப்பூரில் கொடுங்கோல் மன்னனுன கோரக்ஷன் என்பவனுக்கு சைவநெறியை உபதேசித்து தம் சீடராக்கினுர். இந்தியா முழுவதும் தனது கீர்த்தியை பரவச் செய்திருந்த நீலாகலச்சக்கரவர்த்தியின் கொடைத்திறமையை சோதிக்கும் பொருட்டு மூன்று கோடி பரமதர்களாக உருத்தாங்கி வந்து அவனிடம் யாசகம் வேண்டினர். ஏககாலத்தில் அவன் அனைவருக்கும் தானமளித்து மகிழ்வூட்ட முடியாத நிலையில் வருந்தி தீமூட்டி அதில் குதித்தான். கொள்கைக்காக தன் உயிரையே தியாகம் செய்த அவனது. மனத்திண்மையைப் பாராட்டி கணவன் மனைவி இருவருக்கும் சிவாத்வைதத்தை உபதேசித்து நன்நெறியில் செலுத்தினுர். கிருஷ்ண பரமாத்மா அருச்சுனனுக்கு உபதேசித்ததை வியாசர் பகவத்கீதையில் விளக்கிக்கூறியிருப்பதுபோல் சிவயோகி சிவசாரியரெனும் இரேணுகர், அகத்தியருக்கு வீரசைவ நூற்றெருரு சைவ ஷடுத்தல நெறியை சித்தாந்த சிகாமணி மூலமாக போதித்துள்ளார். பரமேஸ்வரனது ஆணையின்படி இவர் 1400 ஆண்டுகள் வாழ்ந்தனரென்ப முடிவில் இரேணுகர் தமது அருட்டிறத்தால் ருத்ரமுனீந்திரர் எனனும் குருமூர்த்தியை, தமிழ் நாட்டில் காஞ்சிபுரத்தில் ஏகாம்பரேச்சுரர் சந்நிதியில் பூகர்ப்பத்தினின்றும் தோற்றுவித்து தமது ஆட்சியை அவரிடம் ஒப்புவித்து தாம்முன்னர் தோன்றிய கொல்லிப்பாகையில் சோமேசலிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தின் கண் மறைந்தருளினுர். அவர் வழியில் வந்தவர்கள், பாரத நாடெங்கும் மன்னர்களின் ஆதரவால் வீரசைவ சிம்மாசனங்களை நிறுவிச் சமய வளர்ச்சிக்குத் தொண்டு புரிவாராயினர். ஈழவளநாட்டில் அவர் பெயரால் இரேணுகாச்சிரமம் அமைத்து வீரசைவ நெறியை மக்களிடையே பரப்பி வருவது பெருமைப்படத்தக்கதொன்று.

**ஜகத்குரு. தாருகாசாரியார் :-** வட விருக்ஷ சித்தேஸ்வர இலிங்கத்தில் தோன்றியவர். ததீசி முனிவருக்கு வீர சைவ சித்தாந்தத்தை உபதேசித்துத் தமக்குச் சீடராக ஆக்கிக்கொண்டார். கொல்லாபுரியின் கண் கொடுங்கோலனுய் ஆட்சிசெய்த மாயன் என்பவனது கர்வத்தையடக்கியும், தேவநந்தனன் எனும் அசுரனின் பக்தியை மெச்சி உபதேசம் செய்தும் மல்லிகார்ச்சுன சிவயோகியைத் தனக்குப் பின் சமயப்பணியைத் தொடர்ந்து நடத்துமாறு நியமித்துவிட்டு முன்னர் தான் உற்பவித்த சித்தேஸ்வரலிங்கத்திலேயே மறைந்தார்.

**ஏகோராமராத்யர் :-** திராட்சாராமத்தின்கண், இராமநாத லிங்கத்தினின்றும் வெளிப்போந்து வியாசமுனிக்கு வீரசைவ சிந்தாந்தத்தை உபதேசித்தவர். கௌதமேந்திரன் என்னும் அரசனைச் சிவபக்தனுக்கி திருவிளையாடல்கள் பல செய்து அதே இராமநாதலிங்கத்தில் மறைந்தருளினுர்.

**பண்டிதாராத்யர்:-** ஸ்ரீ சைலத்தில் மல்லிகார்ஜுன லிங்கத்தில் தோன்றி சனந்தன முனிவருக்கு வீர சைவ தீட்சை செய்வித்து அவர் மூலம் நாடெங்கும் சமயத் தொண்டு செய்வித்துத் தான்தோன்றிய அதே லிங்கத்தில் மறைந்தார்.

**விஸ்வாராத்திரியர் :-** இவர் காசி விசுவநாதலிங்கத்தில் தோன்றித் துர்வாச முனிவருக்கு தமது சித்தாந்தத்தையுபதேசித்து நேபாள காஷ்மீர மன்னர்களுக்கு தீட்சாகுருவாய் அமைந்து போதனைகள் செய்து சீரும் சிறப்புடனும் வாழ்ந்து அதே விசுவநாதலிங்கத்தில் மறைந்தருளினுர்.

இந்த ஐந்து வீரசைவ சமய ஸ்தாபனுசாரியர்களும் முறையே கர்நாடக மாநிலத்தில் ரம்பாபுரி (பாளேஹன்னூர்) யிலும் ஆந்திர மாநிலத்தில் பல்லாரி ஜில்லாவிலுள்ள உஜ்ஜயினியிலும், இமயமலைச் சாரலில் கேதாரத்திலும், ஆந்திராவில் ஸ்ரீ சைலத்திலும் உத்திரப் பிரதேசத்திலுள்ள வாரணுசியிலும் தமது பீடங்களையமைத்து இன்றுவரை நல்ல சமயப்பணி புரிந்து வருகின்றனர். இவர்களது முயற்சியால் இந்தியா முழுவதிலும் வீரசைவக் கொள்கைகளைப் பின்பற்றுவோர் நிறைந்துள்ளனர். வீரசைவராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் மாண்புமிக்க இவ் வாசாரியர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் போதித்த லிங்காங்க சமரசக் கோட்பாடுகளையும் ஆராய்ந்தறிதல் வேண்டும். ஜகத்குரு ஸ்ரீ ரேணுகர், தாருகர், ஏகோராமராத்யர் ஆகிய மூவரும் முறையே சுத்த பால்குணம் 13ம் தேதியும். சுத்தசைவ சாகம் 3ம் தேதியும் சுத்த சைவ சாகம் 5ம் தேதியும் அவதரித்த நாட்களாகும். ஏனைய பண்டிதராத்ரியரும், விஸ்வராத்யரும் மகா சிவராத்திரி புண்ணிய தினத்தில் தோன்றியவர்கள். இது காறும் வீரசைவ சமயத்தின் தொன்மை ஒருவாறு விளக்கப்பட்டது. ஏனைய மதத்தினர் சங்கரஜெயந்தி மாதவஜெயந்தி, முதலிய ஜன்மதின விழாக்களைக் கொண்டாடுவதுபோல், மெய்யடியராம் வீரசைவர் அனைவரும் பஞ்சாசாரியர்களின் பிறந்த நாட்களை மிகவும் சிறப்பாகக் கொண்டாடி ஆன்மநேய ஒருமைப்பாட்டு நெறியில் நின்று பிறவிப்பயனையடையவேண்டும். இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு முன்னரே சிவலிங்க வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட திராவிட இன மக்கள் இந்தியாவின் பல்வேறு பாகங்களிலும் சிறந்து விளங்கினர் என்பதற்கு மேனுட்டு சர் ஜான் மார்ஷல் என்னும் புதைபொருள் அகழ்வாராய்ச்சியாளர் கூறுவனவற்ருல் விளங்கும். மேலும் எகிப்து, அரேபியா, மெக்சிக்கோ நாடுகளிலும் லிங்கமணிந்த சைவர்கள் வாழ்ந்து வந்தனரென்றும் கூறுவதால் வீரசைவத்தின் தொன்மை தெற்றெனப்புலனும்.

இனி, இத்தகைய தொன்மைவாய்ந்த வீர சைவசமயம் எவ்வாறு நாளடைவில் நலிவுற்று பின்னர் மறுமலர்ச்சி பெற்ற தென்பதைக் காண்போம். காலப்போக்கில் அரசியல் மாற்றங்களாலும், மதத் தலை

வர்கள் தமது கடைமையைச் சரியாகச் செய்யாததாலும், புதிதாகத் தோன்றிய சமண, சாக்ய, பௌத்த மதங்கள் மக்களிடையே மலிந்திருந்த மூடப் பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் தமக்குச் சாதமாக்கிக்கொண்டு தாமறிந்த சிற்சில சித்துக்களைக்கொண்டு அச்சத்தை விளைவித்தும் புதுமையில் நம்பிக்கையை விளைவித்தும் மதமாற்றங்கள் நடைபெற்றன. சமயப் பூசல்களும், தாக்குதல்களும் பிறமதப் பழிப்பும் தூற்றலும் மக்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்தின. ஆயிரமாண்டுகட்கொருமுறை பெரிய மகான்கள் அவதரித்து மக்களிடையே நல்லொழுக்க போதனைகளைச் செய்து தெய்வ நம்பிக்கையூட்டி இறைவழிபாட்டின் மூலம் நிலையான பேரின்ப வாழ்க்கையை அளிப்பார்கள் என்பது இந்நாட்டவரின் நம்பிக்கை. இந்த சூழ்நிலையில்தான் கர்நாடக தேசத்தில் கி. பி. 12-ம் நூற்றாண்டின் மத்தியில் ஒரு வைதீக பிராமண குடும்பத்தில் அருள்மிகு பசவேசர் தோன்றினார். இவரை நந்தி தேவரின் அமிசம் என்று கூறுவர். அப்போது கல்யாணபுரியைத் தலைநகராகக்கொண்ட மூன்றும் தைலன் என்ற மேலைச் சாளுக்கிய மன்னன் ஆட்சிபுரிந்து கொண்டிருந்தான். கூடல சங்கமேஸ்வரர் அருளால் லிங்கதாரணம் செய்துகொண்டு வேதம், ஆகமம், காவியம், புராணம், சாஸ்திரம் அனைத்தையும் ஐயந்திரிபறக் கற்றார். ஆதலால் இறைவனையடைய ஆகம நெறியே சிறந்ததென்ற முடிவுக்கு வந்து பூநாலணியாது படாடோபமும் சடங்காசாரமுமற்ற எளிய முறையில் மனமொன்றிய சிவலிங்க வழிபாடே முத்திக்குநேரான வழியாகும் எனக் கண்டார். சமுதாயக் குழப்பங்களில் சிக்குண்டிருந்த மக்களை அவரது போதனைகள் எளிதில் கவர்ந்தன. பிச்சலமன்னன் அவையில் முதலமைச்சராகும் தகுதியைப் பெற்றார். கூடல சங்கமத்தில் அவரது உள்ளத்தில் தோன்றிய சீர்திருத்தக் கருத்துக்கள் கல்யாணபுரியில் 1154-ல் அவரால் அமைக்கப்பெற்ற சிவானுபவமண்டபத்தில் சிவசரணர்களால் ஆராயப்பெற்றுச் செயல்படுத்தப்பட்டன. அவரது வசனங்கள் கன்னட மொழியில் ஒரு புத்துணர்வையூட்டி மக்களிடையே ஆன்மநேய ஒருமைப்பாட்டை வேகமாகப் பரவச்செய்தன. தமது அனுபவ மண்டபத்திற்கு கி. பி. 1162-ம் ஆண்டில் அல்லமாப்பிரபுதேவரை தலைவராகக் கொண்டு சமத்துவம், அன்பு, சுதந்திரம், ஜாதிமத, பிறப்பு தொழில் அடிப்படையில் மக்களிடையே ஏற்றத் தாழ்வு பாராட்டாமை வர்ணாசிரமக் கொள்கைகளை ஏலாமை என்ற கருத்துக்களை வெளியிட்டு இலிங்க வழிபாட்டு முறையை எளிதாக்கினார். வீரசைவ சமய ஸ்தாபனாசாரியர்களால் கூறப்படும் சடங்குகளையும் கட்டுப்பாடுகளையும் தளர்த்தினார். இம் மறுமலர்ச்சிக் கருத்துக்களுக்கு வைதீக சமயத்தினரிடையே பலத்த எதிர்ப்புக்கள் தோன்றியபோதிலும் மக்களிடையே கரைபுரண்டோடும் வெள்ளம்போல் பரவியது. வைதீக நெறிக்குப் புறம்பாக பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு இலிங்கதாரணம் செய்வித்து சிவசரணர்கள் என்ற மெய்யடியார்களாக ஆக்கி சமபந்தி உணவு, உயர்ந்தசாதி, தாழ்ந்த சாதி என்பவற்றை நீக்கிக் கலப்புத் திருமணம் முதலியவற்றை நடத்தி வீரசைவ சமயத்திற்குப் புத்துயிரளித்தவர் பசவேசர். நாத்திகத்திற்கும் போலிமதவாதிகளுக்குமிடையே சிவநெறியாகிய இறைநெறி எனும் பாலத்தை அமைத்தார். அரசியல் மேதை பசவேசர். அரசியல் தலைவராகவும், மதத் தலைவராகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும் விளங்கிய ஒப்பற்ற சரித்திர புருடர் பசவேசர்தான் எனல் மிகையாகாது அவரது கொள்கைகளின் சாரம் :-

சிவபெருமானே அனைவருக்கும் தந்தை. ஒன்றே குலம் ஒருவனே தேவன். அவன், மக்களாய்ப் பிறந்த அனைவரும் தரகர் யாருடைய உதவியுமின்றி நேரடியாக வணங்கத்தக்கவன். அங்கம் வேறு இலிங்கம்வேறு அல்ல. வள்ளற் பிரானார்க்கு உள்ளம்பெருங் கோயில்; ஊனுடம்பு ஆலயம். ஒழுக்கமும் சீலமும், பக்தியுமுடைய அனைவருக்கும் இறைவன் எளியன். ஆண்மாவிற்கு ஆணென்றோ பெண்ணென்றோ வேறுபாடு இல்லை. இரு பாலரும் சம உரிமையுடன் இறைவனை வணங்கி அருளைப் பெறலாம் என்பனவாம். 15-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் கத்தோலிக்க கிறிஸ்தவ மதகுருமார்களின் யதேச்சாதிகாரப் போக்கினைக் கண்டித்து வெற்றிகண்ட சமய சீர்திருத்தவாதி மார்டின் லூதர். இந்தியாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே முறையில் தொண்டாற்றியவர் வசவர். அவர் காலத்திலேயே "கற்புடைச் சைவம்" எனப்படும் வீர சைவ சமயம் பல்லாற்றானும் சிறந்த தலைவர்களை உருவாக்கியது. சிவனடியார் கோலத்தில் சிவலிங்கம் தரித்துக்கொண்டு பற்றற்ற சமுதாய சேவைசெய்து, வர்ணாசிரம கொள்கைக்கு அப்பாற்பட்ட சமரசவாழ்க்கையைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

காந்தியடிகளின் சத்தியம், அஹிம்சைக் கொள்கைகள் ஆன்மீக வாழ்க்கைக்கு உடலும் உயிருமாக விளங்குவது போல், இறையுணர்வும், அன்பும், அஹிம்சையும் பசவேசரின் உயிர்ப்பும் உடலுமாய் விளங்குகின்றன. கன்னட மொழியில் அவர் இயற்றியுள்ள வசனங்கள் ஜனநாயக அடிப்படையில் ஒரே மனித இனச் சமுதாயத்தையும் சூழ்நிலையையும் உண்டாக்கும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டவை. சமய சீர்திருத்தவாதியாகிய பசவேசர் அன்புநெறியில் புத்தர்; எளிமையில் மகாவீரர்; பெருமிதத்தில் இயேசுநாதர்; மனோதைரியத்தில் நபிகள் நாயகம். இவர்களின் கொள்கைகளை உலகெங்கும் பரப்புவதன் மூலம் மக்களிடையே சகோதரத்துவம், ஏற்பட்டு அமைதி ஏற்படும் என்ற நல்லெண்ணத்துடன் இன்றைய இந்திய தற்காலிக ஜனாதிபதி மேதகு B. D. ஜட்டி அவர்களைத் தலைவராகக்கொண்ட பசவ சமிதியை அமைத்து, அதன்மூலம் கர்நாடக மாநில அரசாங்கம் அருள்மிகு பசவேஸ்வரரின் 800 வது ஆண்டு நிறைவு விழாவை 1967ம் ஆண்டில் கொண்டாடத் திட்டமிட்டுச் சிறப்பாக நடைப்பெறச் செய்தது. இந்திய அரசாங்கம் அவ்வமயம் பசவேசரின் தபால்தலையொன்றை வெளியிட்டு அவரது பெருமையை உலகெங்கும் பரவச் செய்தது.

20ம் நூற்றாண்டில் மக்களினம் ஆன்மீகத்துறையில் நாட்டம் செலுத்தாது மெய்ஞ்ஞான அறிவு குன்றி விஞ்ஞான அறிவு வளர்ந்து வருகிறது. எனவே, வீரசைவ சித்தாந்தமும் பசவாசாரமும் உலகெங்கும் பரப்பி மக்கள் நல்வாழ்வினையும் பிறவிப் பயனையும் பெறச் செய்யும் தொண்டினை வீரசைவர்களனைவரும் குருபீடத்தலைவர்களும் மேற் கொள்ள வேண்டும்.

"பாரிலொண் சிவபக்தர்கள் மல்குக
சீரின் மல்கும் சிவன்புகழ் மல்குக
வீரசைவம் விளங்குக எங்குமே."

அட்டைப்பட விளக்கம் :

## வீரசைவ மூலாசாரியர்களின் முதல்வராகிய ஸ்ரீ இரேணுக சிவாசாரியர் புரிந்த நவலீலைகள்

1. சோமேசலிங்கத்தில் உற்பவித்தல். (இலிங்கோற்பவம்)
2. அகத்தியருக்கு வீரசைவத்தைப் போதித்தல்.
3. பூதங்களை நெற்றிக்கண்ணால் எரித்தல்.
4. சரிந்த விக்கிரகத்தைக் கைதொட்டு நேராக்குதல்.
5. தனது வாரிசாக ஸ்ரீ உருத்திரபுரீஸ்வரரைப் பூகர்ப்பத்திலிருந்து தோற்றுவித்தல்.
6. இலங்கையில் மூன்று கோடி சிவலிங்கங்களைப் பிரதிஷ்டை செய்து விபீஷணனுக்கு வீரசைவ உபதேசம் செய்தல்.
7. சங்கராச்சாரியருக்குச் சந்திர மௌலீஸ்வரலிங்கம் அருளல்.
8. கோரக்ஷன் என்ற அசுரனை வதைத்தல்.
9. தோன்றிய அதே சோமேஸலிங்கத்திலே ஐக்கியமாதல். (இலிங்கைக்கியம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

# பசவேசர் யார்?

வித்துவான், சி. சோமசுந்தரம், எம். ஏ. எல். டி.
(மாநில தேசிய விருதுபெற்ற தலைமை ஆசிரியர்)
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழ் நாடு.

## பிறப்பும் வளர்ப்பும்:-

கி. பி. 12 ஆம் நூற்றாண்டு இந்தியா முகம்மதிய மதமோ, கிறிஸ்தவ மதமோ பரவாத காலம். கன்னட தேசத்தில் சமணர்களும் பௌத்தர்களும் ஆங்காங்கு வாழ்ந்திருந்தனர். வைணவர்களும் வாழ்ந்து வந்தனர். சைவமும் அதிகம் பரவி இருந்தது. சைவத்தில் பல பிரிவுகள் இருந்து வந்தன. போலி மதவாதிகளும் பக்தர்களும் மிகுந்து இருந்தனர். அவர்களிடம் படிப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருந்தது. அர்த்தமற்ற சடங்குகளும், ஆசாரங்களும், சாதிப்பிரிவுகளும், கடவுள் வழிப்பாட்டில் விலங்குகள் பலியிடப்பட்ட வேத வேள்விகளும் மலிந்து கிடந்தன. பூசாரிகளும், புரோகிதர்களும் மக்களிடையே உண்மையான பக்தி, வைராக்கியம், ஞானத்தை நிலைநாட்டவும் பரப்பவும், முயன்றார்கள் இல்லை. தங்கள் சுயநல வாழ்விற்கும், குடும்ப இன்பத்திற்குமே மதத்தையும், மதச்சடங்குகளையும் வியாபார முறையில் பயன்படுத்தி வந்தனர். ஏழை மக்களுக்கும் உண்மையான பக்தர்களுக்கும் கடவுளை நேரடியாக வணங்க மதச் சுதந்திரம் இல்லை. மக்களுடைய உண்மை பக்தியையும், தூய எளிமையான வாழ்க்கையையும், போதி மதவாதிகளும், பூசாரிகளும், குருக்கள் மார்களும் ஒத்துக்கொள்ளவும், போற்றவும் இல்லை. அச்சமயம் கல்யாணபுரியில் மேலைச் சாளுக்கிய வமிசத்தைச் சேர்ந்த ஆறும் விக்ரமாதித்தன் அரசாண்டு கொண்டிருந்தான். அரசனோ தன் ஆதிக்கத்தையும், அரசியல் வாழ்வையும் செல்வத்தையும் பெருக்குவதிலேயே கண்ணுங்கருத்துமாகக் காலங் கழித்து வந்தானே ஒழிய சமுதாயத்தில் மலிந்து கிடக்கும் ஊழல்களைக் களைந்தெறிய அவனுக்கு நேரமும் இல்லை, கருத்தும் இல்லை.

அக்காலத்தில் கன்னட தேசத்தில் தற்காலம் பீஜப்பூர் மாவட்டம் எனப் பெயர் வழங்கும் இடத்தில் 'பாகவாடி' என்ற ஒரு நகரம் இருந்தது. அந் நகரத்தில் வைதீக சிவப்பிராமண குடும்பத்தைச் சேர்ந்த 'மாதரசர்' என்பவர் வாழ்ந்துவந்தார். இவருடைய மனைவி 'மாதாம்பிகை' அவள் கற்பும் பொற்பும் ஒருங்கே அமையப் பெற்ற மங்கை நல்லாள். அவர்கள் செய்த தவப் பயனால் அவர்களுக்கு இரண்டாவது மகனாக கி. பி. 1105 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 3ம் நாள் உரோகிணி நட்சத்திரம் கூடிய ஞாயிறு நன்னாளில் பசவேசர் உதித்தார். கன்னட மொழியிலும் தெலுங்கு மொழியிலும் பசவர் என்பது நந்தியின் பெயர் ஆகும். பெற்றோர்கள் நந்திதேவரை நோக்கிச் செய்த தவப் பயனால் அவர்களுக்கு உதித்த திருக்குமாரனுக்கு 'பசவண்ணர்' என நாமம் சூட்டினார்கள் எனப் புராணங்கள் கூறுகின்றன. பின்னர் அப் பெயரே 'பசவேசர்' என ஆயிற்று. 'மாதரசர்' அந் நகரமன்றத் தலைவர் ஆவார். அவர் நல்லொழுக்கமும், பண்பும் உலகியல் வாழ்வுக்கு உரிய நல்ல பொருளாதாரமும் வாய்க்கப் பெற்றவர் ஆகவே தன்னுடைய குமாரன் பசவண்ணரை உரிய காலத்தில் திண்ணைப் பள்ளியில் சேர்த்து நல்ல கல்வியை ஊட்டி வந்தார். பசவண்ணரும்' கருவிலேயே திருவுடையவராக அவதரித்தவர். ஆகையால் மற்றக் குழந்தைகளைப் போல் அல்லாமல் வெகு விரைவில் கன்னட மொழியில் உள்ள நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். அதோடு வடமொழியில் உள்ள வேதங்கள், ஆகமங்கள், காவியங்கள், புராணங்கள் முதலிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றையும் கற்று நல்ல புலமை பெற்றார். பள்ளியில் கல்வி பயிலும் நேரங்களைத் தவிர மற்ற நேரங்களில் வெளியில் பல இடங்களுக்கும் சென்று பொது மக்கள் வாழ்க்கையையும், போலி மதவாதிகள், புரோகிதர்கள், பூசாரிகள், குருக்கள்மார்கள் வாழ்க்கைகளையும் நன்கு கூர்ந்து கவனித்து வந்தார். அவருக்கு எட்டாம் வயதில் அவருடைய சாதிக்குரிய முறையில் பூணூல் சடங்குகளும் நடைபெற்றன; காயத்திரி மந்திரம் உபதேசிக்கப்பட்டது. சிறிது காலத்தில் பசவண்ணரின் பெற்றோர்கள் இறந்தனர். பின்னர் பசவண்ணர் பதினாறு வயதுவரை அவருடைய பாட்டியின் ஆதரவில் வளர்ந்து வந்தார். இக்காலத்தில் தன்னுடைய கல்வி அறிவை மேலும் பல வழிகளில் வளர்த்து வந்தார். தான் கற்றவற்றையும், பார்த்தவற்றையும் பற்றித் தனித்த இடங்களில் ஓய்வு நேரங்களில் உட்கார்ந்து சிந்தித்தும் வந்தார். அச்சிந்தனையின் முடிவாக அவர் மனத்தில் சில ஐயங்கள் தோன்றின.

**அவ்வையங்களாவன:-**

இறைவன் ஒருவரா? பலரா? அவன் ஒரு சாதியினருக்கு மட்டுந்தான் உரியவனா? ஏழைகளாகவும், பணக்காரர்களாகவும் மேலோராகவும் கீழோராகவும் சமுதாயத்தில் கருதப்படுகின்றவர்கள் அனைவருக்கும் உரியவனா? ஒரு சாதியர் மூலமாகவே அல்லது குறிப்பிட்டவர்கள் மூலமாகத்தான் இறைவனை வழிபட வேண்டுமா? தனியார் வழிபாடின் மூலம் இறைவனோடு நேரடியாக ஏன் எல்லோரும் தொடர்பு வைத்துக்கொள்ளக்கூடாது? இறை இன்பம் தனியார் வழிபாட்டின் மூலம் பெற முடியுமா? முடியாதா? சாதி குல வருண வேறுபாடுகளுக்குச் சாத்திரங்களில் இடம் உண்டா? தாய் மொழி மூலம் இறை வழிபாட்டிற்கு இடம் உண்டா? இல்லையா? பொருள் விளங்கிய மொழி மூலம் வழிபாடு நடத்தி இறை இன்பம் பெற முடியுமா? அல்லது பொருள் விளங்காத மொழியில் இன்னொருவர் மூலம் வழிபாடு நடத்தி இறை இன்பம் பெற முடியுமா? அர்த்தமற்ற சடங்குகள் மூடச் சம்பிரதாயங்களைப் பெருக்குவதனால் உண்மைப் பக்தி மக்களுக்கு உண்டாகுமா? இறை இன்பம் உண்டாவதற்கு இவை எல்லாம் இன்றியமையாதனவா? பக்தி ஒன்று போதாதா? பெண்களுக்குக் கடவுளைத் தாங்களே வழிபட உரிமை உண்டா? இல்லையா? இவ்வினாக்களுக்கு சாத்திரங்கள் என்ன கூறுகின்றன? சான்றோர்கள் என்ன கூறுகின்றனர்? என்ற இன்னோரன்ன வினாக்களுக்குத் தகுந்த உண்மையான, விருப்பு வெறுப்பு அற்ற விடை பகர பாகவாடியில் தகுந்தவர்கள் யாரும் இல்லை. பசவண்ணரின் பிஞ்சு உள்ளம், சிந்திக்கும் உள்ளம் விடைகளைக் காணத் துடித்துக் கொண்டிருந்தது. அத் துடிப்புத்தான் தான் அணிந்திருந்த பூணூலைக் களைந்து எறியும்படி செய்தது. அவர் கிளர்ச்சி மனம் பிடித்து உந்த, எழுந்தார்; விரைந்தார் கூடல சங்கமம் நோக்கி.

## ஆன்மநேய ஒருமைப்பாட்டு வாழ்வு

அக்காலத்தில் 'கூடல சங்கமேசர்' சிவாலயம் சிறந்து விளங்கிற்று. அப் புனிதத் தலத்திற்குப் பல வகைப்பட்ட சைவர்கள் சென்று வணங்கிவந்தனர். அங்கு பல அக்கிரகாரங்களும் உண்டு. வட மொழி, கன்னடம் ஆகிய மொழிகளில் கற்றுத் தேர்ந்த பல புலவர்களும் அங்கு வசித்து வந்தனர். அந்நகர மன்றத் தலைவர் ஈசானிய குரு ஆவார். அவர் ஆன்று, அவிந்து, அடங்கிய சான்றோர். அவர் பல சாத்திரங்களைக் கற்றுத் தேர்ந்து ஐயம், திரிபு அற, சித்தாந்த உண்மைகளை அறிந்த பெரியார். அவர் பாசுபத சைவப் பிரிவைச் சார்ந்தவர். அவரையே தனது பிரதம குருவாக ஏற்றார் பசவேசர். சமூகத்தைப் பற்றியும், சமயங்களைப்பற்றியும் உள்ள அடிப்படைத் தத்துவங்களை அக்குருவிடம் இருந்து பசவண்ணர் நன்கு அறிந்துகொண்டார். தன் உள்ளத்தே எழுந்த ஐயங்களுக்கெல்லாம் தகுந்த விடை பகர்ந்தார் அக்குரு. இடைஇடையே சைவ, பௌத்த மதங்களையும் ஆராய்ந்தார். மற்றும் சிவ புராணம், இலிங்கபுராணம், கந்தபுராணம், வாதுளாகமம், வாதுளதந்திரம், பிருகிசம்கிதை, வாயாயிசம்கிதை முதலியவற்றையும் கற்று அறிந்தார். இவற்றின் முடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகக் கடைசியில் அறுதி சைவமாகிய வீர சைவ மதமே சிறந்தது என்னும் முடிவுக்கு வந்தார். ஒரு காலத்தில் தனிச்சிறபபுடன் விளங்கிய இம் மதம் சீரழிந்த நிலையிலிருப்பதைக் கண்டு மனம் கலங்கினுர். இம் மதத்துக்குப் புத்துயிரளித்தார். கூடலசங்கமேசர் ஆலயத்துக்குச் சென்றுர் அவர் திருவடிகளில் வீழ்ந்தார், கட்டினுர், தழுவினுர், ஆடினுர், பாடினுர். கடல் மடை திறந்தது எனப் பக்தி வெள்ளமும், உணர்ச்சி வெள்ளமும் ததும்பப்பெற்றுர். அவற்றின் பலனுகத் தாய் மொழியில் கவிமழை பொழிந்தார். அக் கவிமழையே கன்னட மொழியில் 'பசவவசனம்' எனப்படும் பொக்கிஷம் ஆகும். அப் பொக்கிஷத்தில் பசவண்ணரின் களங்கமற்ற உள்ளத்தைக் காணலாம்; பரந்த பக்தி வெள்ளத்தைக் காணலாம்; ஆழ்ந்த ஆன்மநேய ஒருமைப்பாட்டைக் காணலாம்; சமூகத் தொண்டே சமயத்தொண்டு என்னும் சரித்திர முடிவைக் காணலாம்; தனியார் வழிபாட்டின்மூலமே இறை இன்பத்தைப் பெறமுடியும் என்ற சமய அடிப்படைத் தத்துவத்தைக் காணலாம். பக்திமார்க்கமே சிறந்த மார்க்கம் என்பதைக் காணலாம். பக்தி என்பது உள்ளத்தைத் தொடுவது; உணர்ச்சியைத் தட்டி எழுப்புவது; பொருள் விளங்கிய தருணத்தில்தான் உள்ளம் தொடப்படும்; அங்ஙனம் உள்ளம் தொடப்படும் காலத்தில்தான் உண்மை உணர்ச்சி எழுப்பப்படும் பொழுதுதான் உண்மையான இறை இன்பம் துய்க்கப்படமுடியும்; விளங்காத மொழியிலே நடத்தப்படும் வழிபாடுகள் உள்ளத்தைத் தொடா உணர்ச்சியை எழுப்பா; ஆகவே, உண்மை பக்தி கிளர்ந்து எழாது; போலிப் பக்தியே தாண்டவமாடும். போலிப் பக்தி வாழ்க்கைக்குப் பயன்படாது. ஆண்களோடு பெண்களும் சரிசமமாக இறைவனைத் தாங்களே நேரடியாக வழிபடலாம் என்னும் இன்னோரன்ன பேரெண்ணங்களை அவ் வசனங்களில் பரக்கக் காணலாம். இங்ஙனம் ஆராய்ந்து பன்னிரண்டு ஆண்டுகள் கூடல சங்கமத்தில் பசவண்ணர் வாழ்ந்தார். இம் முடிவான கருத்துக்களைக் கொண்ட, இருபத்தெட்டாண்டுகள் நிறைவுபெற்ற காளை பசவண்ணர், தான் பெற்ற இன்பங்களைச் சமுதாயத்தில்கொண்டு செலுத்திச் சமுதாய வாழ்வில் உண்மைச் சமயவாழ்வைப் புகுத்தி, மறுமலர்ச்சி உண்டாக்கி சமயத்தின் பெயரால், போலிச் சாத்திரங்களின் பெயரால், ஆயிரம், ஆண்டுகளாக அடிமை வாழ்வில் அல்லலுறும் மக்களைத் தட்டி எழுப்பி, தான் கூடலசங்கமேசரிடத்தில் பெற்ற பேரின்பத்தை அவர்களும் பெற ஆவன செய்யவேண்டும் என்னும் பேரெண்ணத்தால் உந்தப்பெற்றுர். அவர் உரோகிணி நட்சத்திரத்தில் அவதரித்தவர் அல்லவா? ஆகவே, அவர்தான் ஒரு ஞான யோகியாக மட்டும் வாழ விரும்பாமல், கர்மவீரராகவும் விளங்க வீறிட்டு எழுந்தார். அதற்காகவே உலக வாழ்க்கையில் அரசியல் வாழ்வில் புகுந்தார். அவ்விதப் பெரும் வாழ்க்கை வாழ கூடலசங்கமத்தை விட்டு கி. பி. 1132 - இல் 'மங்கல வாடிக்குச்' சென்றுர்.

## அமைச்சர் வாழ்வும், அருஞ்செயல்களும் மங்கலவாடி வாழ்க்கை :-

வனப்பெய்திய உடல் ஒழுக்கம், கல்வி அறிவு, புத்தக அறிவு, உலகியல் அனுபவம் ஆகிய இச்சொத்துக்களோடு சென்ற பசவண்ணருக்குப் 'பாகவாடியில்' அரண்மனை வாழ்வு காத்துக்கொண்டிருந்தது. மேலைச் சாளுக்கிய சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதி 'பாகவாடி' அது ஒரு மாகாணத்தின் தலைநகரம், அங்கே 'காலசூரிவமிசத்தைச் சேர்ந்த குறுநில மன்னன் 'விச்சலன்' என்பவன் அரசாண்டுகொண்டிருந்தான்' அங்குள்ள கஜானுத் தலைவர் 'சித்த தண்டதீபர்' என்ற பெரியார். அவர் பசவண்ணரின் உற்ற உறவினராவர். பசவண்ணரின் திறமைகளைக் கண்ட அப் பெரியார் அவரைத் தன் அலுவலகத்தில் ஒரு கணக்கராக அமர்த்திக்கொண்டார். பசவண்ணர் தனது சுறுசுறுப்பாலும், திறமையாலும் விரைவில் தலைமைக் கணக்கராக உயர்த்தப்பட்டார். அவருடைய பொலிவையும் திறமைகளையும் கண்ட 'சித்த தண்ட தீபர்' தன் உறவுப்பெண் 'கங்காதேவி' என்ற பெண்ணை அவருக்கு மணம்செய்து வைத்தார். அப் பெரியாருக்குக் குழந்தைகள் இல்லை. அவர் இறந்தபின் கஜானுத் தலைவர் பதவி பசவண்ணருக்கே மாற்றப்பட்டது. அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமைகளைக் கண்டு வியந்த 'விச்சலன்' பசவண்ணரை முதல் அமைச்சர் பதவிக்கும் சேனைத் தலைவர் பதவிக்கும் உயர்த்தினார். நாட்டை ஆளும் திறமையைப் பெற்ற பசவண்ணரின். ஒழுக்கத்தையும், திறமையையும். பண்பையும் கண்ட மன்னன் அவரிடம் தன் முழு நம்பிக்கையையும் வைத்திருந்தான். 'பசவண்ணர்' தன் அரசியல் வாழ்வில் சிறப்புடனும் தெய்வீகத் தன்மையுடனும் வாழ்ந்தார்.

ஆனால் எந்த நோக்கதோடு அரசியல் வாழ்வை ஏற்றுக் கொண்டாரோ அந்த நோக்கத்தை மறக்கவில்லை. அந்நோக்கத்தை விருப்பு வெறுப்பின்றி சமரச நோக்குடன், சாதி குல வருண வேறுபாடுகளை நீக்கி ஆன்மநேய ஒருமைப்பாட்டை மக்களிடையே நிறைவேற்ற முயன்றனர். கி. பி. 1441-இல் 'அநுபவ மண்டபம்' என்ற ஆன்மீக ஒருமைப் பாட்டுக் கழகத்தை அமைத்தார். அதில் சாதி, குல, வருண, ஆண், பெண் வேறுபாடுகள் இன்றி சிவனடியார்கள், அனைவரையும் அங்கத்தினர்களாகச் சேர்த்தார். அங்கத்தினர்கள் அனைவரும் சாதி குல வேறுபாடின்றி உண்டார்கள், உரையாடினார்கள், உறவாடினார்கள். அவ் வங்கத்தினர்களில் ஒருவர் 'கம்பளியநாகி தேவர்' என்பவர், அவர் சேரியில் வாழ்ந்து வந்தவர். ஒரு நாள் 'பசவண்ணர்' அவர் வீட்டிற்குச் சென்று உணவருந்தி வந்தார். அதைக் கண்ணுற்ற போலி மதவாதிகள் கிளர்ந்து எழுந்தனர், அரசனிடம் சென்று 'பசவண்ணர்' மேல் வெறுப்புணர்ச்சியைத் தூண்டி விட்டனர். அரசனும் பசவண்ணரை அழைத்துக் கண்டித்தான். ஆனால் 'பசவண்ணர்' தான் செய்தகாரியம் சைவமதத்திற்கு உகந்ததே ஒழிய அப்பாற்பட்டது அல்ல எனத் தத்துவ நூல்களைக்காட்டித் தன் கொள்கையை நிலை நிறுத்தினார். அமைச்சர்பால் அளவு கடந்த அன்பும் மதிப்பும் வைத்திருந்த அரசன் அமைதி பெற்றான். போலி மதவாதிகள் தோற்றனர்.

**கல்யாணபுரி வாழ்க்கை:-**

கி. பி. 1153-இல் கல்யாணபுரியில் அரசு செலுத்திய மேலைச் சாளுக்கிய மன்னன் மூன்றும் தைலப்பா இறந்த பின்னர் விச்சல மன்னனே சாளுக்கிய சாம்ராச்சியப் பேரரசனாக ஆனான். பசவண்ணரும் பாகவாடியை விட்டு கல்யாணபுரி சென்று தன் பதவிகளையும் மிகத் திறமையுடனும், பண்புடனும் நிர்வகித்து வந்தார். தன்னுடைய 'அநுபவ மண்டபம்' என்ற ஆன்மநேய ஒருமைப் பாட்டுக் கழகத்தையும் கல்யாணபுரிக்கு மாற்றி அமைத்துக் கொண்டார். இப்போது அதன் செயல்கள் மிக மேம்பாடு அடைந்தன. காஷ்மீரம், கர்நாடகம், மராட்டியம், ஆந்திரம், தமிழகம், கேரளம், குஜராத் முதலிய பல்வேறு இடங்களிலிருந்தவர்கள் அதில் அங்கத்தினர்களாக ஆனார்கள். அரசர் குலத்தைச் சேர்ந்த மாரய்யா, சகலமா தேசர் என்பவர்களும் ஆதய்யா என்ற வியாபாரியும், மடிவாலமாச்சையர் என்ற வண்ணாரும், கும்ப குண்டையா என்ற குலாலரும், ராமி தேவர் என்ற கிராம சேவகரும், கின்னரி பொம்மண்ணா என்றபோர் வீரரும், தோகர கக்கையா, மாதர சென்னையா, ஹரளய்யா என்ற சக்கிலியர்களும், மதுவையர் என்ற பிராமணரும் அங்கத்தினர்களாகச் சேர்ந்து கொண்டார்கள். இக்கழகத்திற்கு அனுபவம் மிகுந்த, ஆன்மநேய ஒருமைப் பாட்டுணர்ச்சி மிக்க தத்துவத் திறம் படைத்த, சமரச நோக்குடைய 'அல்லமாப் பிரபுதேவர்' என்கின்ற தத்துவக் கலைஞர் தலைவராக்கப்பட்டார். பசவண்ணர் தன் அமைச்சர் பதவி வேலைகளைத் திறம்படச் செய்த நேரங்களைத் தவிர மற்ற ஓய்வு நேரங்களில் இக்கழகத்தில் கலந்து கொள்வார். அங்கு தத்துவ விசாரணை நடைபெறும்; சாதிசமய வேறுபாடின்றி அங்கத்தினர்களுக்குப் பசவண்ணர் சமபந்தி போஜனம் நடத்துவார். இதற்கெல்லாம் தனது சொந்தப் பணத்திலிருந்தே ஏராளமாகச் செலவழித்து வந்தார்.

ஒரு நாள் தனது பல்லக்கில் ஏறிப் பசவண்ணர் அலுவலக வேலைக்காக அரண்மனைக்குச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது அவ்வீதிவழியாக ஒரு அடியார் சென்று கொண்டிருந்தார். அவரைக் கண்ட உடனே 'பசவண்ணர்' பல்லக்கை விட்டுக் கீழே இறங்கித் தன் உத்தரீயத்தை வீதியில் விரித்துப் போட்டுக் கீழே விழுந்து அவ்வடியாருக்கு வணக்கம் செலுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து என்னைத்
தரணியோடு வானாளத் தருவரேனும
மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்
லோம் மாதேவர்க்கு ஏகாந்தர் அலர் அகில்
அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழுநோய
ராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே'

என்று அப்பர் அடிகள் கண்ட கனவை நனவாக்கினார் பசவேசப் பெருந்தகை.

இன்னொருநாள் 'அநுபவ மண்டபவத்திற்குள்ளே' பசவண்ணர் அடியார்களுக்கு அமுது படைத்துக் கொண்டிருந்தார். அவ்வமயம் இரண்டு திருடர்கள் கத்தரிக்காய்களைக் காஷாயத் துணியில் மூடிக்கழுத்தில் இலிங்கமாகக் கட்டிக்கொண்டு, உள்ளே நுழைந்து பந்தியில் உட்கார்ந்து விட்டார்கள். 'பசவண்ணர்' நேரடிப் பார்வையில் அமுது படையல் நடந்து கொண்டு வந்தது. அத்திருடர்களுக்கு அண்மையில் தூபம் தீபம் காண்பிப்பதற்காகப் பசவண்ணர் வந்தார். அடியார்கள் போல வந்த அத்திருடர்கள் தங்கள் கழுத்தில் கட்டியிருந்த துணிகளை அவிழ்க்க நேரிட்டது. அவற்றுள் கத்தரிக்காய்களைக் கண்ட பசவண்ணர் உடனே உண்மையை அறிந்து கொண்டார். முதல் அமைச்சர் அல்லவா அதோடு நிதிமந்திரிப் பதவியும், சேனைத் தலைவர் பதவிகளும் சேர்ந்திருந்தன அல்லவா? அவர்கள் இருவரும் தங்கள் வறுமையினாலன்றோ திருடர்களாகி விட்டார்கள் என்று அறிந்த அமைச்சர், உடன் அவர்களை அடியார்களாக்கி, அரண்மனையில் உத்தியோகம் கொடுத்து, வறுமையை நீக்கி, நல்லவர்களாக ஆக்கிவிட்டார். இதனால் பசவண்ணரின் பேரும் புகழும் செல்வாக்கும் நாளுக்கு நாள் பொது மக்களிடையே ஓங்கிக் கொண்டே வந்தது. பொது மக்களும் ஏழை அறிஞர்களும் ஏராளமாகப் பசவண்ணர் அருளாட்சியைப் பின்பற்ற ஆரம்பித்தனர். இதனைக் கண்டு அழுக்காறுற்ற அரசியல் விரோதிகளும் போலி மதவாதிகளும் சூழ்ச்சி செய்ய ஆரம்பித்தனர். அரசன் பால் சென்று அவன் மனத்தைத் திரித்தனர். பசவண்ணரின் மதவிரோதச் செயல்களால் அரசாங்கத்திற்கே கேடு வரும் எனப் பொய் புகன்றனர். அமைச்சரிடம் அளவு கடந்த அன்பும், நன் மதிப்பும் காட்டிய அரசனின் மனமும் ஒருவாறு திரிய ஆரம்பித்தது.

இங்ஙனமிருக்க 'அநுபவமண்டபத்தின்' அங்கத்தினர்களான மதுவையர் என்றவர் பிறப்பால் பிராமணர், இன்னொருவர் ஹரளய்யர். அவர் பிறப்பால் சக்கிலியர் மதுவய்யர் மகளுக்கும் ஹரளய்யர் மகனுக்கும் பசவண்ணர் அனுபவமண்டபத்தின் சார்பில் கலப்புத் திருமணம் செய்து வைத்தார். இங்ஙனம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டிலேயே அவர் சிறந்த சமூகச் சீர்திருந்தவாதியாக விளங்கினார். ஆனால் இதைக் கண்ட போலி மதவாதிகளோ மீண்டும் குமுறினர். எழுந்தனர்; ஓடினர் அரசர்பால்; அரசியல்விரோதிகளும் அவர்களுடன் கலந்தனர். மன்னர் மனத்தை மீண்டும் திரித்தனர். மன்னனும் ஹரளய்யாவையும் மதுவையரையும் அரண்மனைக்கு அழைத்தான். அவர்களை மதத்துரோகக் குற்றம் சாட்டினார். அக்குற்றத்திற்காக அவர்கள் கண்களைச் சூட்டுக்கோல் கொண்டு தீய்த்து மரணதண்டனையும் விதித்தான். இக்கொடுங்கோன்மையைக் கண்ட "அநுபவமண்டபத்து" அங்கத்தினர்கள் மட்டுமல்ல, பொதுமக்கள் அனைவருமே கிளர்ந்து எழுந்தனர். அரசன்மேல் ஆத்திரம் கொண்டனர்; கோபாவேசம் உற்றவர். இதனால் பெரும் உள்நாட்டுக் கலகம் ஒன்று ஏற்பட்டது. இக்கலகத்தை அடக்கச் சாந்தமிகு பசவண்ணர் எவ்வளவோ முயன்றார். தன்னைப் பின்பற்றியவர்களை அமைதிப் படுத்த முயன்றார். ஆனால் அவர்களில் ஜகத்தேவர், மொல்லயர், பொம்மையர் என்ற மூவரும் முரட்டுச் சுபாவம் படைத்தவர்கள். அவர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் அரண்மனைக்குள் நுழைந்தனர். அரசனை வெட்டி வீழ்த்தினர்; பழி தீர்த்துக் கொண்டனர். இப்பழிச் செயலை விரும்பாத அருள்மிகு பசவேசர் "கூடல சங்கமத்திற்குச்" சென்றுவிட்டார். கூடல சங்கமேசரோடு மீண்டும் உரையாடி, உறவாடி, கட்டித்தழுவி, ஆடிப்பாடி இரண்டறக் கலந்து விட்டார். மறைந்தது ஒரு நட்சத்திரம். இவ்வுலக வாழ்வு மறைந்தால் என்ன? பசவண்ணருக்குப் பின்னர் அவருடைய சகாக்கள் அனைவரும் கலியாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியை விட்டு இத்துணைக் கண்டத்தின் பல பாகங்களுக்கும் சென்று அவருடைய ஆன்மநேய ஒருமைப் பாட்டுக் கொள்கையைப் பரப்பினர். பசவண்ணர் மறைந்த காலம் கி.பி.-1167 பின்னர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டிலிருந்த விஜய நகர இராச்சியத்தின் மன்னர்களில் பலர் அவர் கொள்கையைப் பற்றி நின்று பரப்பினர். தற்சமயம் பசவண்ணர் கொள்கையினர் காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி முனைவரையிலும் பரவி உள்ளனர். அமெரிக்கத் தலைவர் "ஆபிரகாம் லிங்கன்" அடிமை நீக்கத்திற்காகப் பாடுபட்டார். அதற்காகச் சுட்டு வீழ்த்தப்பட்டார். "காந்தி அடிகள்" சர்வசமய சமரசத்திற்காகப் பாடுபட்டார் அதற்காக அவரும் பிற்போக்கர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டார். மக்கள் பிறக்கலாம், இறக்கலாம். ஆனால் முற்போக்குக் கொள்கைகள் முன்னேறிக் கொண்டே செல்லும். இதுவே சரித்திரம் கூறும் சான்று.

## பசவண்ணர் விட்டுச் சென்ற அடிச்சுவடுகள்

கடவுட் கொள்கை இவ்வுலக மக்களுக்கு இன்றியமையாததொன்றாகும். இறைவன் ஒரு இனத்தார்க்கோ, ஒரு குலத்தார்க்கோ சொந்தமானவன் அல்லன். எல்லோர்க்கும் பொதுவானவன். அவனே தாய்தந்தையும் ஆவன். தாயும் தந்தையும் ஆகிய அவனுடைய இறை இன்பம் பெற அன்பர்கள் யாவரும் சாதி, குல, வருண, ஆண், பெண் வேறுபாடின்றி நேரடித்தொடர்பு வைத்துக்கொள்ளலாம். நேரடித் தொடர்பாலேயே உண்மையான இறை இன்பம் பெறமுடியும். தாயும். தந்தையும் தாய் மொழியில் தொடர்பு வைத்துக்கொள்ளுவதால்தான் உண்மை பக்தி உண்டாகும். அவ்விதம் ஏற்படும் பக்தி வெள்ளத்தை யாராலும் தவிர்க்கமுடியாது. தனியார் வழிபாடே அவனை அடைய உண்மை வழி. நமது உடலே ஆலயம். அதில் உள்ள மனமே அவன் எழுந்தருளும் பீடம். மனத் தூய்மையும் பக்தியுமே இறைவனை அடையும் உண்மையான வழி. அர்த்தமற்ற ஆசாரங்களும், குருட்டுத்தனமான சடங்குகளும் தூய்மையையும். பக்தியையும் மறைக்கும் களைகள். இறைவனை உள்ளத்திலிருந்தும் உடலிலிருந்தும் என்றும் பிரிக்கமுடியாது. மக்கள் தொண்டே மகாதேவன் தொண்டு. சமூகத் தொண்டே சமயத் தொண்டு; அரசியல் வாழ்க்கையில் இருந்தாலும், எந்த வாழ்க்கையில் இருந்தாலும், மக்களுக்குத் தொண்டுபுரிவதே குறிக்கோளாக இருக்க வேண்டும். உருவ வழிபாடு இன்றியமையாதது ஒன்று ஆகும் : ஆனால், உருவ வழிபாட்டை வீணாகப் பெருக்கிப் பொருள்களை விரயமாக்க வேண்டியதில்லை. அப்பொருள்களை உயிருள்ள தெய்வங்களாகிய மக்களுக்கு ஆக்கித் தருவதே சாலச்சிறந்தது. சாத்திரம் படித்தோ நாத்திகம் பேசியோ காலத்தை வீணாக்காது மக்கள் தொண்டாற்றுவதே மேல். ஆண்களோடு, பெண்களுக்கும் இறைவனை உடலில் தரித்துத் தொட்டு வணங்க உரிமை உண்டு. கடவுள் தனியார் வழிபாட்டுக்கொள்கை பகுத்தறிவுக்கு ஒவ்வாதது அல்ல. நூல்களைப் படித்து மட்டும் பலன் இல்லை; அவற்றில் கண்டபடி நடக்கவேண்டும்.

" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பொவ்வா செய்தொழில்
வேற்றுமையான்!

இவையே பசவேசர் நமக்கு விட்டுச் சென்ற அடிச்சுவடுகள் ஆகும். அவற்றைப் பின்பற்றி உய்வோமாக! ஓங்குவோமாக!! வாழ்க பசவநாமம்! வளர்க அவர் புகழ்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பிரணவம்"

## ஓம் என்றுறுதிதந்தான் எங்கள் குருநாதன்

திருவைந்தெழுத்தைப் பற்றிச் "சிவ தொண்டன்" அன்பர்கள் முன்பே அறிவர். ஈண்டு பிரவணத்தைப்பற்றிக் கூறுவாம். பிரணவத்தின் அகத்துறுப்பாயும், உள்ளொளியாயுமுள்ளது பஞ்சாக்ஷரம். "ஓம்" என்பது பிரணவம். இஃது பரமசிவத்தைக் குறிக்கும். இது அ,உ,ம் என்பதின்கூட்டு. இம் மூன்றெழுத்துக்களும் முறையே பிரம்மா, விஷ்ணு ருத்திரர்களேயும், சத்வ, ரஜ, தமோ குணங்களையும் குறிக்கும். வாய் திறத்தலிஞலே அகாரம் சிருஷ்டியையும், இதழ் குவிதலிஞலே உகாரம் ஸ்திதியையும், வாய் மூடுதலிஞலே மகாரம் சங்காரத்தையும் குறிக்கும். ஆதலால், எல்லாப் பிரபஞ்சங்களும் பிரணவத்தில் தோன்றி நின்று ஒடுங்கும். பிரணவம், பஞ்சாக்ஷரமாயிருந்தாலும், பஞ்சாக்ஷரம் பிரணவப் பொருளாய் விளங்குதலாலும், இரண்டும் தம்மிற் பேதமில்லாத் தனி மந்திரங்களாம்.

பேர் ஊர் அற்ற பிரமத்தின் அல்லது கடவுளின் பெயர் பிரணவமே. வேதங்களின் சாரம் பிரணவமே. பிரணவத்தின் பரந்த விளக்கமே வேதசாஸ்திரங்கள். வாழ்வு, எண்ணம், பிரணவமே. செயல் யாவைக்கும் மூலமானது பிரணவத்தின் பொருளையும் இரகசியத்தையும் உணர்ந்த சாதகர்கள் உண்மையின்பம் உறுகின்றனர்.

அண்டகோடிகள் யாவற்றுக்கும் உறைவிடம் பிரணவமே. பிரணவத்தினின்றும் தோன்றி பிரணவத்திலேயே நிலைத்துப் பிரணவத்திலேயே யாவும் ஒடுங்குகின்றன. முதலும், இடையும், கடையும் பிரணவமே, பிரணவத்தை மையமாகக்கொண்டு பதங்கள் தோன்றின. பதங்களுக்கு உயிரானது உயிர் எழுத்துக்களாகும். உயிரெழுத்துத் தானே பிரகாசிக்கின்றது. உயிரோடு கூடாத மெய் உயிரற்றதே. உயிரின்றி உடலசையாதிருப்பதுபோல உயிரெழுத்துக்களின்றி மெய்யெழுத்துக்களைக்கொண்டு உச்சரிக்கமுடியாது. எழுத்தெல்லாம் பிர பிரணவத்தையே முதலாகவுடையன. மொழியெல்லாம் பிரணவத்தையே முதலாகவுடையன. இதற்குள்ள வேறு பெயர் அசபையாகும். ஒவ்வொரு மொழிக்கும் நாம, ரூப, ஞான, அனுபவம் என நான்கு தன்மைகள் உள. நாமம் என்பது சத்தம், ரூபம் என்பது பொருள். ஞானம் என்பது நாம ரூபமாகிய இரு நிலைகளுக்குள்ளும், புறம்பும் வியாபித்துள்ள சச்சிதானந்தம். சச்சிதானந்தமாகிய கடவுளை உணர்தலே அனுபவமாகும். நிலையுஞ் சொல்லும் பிரிக்கமுடியாதன. நாமரூபமும் அவ்வண்ணமே. அதுபோலப் பிரணவமும் அதன் பொருளும் பகுக்கமுடியாதன. உலகிலுள்ள மொழிகளுக்கும், நாதங்களுக்கும் மூலமாவது ஓம் என்னும் பிரணவமே. கிறீஸ்தவர்கள் கூறும் "ஆமென்" என்பதும், முஸ்லீம்கள் கூறும் "அஃமீன்" என்பதும் இஃதே.

பிராணனுக்கூடாகப் பாய்வதால் "ஓம்" என்பது பிரணவமாற்யிறு. நிர்க்குணமும் சகுணமும் இதுவேயாகும். கோயில்கள் பலவுள. எத்தனை பெரியதாயினும், அதன் மூல விக்கிரகம் இருக்கும் கர்ப்பக்கிருகம் சிறியதாகத்தான் இருக்கும். அந்தக் காலத்தில் விஷயம் ஒன்றும் அறியாதார் மூலமூர்த்தியைக் காற்று வெளிச்சம் எதுவும் இல்லாத இருட்டு அடைந்த குகை போன்ற இடத்தில் வைத்திருக்கிறுர்கள் எனத் தற்காலம் உண்மையுணரார் பலர் கூறுவர். இது அவர்கள் அறியாமையன்றிப் பிறிதில்லை. நம் முன்னோர் வேண்டுமென்றேதான் மனிதனின் இருதயம் போன்று சன்னலில்லாத இடத்தில் ஆண்டவனை வைத்தார்கள். கோயிலுக்குச் சென்று கர்ப்பக்கிருக மூர்த்தியைப் பார்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் இருட்டில் ஒன்றும் தெரியாது. அப்புறம் சற்றுக் குனிந்து கூர்ந்து கவனித்தாற்ருன் தெரியும். அருச்சகர் தீபாராதனே காட்டும்போது தீபத்தால் ஓங்கார எழுத்தை எழுதுவதுபோல, ஓம் என்னும் சுழிப்புமாதிரிக் கையைச் சுற்றிக் காட்டுவார். அந்த ஓங்கார ஒளி வட்டத்துக்குள் நாம் கடவுளினது உருவத்தைக் காண வேண்டும். இந்த ஓங்கார ஒளி வட்டத்திற்குள் காணும் சோதி சொரூபத்தை மனத்திலும் வைத்துப் பார்க்கவேண்டும்.

ஓம் என்ற மந்திரம் ஒளியுடையது என்று உணர்ந்திருக்கிருேம். தியான யோகத்தில் ஈடுபட்டவர்களுக்கு அதுவே ஒளியாகவும் தோன்றும். ஒலி, ஒளி இரண்டும் கலந்த ஒன்றுதான் பிரணவ மந்திரம்.

புறத்தே ஒலியே இல்லாத மௌனம் ஒருவகை. புற ஒளி இருக்கையில் மௌனம் இன்னெருவகை. ஒளியில்லாத மௌனத்தைப் பயிலுதல் எல்லோராலும் முடியாது. ஏனெனில் ஒலியற்ற மௌனதியானத்தில் ஈடுபடும் போது புறத்திலிருந்து சிறிய ஒலி வந்தாலும் தியானம் கலேந்து விடும். புறச்சத்தம் காதில் விழுந்து தியானம் கலேயாதவாறு நாமே ஓங்கார சப்தத்தை உள்ளே எழுப்பிக் கொண்டிருந்தால் அந்த ஒலி இதிற் கலந்து அழிந்து விடும்.

இதற்காகவே பூசையாராதனேக் காலங்களில் எங்கள் இந்துமத கோயில்களில் நாதஸ்வர வாத்தியங்களேயும் ஏனேய பஜனே முதலியனவற்றையும் நியமித்துள்ளார்கள். நாதஸ்வர வாத்திய இன்னிசை எல்லா ஒலிகளேயும் தன்னுள் அடக்கிக் கொண்டு எழும்பும் போது அதனேடு நாமும் கலந்து லயித்து விடுகிருேம்.

தியானம் சுலபமாகச் சித்திப்பதற்காக ஓங்கார நாதத்தைச் சுருதியோடு உள்ளே எழுப்பிக்கொண்டு லயித்தால் புற ஒலி நம் அளவில் அடங்கும். புறச்சத்தம் எதுவும் காதில் விழாதவாறு காது குப்பென்று அடைக்கின்ற மாதிரி இருக்கும் என்று ஒருவனக அனுபவத்தைச் சிலர் சொல்லுவார்கள். ஓம் எல்லா மந்திரங்களுக்கும் மூலமாகவுள்ளது. எல்லா மந்திரங்களும் முடிந்த இடம் அது. உலகத்துக்கு மூலமாக இருப்பது கடல். கடல் நீர் மேகமாகி, மழையாகி ஆறுகளாகிப் பூமியை வளம்படுத்துகின்றது. கடைசியில் அந்நீர் கடலில் வந்து விழுகின்றது. கடல் மூலமாகவும் முடிந்த முடிபாகவும் இருக்கிறது. அது போன்றதே "ஓம்". எல்லாமே ஒரு லயத்தோடு சேர்ந்து வேகமாகச் சுற்றும்போது ஒரு திரட்சியை அடையும். அது போல ஓம் என்ற பிரணவ மந்திரத்தைக் கருவியாகக்கொண்டு வேகமாக ஒரு லயத்தோடு சேர்ந்து செபிக்கச் செபிக்க மனதிலே அந்த ஓம் என்கிற ஒலியே திரட்சி பெற்று உருவம் எடுத்துச் சோதி மயமாகி விடும்.

எல்லா மந்திரங்களேயும் தன்னுள் அடக்கிக் கொண்டு விளங்கும் பிரணவ மந்திரத்தை முதலில் வாய்விட்டுச் செபிக்கப் பழக வேண்டும். இரண்டாவது நிலேயில் நாக்கு அசைவு மட்டும் இருக்கும், ஒலி வெளி வராது. மூன்ருவது நாக்குக் கூட அசையாது. சுவாசம் போல உள்ளத்திற்குள் ஒலி நிற்கும். அதனுடன் கருவி காரணங்களெல்லாம் லயிக்க வேண்டும். அப்போது ஓம் என்னும் உருவம் அக்கண்ணில் ஒளிமயமாகப் பிரகாசிக்கும். அதனுள் தியானத்திலிருத்திய மூர்த்தியை நிலேநிறுத்திக் காணக்கூடுமாயின் அதற்குப் பின்பே அனுபவம் தொடங்குகிறது. இதனுள்ளே அவ்வுருவைக் கண்டு அப்படியே தூங்கலாம். இதுவே தூங்காமல் தூங்கிச் சுகம்பெறும் நிலேயாகும்.

பிரணவம் உத்கீதம் எனவும் பெயர் பெறும். ஓம் என்று கானம் செய்யப்படுகின்றமையால் உத்கீதம் என்று சொல்லப்படுகிறது என்று சாந்தோக்கிய உபநிடதம் கூறுகின்றது.

பிராணனேடு சேர்ந்து ஓம் உச்சரிக்கப்படவேண்டும். ஓம் வாக்கு வடிவம். வாக்குச் சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என நான்கு வகைப்படும். செவிப்புலனும் வாக்குத் தோன்றுமுன் வாக்கிந்திரியத்தின் கண் நுட்பமாகத் தோன்றுவது சூக்குமை. இந் நான்கும் ஒன்றிற்கு ஒன்று தூலமானவை. செவிப்புலனுகும்படி உச்சரிக்கப்படுவது வைகரி. உயிர்ப்பு வாங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் பொழுதும் வெளிவிடும்பொழுதும், அச்
சுவாசத்துடனேயே "ஓம்' என்று உச்சரிக்க
வேண்டும். இதனால் "ஓம்" என்பதும் பிரா
ணனும் தொடர்புறுகின்றன. இத் தொடர்
பில் மனம் ஊன்றி ஒருமைப்பட்டு நிற்க
வேண்டும். ஓங்காரத் தியானத்தால் மனம்
எளிதிற் கட்டுப்பட்டுவரும். மிகுந்த முயற்
சியாற் செய்யப்படும் யோகத்தின் பயன்
இதனால் உண்டாகும். யோக: சித்தவிரு
த்தி நிரோத: (யோக சூத்திரம்) என்பத
னால் சித்தவிருத்தியை அடக்குவதே யோக
நாமம் - என்பது புலனாகின்றது. அது ஓங்
காரத் தியானத்தால் அடையப்படும்
என்று சுருதிகள் கூறுகின்றன.

வாக்கும் பிராணனும் மனமும் ஒன்று
சேரின் மிகுந்த வல்லமை ஏற்படும். உத்
கீத அட்சரத்தை எந்த வித்துவான் இவ
வாறு உபாசிக்கின்றானோ அவன்
எல்லா விருப்பங்களையும் அடைகிறான்.
(சாந். 1-7).

ஓங்காரத்தைத் தியானம் செய்பவன்
இறையொளியை அடைகின்றான். அவன்
கடவுளோடு தொடர்புற்றவன் ஆகிறான்.
மிகுந்த ஆற்றல் உற்ற உள்ளம் உடைய
வன் ஆகிறான். அவனது உள்ளத்தில் நின்
றும் உலகியலாசைகள் மறைந்து விடுகின்
றன. பளிங்குபோல அவன் தூயவனாகின்
றான். வேதங்களுக்கெல்லாம் பிரணவம்
தலைமையானது. பிரணவம் இல்லாத
வேதாத்தியனம் பயனற்றது. எல்லா
வேதங்களும் பிரணவத்தை முதன்மையாக
வுடையன. படைக்கப் பட்டனவும் படுவன
வுமாய எல்லாம் ஓம் என்பதில் அடங்கும்.
பிரம்மம் ஓங்கார வடிவம். ஓங்காரத்தை
யன்றி எதுவுமில்லை; ஓங்காரத்தையின்றி
எதுவும் இல்லை. உலகம் ஓங்கார மயம் ஓங்
காரத்துக்கு எந்த மந்திரமும் இணையா
காது. ஓங்காரமில்லாத மந்திரம் உயிரற்ற
உடல்.

''இவை எல்லாம் ஓம் என்ற எழுத்து''
அதனுடைய அர்த்தத்தைத் தெரிந்து கொள்ள
வேண்டும்-உண்டானது, இருக்கிறது, உண்டாகப்
போகிறது எல்லாம் ஓங்காரம். மூன்று காலங்
களையும் தாண்டியுள்ளது யாது, அதுவும்
ஓங்காரந்தான். (நிருஸிம்ஹ 4-7) ஓங்காரத்
தின் முடிவு நாத தத்துவத்தின் முடிபு.
நுட்பமான நாதப்பிரம்மானுபவ ஞானம்

ஓங்காரத் தியானத்தால் ஏற்படுகின்றது. நாதப்
பிரம்மத்தின் மேன்றிலை சுத்தப்பிரம நிலையாத
லால், ஓங்காரமே பிரம்மம் எனக் கூறப்படுகி
ன்றது. பிரம்மமே எல்லாம். பிரம்மத்தில் நின்
றும் உலகம் உற்பத்தியாயிற்று. ஆகவே ஓங்
காரமே அனைத்துமாம்.

ஓம் என்பதற்கு அநுஞ்ஞாட்சரம் என்
றும் சமிருத்தி என்றும் பெயர். ஓம் என்று
அனுமதி அளிக்கப்படுவதுபற்றி அஞ்ஞாட்
சரம் என்றும், விருப்பங்களை மிகுதியாய்
அளிப்பதனால் சமிருத்தி என்றும் பெய
ரேற்பட்டதாக உபநிடதம் கூறும். (சாந்.
1.1.8.)

''அங்கங்களில் இரசமுள்ளது'' என்பதுபற்றி
யும் அங்கிரஸ் என்ற முனிவரால் உபா
சிக்கப்பட்டது பற்றியும், ஓம் என்பதற்கு
அங்கிரஸ் என்னும் பெயர் வழங்கலாயிற்று.
இன்னும் உபாசகர்களுடைய பெயர் ஏது
வாக ஓங்காரத்திற்கு, பிரசுற்பதி, ஆயாஸ்
யம் என்ற பெயர்களும் வழங்கப்பட்டுள்
ளன. (சாந். 1.1.11,12)

ஓங்காரம் நான்கு பிரிவுடையது;
அ + உ + ம் = ஓம். அ - முதற் பாதம். உ - இர
ண்டாவது பாதம்; ம் - மூன்றாவது பாதம்;
ஓம் - நான்காவது பாதம். அ. இ. உ. என்ப
வற்றைச் சிவன், பிரம்மா, விட்டுணு என்
றும், விசுவன், தைச்சன், பிராஞ்ஞன்
என்றும் பூலோகம், புவலோகம், சுவலோ
கம் என்றும், இங்ஙனம் மும்மூன்றான
பொருளாகக் கூறுவர். ஓம் என்பது யாவற்
றையும் அடக்கி நிற்கும் என்பர். இதன்
உண்மையாவது, பிரிவுபடும் பொருள்க
ளின் பிரிவுகள் எல்லாம் ஓங்காரத்தின்
பிரிவுகள் என்றும், பிரிபொருள் பிரியாப்
பொருள்களின் தொகுதி வடிவம் ஓம் என்
றும் கொள்ளத்தக்கது என்பதாம். அ-பிரு
துவி, ஆகாசம், இருக்கு, பிரமன் வசுக்
கள், காயத்திரி, காருகபத்தியம்; உ-அந்த
ரிட்டம், யசு, விட்டுணு, உருத்திரர், தட்
சிணாக்கினி; ம்-தியு, சாமம், உருத்திரன்,
ஆதித்தியர், ஆகவனீயம்; ஓம் - சந்திரலோ
கம், அதர்வணம், ஏகரிஷி, மருத்துக்கள்,
சம்வர்த்தகாக்கினி, விராட் என்று நிரு
ஸிம்ஹதாபனியில் கூறப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்காரம் சுவரம். சுவரதிற்குப் போவது, சஞ்சரிப்பது என்பது பொருள். ஒலியைத் தன்னிடமாகவுடையது எனவும் பொருள் கூறலாம். பிராணனும் சஞ்சரிப்பது. ஆகவே, ஓம் பிராணன், பிராணன் ஓம். பிராணனோடு கலந்து ஓம் உச்சரிக்கப்பட வேண்டும்.

உத்கீதம்-ஓம். உத் - பிராணன், ஆகாசம், சூரியன், சாமம்; கீ-நாக்கு, அந்தரிசம, வாயு; யசு; தம் - அன்னம், பிருதுவி, அக்கினி, ரிக். இவ்வாறு உத்கீத சத்தத்திற்கு அர்த்தம். உத், கீ, தம் என்னும் மூன்று பிரிவுகளையும், தனித்தனி உத்கீதமாக உபதேசிக்கவேண்டும் என்று உபநிடதம் கூறுகின்றது.

ஓங்காரத்தைத் தியானித்துத் திறமையடைந்தவர்கள் பலர். அவருள் ஸிலகர், சைகிதாயனர், பிரவாகனர், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி இராமதீர்த்தர் என்பார் சிறந்தார். ஓம் சாமவேதத்துக்கு இருப்பிடம். ஓங்காரம் பரோவரீயமாவது மிகச் சிறந்ததாயிருப்பது; பரமான்ம சம்பன்னமானது.

எல்லாவற்றினும் சாரமாயிருப்பது பிரணவம். ஓம் என்ற ஒலி பிரமத்தின் சரீரம்; அதற்குள் பிரம்மம் வித்துவான்களுக்கு விளங்குகிறது. இலைகள் ஒரு காம்பிற் கட்டுப்பட்டு இருப்பதுபோல, எல்லா வாக்குக்களும் ஓங்காரத்திற் கட்டுப்பட்டு இருக்கின்றன. எனவே, மொழிகளெல்லாம் ஓங்காரத்தையன்றி இல்லை. வேறு வேறான மொழிகள் எல்லாம் ஓங்காரத்திலேயே அடங்கி நிலவுகின்றன.

வேதாந்த இரகசியங்களாகிற தேனீக்களுக்கு ஓங்காரம்தான் மலர். எல்லா வேதங்களும் பிரணவத்தைப்பற்றி உய்கின்றன என்பது இவ்வுபநிடத வாக்கியசாரம்.

பிரணவம் வேதசாரமாகையால், அதை அத்தியயநஞ் செய்வதனால் வேதாத்தியயநத்தின் பயன் உண்டாகின்றது. பிரணவத்தை அத்தியயநம் செய்வதினால் வேதாத்தியயநத்தின் பயன் உண்டாகின்றது. பிரணவத்தை அத்தியயநம் செய்கின்றவன் எல்லாவற்றையும் அத்தியயநம் செய்தவனாகின்றான்.

ஓங்காரம் மூன்று மாத்திரை உடையது. ஒரு மாத்திரையுள்ள ஓங்காரத்தைத் தியானம் செய்பவன் மானுட உலகில் சிறந்த பிறப்பையடைகின்றான். இரண்டு மாத்திரையுள்ள ஓங்காரத்தைத் தியானம் செய்பவன் சூரியதேசத்தில் தொடர்புற்றும் பாவங்களினின்றும் நீங்கிப் பிரம்மலோகத்தை அடைந்து பிரம்மஞானம் எய்தி அறிவு நிலையிற் கூடுவன். இவ்வாறு பிரசினோ பநிடதம் கூறுகின்றது.

ஓங்காரத்தை உப நிடதங்கள் எல்லாம் சிறப்பித்துக் கூறுகின்றன. ஓம் என்பதே வேத முதன் மந்திரம். காயத்திரி முதலியவற்றுக்கு அதுதான் சிரம். ஓங்காரத்தை ஓய்வு உள்ள பொழுதெல்லாம் நாம் தியானிக்கவேண்டும்.

'ஊமை யெழுத்தறி யென்றான் எங்கள் குருநாதன்.'

ஓம்! தத் சத் ஓம்!

சிவ சிவ

ஓமெனும் ஓங்காரத்துள்ளே யொருமொழி
ஓமெனும் ஓங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே.
— (திருமூலர்)

(ஜனவரி - பெப்ரவரி. 1959)
மலர் 23 - இதழ் 2 - சிவதொண்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீழ் மாகாணத்தில் வீர சைவம்

**ஜோதிடர், சி. கணபதிப்பிள்ளை**

*அட்டப்பள்ளம், நிந்தாவூர், மட்டக்களப்பு.*

மாணிக்கத் துவீபமெனவும் தர்ம துவீபமெனவும் போற்றப்படும் எங்கள் இலங்காபுரியில் புராதன காலந்தொடக்கம் இன்றுவரை சிவாவழிபாடு மேலோங்கிவருகின்றது. இலங்கை மன்னனாகிய இராவண மகாராஜன் சிவ வழிபாட்டைத் தன்னுடைய உயிரினும் மேலாக மதித்தவன் இவன் ஒரு வீரசைவனாவான். இவனது பக்தியின் மேம்பாட்டை அறிந்து திருநாவுக்கரசு சுவாமிகளும் மற்றும் சமய நாயன்மார்களும் தேவாரங்களிலே புகழ்ந்து பாடியுள்ளார்கள். இலங்கையிலே திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம் தான்தோன்றீஸ்வரம் இப்படிப் பஞ்ச சிவாலயங்கள் பல அமைந்திருப்பது இங்கு சிவவழிபாட்டின் பழமைக்குச் சான்றாகும்.

கிழக்கு இலங்கையிலே மிகச் சிறப்புற்று விளங்கும் சிவாலயம் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயமாகும். இவ்வாலயத்தில் மூலவர் சுயம்புலிங்க மாகத் தானே தோன்றி அடியார்களுக்குக் கருணை பொழிந்து இரட்சிக்கின்றார்.

இலங்கை மன்னனாகிய இராவணேஸ்வரனின் விருப்பப்படி அவனால் 6 கோடி சிவலிங்கங்களும் அவனது தம்பியால் மூன்று கோடி சிவலிங்கங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும், இப்பிரதிஷ்டையை வீரசைவ மூலாசாரியர்களின் முதல்வராகிய ஸ்ரீ இரேணுக சிவாசாரியார் செய்து வைத்து விபீஷணனுக்கு ஸ்ரீ சைவ உபதேசஞ் செய்து வைத்ததாகவும் "சித்தாந்த சிகாமணி" என்னும் நூலில் மிகத் தெளிவாக கூறப்பட்டுள்ளது இதிலிருந்து வீரசைவம் இலங்கையிலே புராதன காலந் தொடக்கம் இருந்து வருவது அறியக்கூடியதாக விருக்கின்றது.

கிழக்கிலங்கையை ஆட்சிபுரிந்த குளக்கோட்ட மன்னனும் ஒரு வீரசைவனாவான். அவன் வீரசைவ மதவளர்ச்சியைத் தனது வாழ்க்கையில் இலட்சியமாகக் கொண்டவன் இவனது காலத்தில் கிழக்கு மாகாணம் முழுவதுமுள்ள ஆலயங்கள் எல்லாவற்றிற்கும் வீரசைவக் குருமார்களையே அருச்சகர்களாக நியமித்தான். இவர்களே சங்கமர்களென அழைக்கப்பட்டனர்.

திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலரில் வீரசைவர்கள் பற்றிக் காணப்படும் குறிப்புகள்:-

" கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயக் குருக்கள் பரம்பரை.

இக்கோயிலிற் பூசை செய்யும் குருக்கள் பரம்பரையினர் சைவத்தைத் சேர்ந்த சங்கமர் ஆவர். "சங்கமம்" என்பது முழுமைபெற்ற அல்லது இலட்சியத்தை அடைந்து விட்ட ஆன்மா எனப் பொருள்படும். அதாவது சீவன் முத்தர் நிலையிலுள்ளவர்களே சங்கமர். இச்சங்கமக் குருமார் லிங்கத்தை அணிந்திருப்பர். சங்கமம் பற்றிக் கூறும் நூல் வீராகமம் எனப்படும் இந்தியாவில் கர்நாடக பிரதேசத்திலும் சங்கமரைக் காணலாமென்பர். இவர்களை "நாகார்ச்சுனபுரம்" என்னும் இடத்திலிருந்து குளக்கோட்டன் கொண்டுவந்து தன் திருப்பணிகளைப் பெற்ற கோயில்களிற் பூசைசெய்ய அமர்த்தியதாகக் கூறப்படுகின்றது. சங்கமர் இப் பிரதேசத்தில் குடியேற்றப்பட்ட இடம் "தம்பட்டை" என்னுக கிராம மாகும். இக் கிராமத்தில் இன்றும் இவர்கள் வழிவந்தோரைக் காணலாம். பண்டைய கிழக்கிலங்கையின் கோயில்களிலெல்லாம் சங்கமர்களே பூசகர்களாக அமர்த்தப்பட்டிருந்தனர் என அறிய முடிகின்றது. ஆனல், இன்று தான்தோன்றீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15

வரர் கோயில் மட்டுமே இம் மரபினர் பூசை செய்யும் ஒரேயொரு பெரிய கோயி லாகும். தற்பொழுது தூய்மை வாய்ந்த இப்பரம்பரையும் அவர்களது உயரிய நெறிமுறைகளும் அருகிவருகின்றன.

இதிலிருந்து வீர சைவம் கிழக்கிலங்கை யில் மிகப் பிரசித்தி பெற்று விளங்கிய தென்பதை நன்கு அறியலாம். இவர் களின் சந்ததியினர் இன்றும் வந்தாறு மூலை களுவாஞ்சிக்குடி, பழுகாமம், கொக்கட் டிச்சோலை, தம்பட்டை, அக்கரைப்பற்று முதலிய இடங்களில் வசிக்கின்றார்கள்.

கி. பி. 30ம் ஆண்டில் கலிங்க அரச குமாரன் சோழன் மகன் தம்பதி நல்லாளை விவாகம் முடித்து நாகர் முனைக்குவந்தான். அங்கிருந்த திருக்கோயில் சித்திர வேலா யுத சுவாமி ஆலயத்தைத் திருத்தினான். மல்லிகார்ச்சுனேசுவரத்திலிருந்து சங்கமக் குருமாரைக் கோயில் அர்ச்சகராக நிய மித்தானெனவும் அவர்களுக்குப் பரமரக சியம் பாட ஒரு வெளியும் அவர்கள் குடி யிருப்பதற்குப் பல கிராமங்களையும் மட த்து வளவுகளையும் கொடுத்தானெனவும் மட்டக்களப்புப் பகுதியில் வசிப்பவர்கள் அவர்களுடைய சந்ததியாராவர் எனவும் கூறப்படுகின்றது.

உகந்தை, சங்கமங் கண்டி, கொக்கட் டிச்சோலை பனங்காடு, கோளாவி, நற் பிட்டிமுனை, களுவாஞ்சிக்குடி, பழுகாமம், சித்தாண்டி முதலிய பல கோயில்களில் இவர்களே பூசகர்களாகப் பணிபுரிந்து வருகின்றார்கள். இவர்களினால் மல்லிகார்ச் சுனேசுவரத்திலிருந்து கொண்டுவரப் பட்ட செப்பேடுகள் இன்றும் அப் பரம் பரையினரிடமுள்ளது.

சங்கமர்களைப் புகழ்ந்து பாடும் புரா தன பாடல்களாக மட்டக்களப்பில் வழங்கிவரும் கிராமியப் பாடல்கள் பின் வருமாறு:

செம்புடன் காவி வேட்டி
சிவத்திரு வேஷங் கண்டால்
கும்பிட்டு அடி பணிந்து
கூட்டிப் போய் மனையில் வைத்து
உம்பர்கள் தம்பிரானே
உமையொரு பாகத்தாளே
யென்றகரத அரகாரா
ஆசனத்தில் நாதன் அடியினை விளக்கி
அன்பாய்ச் சீதன அமிர்த மூட்டிச்
செழுமலர்க் கந்தஞ் சாத்திக் கோதறு
தூபதீபம் குணமுடன் அடைக்காய்
நெல்லி
இப்படி யெல்லாம் மாதவஞ்
செய்தவர்கள்
மண்ணிலே பிறப்பார் களென்று
அரகரா அரகரா

வீர சைவத்திலே சிவனடியாரைப் போற்றி வழிபடும் முறை மிகச் சிறப்பா கச் சொல்லப்படுகிறது. மிகப் பழமையும் பெருமையும் வாய்ந்த சமயமானது இலங் கையில் மீண்டும் சிறப்புற்றோங்கும் காலம் நெருங்கிவிட்டது. ஈழமெங்கும் சிவமணங் கமழும் பூமியாக மாறப் போகின்றது. இப் புனித சேவை இனிது நிறைவேறத் தான்தோன்றீஸ்வரன் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE PRACTICE OF SILENCE

The practice of silence, however does not mean merely refraining from speech. It means stilling the vital energies so that there is a cessation of all activity both inner and outer. The body must be without motion, the mind must be serene and heart tranquil. We cannot accomplish this by merely withdrawing to a secluded spot. It is an inferior quality rather. Outer conditions may aid us tremendously in attaining it, but without the inner poise it is impossible to reach.

The practice of silence has profound significance when we embrace the spiritual life as only still waters reflect the perfect image, so only on the surface of the silent heart do we receive the unbroken image of TRUTH.

The idea of silence is not merely avoiding action; it is bringing all our scattered and undisciplined forces wholly under our control. So long as our heart is agitated, our mind stormy and our nerves distracted, it is not possible for us to have undestructed vision or the power of clear decision. But when the moments of stillness come, we have flashes of understanding which make our path clear.

The practice of silence has to do with every part of our system. There is a silence of the body, a silence of the mind and a silence of the heart.

If we will but live a silent, prayerful life. striving to strengthen our purpose and to quiet the noisy voice of the Ego within us, God will make our steps steady and unfaltering, infill us with His DIVINE WISDOM, and bless us with the consciousness of His Holy Presence.

— **Swami Paramananda.**

SIVA SIVA.

**Realization is not a thing to be achieved, you have not to do anything to gain GOD vision, you have simply to undo what you have already done in the way of forming cocoons of desires around you. Realization cannot be obtained at one jump. Time is necessary.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழவள நாட்டில், விபீஷணனின் வேண்டுகோளின்படி ஜகத்குரு ஸ்ரீ இரேணுக சிவாசாரியர் மூன்றுகோடி சிவலிங்கங்களைப் பிரதிஷ்டை செய்யும் காட்சி.

(இராவணன் காலத்தில் 6 கோடியும் விபீஷணன் காலத்தில் 3 கோடியுமாக 9 கோடி சிவலிங்கங்கள் ஈழநாட்டில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன)
– சித்தாந்தசிகாமணி



ஸ்ரீ இரம்பாபுரி வீரசிங்காசனதீஸ்வர ஜகத்குரு பிரசன்ன இரேணுக வீரகெங்காதர சிவாசாரிய மஹாசுவாமிகள் சந்நிதானத்தில் கைலாய தேசிகரும் அவர்தம் இல்லத்தரசியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வீரசைவக் கோட்பாடுகளும் அதன் சமுதாய நோக்கமும்

இரா. வை. கனகரத்தினம்,
உதவி விரிவுரையாளர்,
தமிழ்-இந்துப் பண்பாட்டுத்துறை,
வித்தியாலங்கார வளாகம்,
களனி.

சைவ மதப் பிரிவுகளில் ஒன்று வீர சைவமாகும். இவ் வீர சைவம் இலிங்காயுத மதம் என்றும், வீர மகேஸ்வர மதம் என்றும் பெயர் பெறும். இலிங்க வழிபாடு வரலாற்றுக் காலத்திற்கு முன்பே இந்தியாவில் வழக்கத்திற் காணப்பட்டாலும் அதனுடைய வழிபாட்டுப் பெருக்கமானது வீரசைவ வழிபாட்டின் பின்பே ஏற்பட்டதெனலாம். சைவத்தில் (சிவனிடத்தில்) ஆழ்ந்த பக்தியையும் அதனிடத்தில் பெருமாற்றத்தையும் இவர்கள் வேண்டி நின்றதனல் "வீர சைவர்கள்" எனப்பட்டனர். இம் மதமானது ஒன்றன் பிரிவாக அமைந்தபொழுதிலும் அது தனக்கெனத் தனியான தத்துவங்களேயும், சமூகக் கோட்பாடுகளேயும், தனித்துவமான வழிபாட்டு முறைகளேயும் தன்னுள்ளே கொண்டது.

வீரசைவம் பழமைமிக்கதென்றும், சிவபெருமானின் ஐந்து தலைகளினின்றும் தோன்றியதென்றும், கி. பி. 1156-ல் கலியாணிச் சாளுக்கியரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிய பிச்சலகல சூரியவிச்சலர் மன்னனின் அமைச்சரான பசவரென்பாரே இம் மதத்தைத் தோற்றுவித்தாரென்றும் கருதப்படும். மேலும், இக் காலகட்டத்தில் சிறந்த ஞானிகளாக விளங்கிய ஏகோராமர், பண்டிதராத்தியர், ரேவணர், மருளர், விசுவராத்தியர் ஆகிய ஐவராலும் தோற்றுவிக்கப்பட்டதெனவும் வீரசைவமரபு குறிப்பிடும். கருத்துக்கள் எவ்வாறு அமைந்தபொழுதிலும் வீரசைவமானது பசவருடைய பெரு நோக்கத்தாலும், கடின உழைப்பாலும் கட்டியெழுப்பப்பட்டுப் பின் வந்த இவரது பரம்பரையால் உயர்த்தப்பட்டதாகும் என்பது உண்மை.

வீரசைவ ஞானிகள் இந்தியாவின் பல்வேறு இடங்களிலிருந்தும் இம் மதத்தினை வளர்த்து வந்தனர். ஓர் சமய நிறுவன அமைப்பின் மூலம் அவர்கள் செயற்பட்டனர். பிரதேச ரீதியாக அமைந்த இந் நிறுவனங்களுக்குத் தாமே தலைமை தாங்கி நடத்தினர். இச் சமய நிறுவனங்கள் கேதாரம், ஸ்ரீ சைலம், பெலெஹல்தர், உச்சயினி, காசி ஆகிய இடங்களில் அமைந்திருந்தன. விஜயநகர காலத்தில் கன்னட நாட்டில் வளர்ச்சி அடைந்த வீரசைவம் அதன் வளர்ச்சியின் படர்ச்சியாக ஆந்திர நாட்டை-யும், தமிழகத்தையும் வந்தடைந்தது.

தென்னகத்தில் விஜயநகரப் பேரரசு தோற்றம் பெற்று வளர்ச்சி அடைவதற்கு முன்பாக இப் பிரதேசத்தில் இஸ்லாமிய ஆட்சியும், அவர்களின் சமயமும் பண்பாடும் பரவத் தொடங்கிற்று. இந்து சமுதாயத்திடையே பௌராணிக தன்மையில் அமைந்த கோட்பாடுகளேயும், வழிபாட்டு முறைகளேயும் இவர்கள் கண்டித்ததுடன் அவற்றை இழிவுபடுத்தி மக்களை மதம் மாற்றினர். குறிப்பாக, வேண்டாத கிரியை முறைகளும், உருவ வழிபாட்டு முறைகளும், வருணச்சிரம தர்மக் கோட்பாடுகளும் இத்தகைய கண்டனங்களுக்குள்ளாக்கியன. இந்நிலையில் பழமை மிக்கதும், பாரம்பரியமுமான சைவத்தையும் அதன் வளர்ச்சிக் கருவியாகிய பண்பாட்டினேயும் காப்பாற்ற வேண்டுமென்ற பேரார்வத்தால் வேதத்தையும், ஆகமத்தையும் பொது சிறப்பு நூல்கள் எனக் கொண்டும், அதன் வழி வருகின்ற வைதீகக் கிரியை நெறிகளேயும் தவிர்த்துப் பிரிந்து நின்று சிந்திக்கத் தலைப்பட்டனர். இச் சிந்தனையாளருக்குப் பசவர் தலைமை தாங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசவர் சமண-இஸ்லாமிய மதங்களுக்கு மதம் மாறியோரைச் சைவராக்கவும் சைவத்துக்குத் திடமான சமய நெறி வகுக்கவும் சைவர் ஒரு துறையில் சிறப்பாக வாழ வழிவகுக்கவும் முனைந்தார். மரபு வழியாகப் பேணப்பட்டு வந்த உருவ வழிபாட்டு முறையில் மாற்றம் காண விழைந்தார். வேத-ஆகமக் கிரியை முறைகளையும் பிராமண வகுப்பார்தம் அதிகாரத்தையும் மறுத்து புதியதோர் குருக்குழாத்தைத் தாபித்தார். இக் குழாத்தினர் சங்கமர் எனப்பட்டனர். யாத்திரைகளும், வேள்விகளும் பயனளிக்காவெனக் கூறினார். தம் அடியாரிடமிருந்து சமவுரிமையை விளங்கச் செய்தார். வயது வராதோர் திருமணத்தை வெறுத்தார். பெண்களுக்குச் சமவுரிமையை நல்கி, கணவனை இழந்த பெண்களுக்கு மறுமணம் செய்யும் உரிமை வழங்கப்பட வேண்டுமென்றார். தம் அடியார் கூட்டத்திலே பெண்களையும் சேர்த்துக் கொண்டார். இறந்தோரை எரிக்கும் முறையை அடியோடு வெறுத்தார்.. இறந்தோரைப் புதைத்தல் வேண்டும் என்று வற்புறுத்தினார். இவ்வாறு அன்றைய சமுதாயத்தில் மாற்றங்களை வேண்டி நின்றார்.

பசவர் தனது சமய சமுதாய நோக்குடன் வழிபாட்டில் மாற்றத்தையும் புகுத்த விழைந்தார். சிவனே முழுமுதற் கடவுளாகக் கருதப்பட வேண்டும். அவனையே வணங்க வேண்டும். சிவனில் ஆழ்ந்த பத்தியுள்ளோர் ஒவ்வொருவரும் தமக்கென தெரிவு செய்த குருவை வணங்க வேண்டும். ஒவ்வொரு இலிங்காயத ஆணும் பெண்ணும் தம்முடன் ஒரு இலிங்க உருவை கொண்டு செல்ல வேண்டும். இவற்றை வெள்ளி அல்லது மரத்திலான பேழையிலே அசைத்துக் கழுத்தில் தொங்கவிட்டுச் செல்ல வேண்டும். அவ்வாறு செய்வதால் புறவுலக சிந்தனை குறைக்கப்பட்டு உள்ளம் முழுவதும் சிவமயமாக அமைதற்கு இது வழிவகுக்கும் என்று கருதப்பட்டது. மேலும், தமிழ் நாட்டைச் சேர்ந்த அறுபத்துமூன்று நாயன்மார்களின் மேலாண்மையையும் கன்னட ஒருமையாளரின் கூற்றுக்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

கன்னடத்திலும், தெலுங்கிலும், தமிழிலும் இக் கருத்துக்களைப் பொருளாகக் கொண்ட இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. கன்னட மொழியில் வீரசைவக் கருத்துக்களை வலியுறுத்தும் நூல்கள் பெருவாரியாகத் தோற்றம் பெற்றன. இவைகளும் பொருள் மரபிற்கேற்ப இதனை இரண்டு வகையாக வகுத்தாராய்வார்கள். ஒன்று, சீர்திருத்தவாதிகள் பக்தர்கள் ஆகியோரின் வரலாற்றினை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்கள். மற்றையது, மதக் கோட்பாட்டுக் கருத்துக்களை விளக்குவன. இவ்வாசிரியர்களுள் வீமகவி, மகாதேவியக்கர், அரீசுவரர், இராகவங்கர் போன்றோர் முன்னைய பகுப்புக்கிணங்க வீரசைவ நூல்களைப் படைத்தனர். சாமராசர், இலக்கண்ணன் யக்கநாகியன், குரு பசவர், விரூபராசா, வீரபத்திரன், சர்வஞான மூர்த்தி போன்றோர் பின்னைய பிரிவைச் சேர்ந்தோர் ஆவர்.

கன்னட வீரசைவ எழுத்தாளர்களின் இலக்கியத்தின் பொருளடக்கத்தினை இ.வி.றைசு என்பார் பின்வருமாறு விளக்குகின்றார்: ஒவ்வொரு பந்தியின் இறுதியிலும் எந்தப் பெயர்களால் சிவபெருமான் அந்நாட்டில் வழிபடப்பட்டாரோ அவற்றுள் ஒரு பெயர் இருந்தது. நடையைப்பொறுத்தவரையில், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையிலும், கருத்தொப்புமையை எடுத்துக் காட்டும் வகையிலும் மேற்கோள்களைக்காட்டும் விதத்திலும் அமைந்திருந்தன. பொருட் செல்வத்தின் உபயோகமின்மை, வெறும் கிரியைகள், புத்தகப் படிப்பு ஆகியவற்றின் பெறுமதியின்மை, வாழ்க்கை நிலையாமை, சிவ பத்தனின் ஆன்மிகக் கோட்பாட்டுச் சிறப்பு ஆகியவற்றைப் பற்றியும் இவை கூறுகின்றன. உலகிலுள்ள செல்வத்திற்கும் சொகுசுக்கும் ஆசைப்படுவதை விட்டு, உலகப்பற்றைத் துறந்து மிதமான வாழ்க்கை வாழ்ந்து சிவபெருமானைச் சரண் அடையும்படி இந்நூல்கள் மாந்தர்க்கு ஆலோசனை கூறுகின்றன. இக் கருத்துக்களை ஒட்டி தமிழகத்தை முன்னோக்கிப் பார்க்கும்போது பல்லவர் காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட பத்தி இயக்கத்துச் செல்வாக்கின் தாக்கத்தினை இவ் விடத்தில் மனங்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டாம் நூற்ருண்டிலிருந்து தெலுங்கு மக்களின் சமய வாழ்க்கையில் வீரசைவம் மிக்க இடத்தை வகிக்கத் தொடங்கியது. இக் காலப்பகுதியில் வாழ்ந்த கவிஞர்கள் வீரசைவத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்களாகவும், பிரசாரகர்களாகவும் விளங்கினுர்கள். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் நன்னே சோடனின் குருவாக விளங்கிய மல்லிகார்ச்சுன பண்டிதர், பால்குரிசி சோமநாதர் என்பவர்கள் ஆவர். இவர்களது இலக்கியத்தின் பொருளாக வீரசைவக் கோட்பாடுகள் அமைந்தன. வீரசைவம் தமிழகத்தில் திருமூலர் காலத்திற்கு முன்பே பரவி இருந்ததென்பர். ஆனுலும் பன்னிரண்டாம் நூற்ருண்டுக்குப் பின்னரே தமிழகத்தில் இதன் செல்வாக்கு மிகுந்த அளவில் பரவிற்று. மதுரை, காஞ்சி, திருப்பரங்குன்றம், திருச்சி, தஞ்சை கோவை, புதுவை போன்ற இடங்களிலெல்லாம் காலக்கிரமத்தில் இம் மதம் செல்வாக்குப் பெற்று விளங்கிற்று. இவ்விடங்களில் வீரசைவர்கள் சமய நிறுவனங்களை நிறுவித் தமது கொள்கைகளையும், வழிபாட்டு முறைகளையும் போதித்தனர். கும்பகோணத்தில் அமைந்திருந்த பெரிய மடமே வீரசைவத்தின் தமிழ் நாட்டுத் தலைமை நிறுவனமாகச் சோழர் காலத்தில் அமைந்திருந்தது.

"குடந்தையம் பதியில் கோதிலாப் பெரிய
மடந்தனில் வாழ்வீர மகேச்சுரர் வாழியே"

எனத் தக்கயாகப் பரணி இதன் சிறப்பினைக் குறிப்பிடுவது இங்கு மனங்கொள்ளத்தக்கது. துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், சிதம்பர சுவாமிகள், குமாரதேவர், சாந்தலிங்க சுவாமிகள் ஆகியோர் தமிழ் நாட்டில் வாழ்ந்த வீரசைவப் பத்தி நெறியாளர்களிலே தலையானவர்கள். சிவப்பிரகாச சுவாமிகள் வட மொழியிலும், கன்னட மொழியிலும் எழுந்த வீரசைவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். இரண்டாம் தேவராயரின் (1422 - 1446) அரசவைப் புலவராகிய சாமராசர் பிரபுலிங்கலீலை என்ற நூலை இயற்றினுர். இது பசவரின் தோழமைமிக்கவராக விளங்கிய பிரபுலிங்கரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. இவர் கணபதியின் மறு அவதாரம் என்று அக் காலத்திற் கருதப்பட்டார். இந் நிலை கன்னடத்திலிருந்தும் சித்தாந்த சிகாமணியை வடமொழியிலிருந்தும் தமிழில் சிவப்பிரகாச சுவாமிகள் மொழி பெயர்த்தார். மேற்கூறிய ஞானிகளின் பெயரிலே தமிழகத்திலும் சமய நிறுவனங்கள் அமைக்கப்பட்டு வீரசைவத்தின் விழுமிய கருத்துகள் மக்களிடத்தில் வலியுறுத்தப்பட்டு வருகின்றன. மற்றைய சைவ மடாலயங்கள் போன்று இவையும் தமிழகத்திலே குறிப்பிடக் கூடிய பங்கினை ஆற்றுகின்றன.

வீர சைவத்தின் சமய சமுதாய சீர்திருத்த சிந்தனைகளும் அவற்றினைப் பொருளாகக்கொண்டெழுந்த இலக்கியங்களும் இறைவன், ஆன்மா, உலகு ஆகியவற்றையும், அவற்றிடையேயுள்ள தொடர்பினையும் வலியுறுத்திப் புதிய தத்துவத்தினை வெளிப்படுத்தி நின்றன. சைவத் திருமுறைகளின் சாரமே சைவ சித்தாந்தம்போன்று வீரசைவப் பெருநூல்களிலும் பொருளின் சாரமே வீரசைவ ஆன்மீகக் கோட்பாடுகளாக வெளிவந்தன. வீர சைவத்தின் கோட்பாடுகள் ஏனைய தத்துவ நெறிகளினின்றும் வேறுபட்டது. தனித்துவம் மிக்கது. வீர சைவம் சைவத்தின் ஓர் பிரிவு. சைவம் வேதத்தைப் பொதுநூலென்றும் ஆகமத்தைச் சிறப்பு நூலென்றும் கொள்ள, வீரசைவம் ஆகம நெறியைத் தழுவநினைத்தபொழுதிலும் வேதத்தினையும் அதனை ஒட்டிய வழிபாட்டு முறைகளையும் அடியோடு தவிர்த்தது. சைவம் முப்பத்தாறு தத்துவங்களையும் ஏற்றுக்கொள்வது போன்று வீரசைவரும் முப்பத்தாறு தத்துவங்களையும் ஏற்றுக்கொள்வர். இந்தத் தத்துவங்களுக்கு இவர்கள் கொள்ளும் பொருள் மரபுகள் வேறுபட்டு நிற்கும். சிவனே இரு மதங்களின் முழுமுதற் கடவுளும் ஆவார். தத்துவ நோக்கில் இவர்களின் தீவிரமே இவர்களை வீர சைவர்கள் என்று அழைப்பதற்குக் காரணமாயிற்று என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீர சைவ தத்துவ நெறிக்குப் பெயர் சத்தி - விசிட்டாத்வைதம் என்பதாகும். தன் சத்தியினால் விளக்கப்பெறும் இறைவனது இருமையற்ற தன்மை என்பது இதன் பொருளாகும். இத் தன்மைக்கேற்ப இறைவனின்று அகலமுடியாத சத்திகாரணமாக இறைவனும் ஆன்மாவும் பிரிக்கமுடியாத தன்மையுடைவர்களாக இருக்கின்றார்கள். இறைவன் முழுமுதற்பொருள். அதன் பகுதி தனிப்பட்ட ஆன்மா. ஆன்மா உடல். இறைவன் உயிர்.

சிவனே இவ் வுலகினைப் படைத்தற்கு முதற் காரணமாவன். உலகப் படைப்பால் அவன் எவ்வித மாற்றங்களும் அடைவதில்லை. அதற்குக் காரணம் அவனிடத்தே பிரிக்கமுடியாத அம்சமாக விளங்கும் சத்தியே. சத்தியின் வழியே உலகத் தோற்றம் நடைபெறுகின்றது. மாயையே தோன்றுகின்ற பெரிய பிரபஞ்சமாக வடிவெடுக்கின்றது. மாயையும் பிரமத்தில் உறையும் ஒருபொருள் எனக் கொள்வர்.

ஆன்மாவானது ஒரு பகுதி. அது சிவனின் பகுதியாகும். அது அவனிடமிருந்தே புறப்படுகின்றது. முடிவில் அவன் தன்மையைப் பெறுகின்றது. அறியாமை காரணமாக ஆன்மா சிவனாகிய இறைவனில் இருந்து மாறுபட்டதாகக் கருதுகின்றது. அறியாமையாகிய இவ்விருள் ஆன்மாவை விட்டு நீக்கப்பெற அது சிவனைச் சார்ந்ததென்ற உண்மையை உணர்ந்து கொள்கின்றது. ஆன்மா சிவனிடமிருந்து வேறுபட்டதாகக் கருதிய காலத்தில அது சிவனுடன் ஒன்றானதன்று இவ் விரண்டிற்கும் உள்ள தொடர்புப் பேதாபேதமாகும் ஆன்மாவின் முடிவான இலட்சியம் சிவனாகிய இறைவனின் ஐக்கியத்தைப் பெறுதலும் அவனை அடைதலுமேயாகும். இம் முடிவான முதிர்ந்த நிலைக்கு லிங்காங்க சாமரஸ்யம் என்று பெயர்.

வீரசைவத்தில் மிக உயர்ந்த உள்பொருளாள பரசிவபிரமம் ஸ்தலமென்று அழைக்கப்படும். இது இடம், நிலை அல்லது உறைவிடம் என்ற பொருளை உணர்த்தி நிற்கும். அவனிடத்தே இப் பிரபஞ்சம் இருக்கின்றது. (ஸ்த) அவனிடத்தே இது சென்று முடிவில் (லம்) ஒடுங்குகின்றது. அவன் தன் விருப்பப்படியே இலிங்கமாகவும் அங்கமாகவும் பிரிந்து கொள்கின்றான் அவனது சத்தியும் கலை (பகுதி) என்றும் பத்தி ஈடுபாடு என்றும் பிரிந்து கொள்கின்றது. முந்தியது சிவனைச் சென்றடைகின்றது. பிந்தியது தனி ஆன்மாவைச் சென்றடைகின்றது. கலை தான் சிவனிடமிருந்து. உலகம் தோன்றி வரக் காரணமாகவுள்ளது பத்தியானது இறைவனை அடைய வழிகாட்டுகின்றது.

சைவத்தில் சாதனங்கள் எவ்வாறு ஆன்மீகப் பாதையின் படிகளாக அமைகின்றனவோ அதே போன்று வீரசைவத்திலும் சாதனங்கள் காணப்படுகின்றன. அவற்றின் பாவனைகள் இரண்டிலும் வேறுபாட்டுக் காணப்படும். முன்னையது கிரியைகளையும் உள்ளடக்கி விளக்கி நிற்க, பின்னையது இவற்றைத் தவிர்ந்து நிற்கும். வீரசைவத்தில் பஞ்சாசாரம், அட்டார்வர்ணம் பதங்கள் என்பன முக்கிய சாதனமாகக் கருதப்படும். மக்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர் போல் அமைதற்கான நெறியினைக் காட்டி நிற்பது பஞ்சாசாரம் ஆகும். இது ஐந்து வழியை விளக்கும். அவை இலிங்காசாரம், அதாசாரம் சிவாசாரம், பிருத்தியாசாரம், கணாசாரம். என்பன. இலிங்காசாரம் என்பது இலிங்கத்தைத் தரித்துக்கொண்டு முக்காலமும் தொழுதலாகும். சதாசாரம் என்பது ஏதோ ஒரு தொழிலைச் செய்து கொண்டு அறநெறியில் நிற்றலாகும். சிவாசாரம் என்பது இலிங்காயதர்கள் வேறுபாடின்றி உடன் உண்டலும், திருமணம் நிகழ்த்தலுமாகும். பிருத்தியாசாரம் என்பது கடவுளிடத்திலும் அடியார்களிடத்திலும் பணிவுடையவனாக இருத்தலாகும். கணாசாரம் என்பது நியாய நிருபண தத்துவமாகும். குரு, இலிங்கம், சங்கமம், பாதோதகம், பிரசாதம், வீபூதி, உருத்திராட்சம், பஞ்சாட்சர மந்திரம் செபித்தல் ஆகிய எட்டும் அட்ட வர்ணங்கள் எனப்படும். பதங்கள் மூன்றாகும். அவை குரு, சங்கமம், இலிங்கம் ஆகும். குரு என்பது ஆன்மீக ஆசான். சங்கமம் என்பது இலட்சியத்தை அடைந்துவிட்ட ஆன்மா. இலிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் என்பது சிவனுகும். முன் கூறிய சாதனை வழியாக ஆன்மாவைப் பக்குவப்படுத்தி தன்னிடமுள்ள அனைத்தையும் இம் மூன்றுக்கும் அர்ப்பணிக்குமிடத்து அவன் ஆன்மீக லட்சியத்தை அடைந்தவனுகக் கருதப்படுவான் என்று வீரசைவ மரபு கூறிநிற்கும்.

தென்னகத்தில் வீரசைவ வழிபாடானது பிராமணர்கள் அரசியல், சமுதாய பொருளாதாரத்திற் பெற்றிருந்த மேலாண்மையை நீக்கும் பொருட்டும், அவர்களால் உருவாக்கப்பட்டு பேணிவைக்கப்பட்ட வர்ணுச்சிரம தர்மத்தை அடியோடு நீக்குதற் பொருட்டும் இலகுவான, உயர்ந்த நோக்கங்களைத் தன்னுள் கொண்டு வீரசைவம் உருப்பெற்றதெனக் கருதுபவர். ஈழநாட்டைப் பொறுத்தவரையில் வீரசைவத்தின் செல்வாக்கு மிகக் குறைந்தளவினதாகவே காணப்படுகின்றது. வீரசைவத்தின் முழுமையான கோட்பாடுகள் சிறப்பாக இங்கு வலியுறுத்தப்படாமையும், பிரசார வேகமின்மையும், சமயத்திலும், சமுதாயத்திலும் பிராமணிய மேன்மையும், சமுதாயக் கட்டுக்கோப்பில் விட்டுக் கொடுக்கும் மனப் பக்குவமின்மையும் இவற்றுக்குக் காரணமாக அமையலாம். ஈழத்தில் பல்வேறு காரணங்களால் சமூக மாற்றங்கள் ஏற்படுகின்ற பொழுதிலும் மரபு வழிக் கோட்பாடுகளைப் பேணுகின்ற சமுதாயமாக ஈழம் விளங்குவதால் இதனைப் பெரிதும் விரும்புவதாகத் தெரியவில்லை. வீரசைவத்தின் கொள்கைகள் வழிபாட்டு முறைகள் அவற்றின் நோக்கம் சரியாக மக்களிடத்தில் வற்புறுத்தப்படுமிடத்து தமிழ்ச் சமுதாயத்திலும் புரையோடிக் கிடக்கும் சமுதாயக் குறைபாடுகள் நீக்கப்பட்டு மனித குலங்களெல்லாம் ஒன்றே அவர்களின் தலைவன் இறைவன் ஒருவனே என்ற பரந்த நோக்கம் சமுதாயத்தில் ஏற்பட வழி பிறக்கும்.

முடிவாக, வீரசைவமானது ஒரு சமுதாயத்தின் தனிப்பட்ட பிரிவினருக்கு மாருக ஏற்பட்ட சமயமென்பதைவிட, சமுதாயத்தில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளையும் முரண்பாடுகளையும் தவிர்த்து வேண்டாத செலவினங்களையும் காலதாமதத்தையும் நீக்கிப் பொதுமக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய சாதனங்களைப் புகட்டி அவற்றின் மூலம் பூரணமானதோர் ஆன்மீகப் பாதைக்கு வழிகாட்டும் பொது மக்கள் மதமாக எழுந்து சிறப்புற்று விளங்குகின்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PARAMAHAMSA YOGANANDA
## AUTOBIOGRAPHY OF A YOGI

"The scene was a KUMBHA MELA at Allahabad," Lahiri Mahasaya told his deciples.

"I had gone there during a short vacation from my office duties. As I wandered amidst the throng of monks and sadhus who had come from great distances to attend the holy festival, I noticed an ash-smeared ascetic holding out his begging bowl. The thought arose in my mind that the man was hypocritical, wearing the outward symbols of renunciation without a corresponding inward grace".

"No sooner had I passed the ascetic than my astounded eye fell on BABAJI. He was kneeling in front of matted-haired anchorite".

"GURUJI" I hastened to his side. 'Sir, what are you doing here?

"I am washing the feet of this renunciate, and then I shall clean his cooking utensils".

"Babaji smiled at me like a little child; I knew that he was intimating that he wanted me to criticize no one, but to see the Lord as residing equally in all body-Temples, whether of superior or inferior men, The great Guru added":

"By serving wise and ignorant sadhus, I am learning the greatest of virtues, pleasing to GOD above all other virtues - humility."

SIVA SIVA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவிழாச் செயற்குழு

## காப்பாளர்கள்

வித்துவான், சைவப்புலவர்:
சிவஸ்ரீ நவரத்தினக் குருக்கள், உரும்பராய்
இளைப்பாறிய இந்துக்கல்லூரிக் கனிட்ட அதிபர்

சிவஸ்ரீ ஐ.செல்வரத்தினக் குருக்கள் ,,

திரு. ந. தம்பிப்பிள்ளை, அளவெட்டி
இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்

திரு. சி. ஆறுமுகம்
இளைப்பாறிய உதவி அலுவகலர், கொழும்பு

திரு. தா. அ. அப்புத்துரை
இராஜேஸ்வரி பிராமணாள் ஹோட்டல்,கொழும்பு

திரு. தா. அ. கதிரேசு
இராஜேஸ்வரி அச்சகம், கொழும்பு

திரு. த. துரைராசா
பிறீ லங்கா ஸ்டோர்ஸ், கொழும்பு

திரு. சு. கிருபாமூர்த்தி
முன்னைநாள் பட்டினசபைத் தலைவர், காங்கேசன்துறை

திரு. க. ஜெயபாலசிங்கம் ,,
முன்னைநாள் பட்டினசபைத் தலைவர்

திரு. த. நீதிராசா
முன்னைநாள் மேற்சபை உறுப்பினர், கொழும்பு
செம்மனச்செல்வர்

திரு. க. வி. துரைச்சாமி
இளைப்பாறிய தலைமை ஆசிரியர், காங்கேசன்துறை

திரு. க. த. வல்லிபுரம்
திருமகள் ஸ்ரோர்ஸ், தெல்லிப்பழை

## செயற்குழு அங்கத்தவர்கள்

| | |
|---|---|
| திரு. செ. முருகையா | காங்கேசன்துறை |
| திரு. ஆ. ஆசைப்பிள்ளை | ,, |
| திரு. க. தனபாலசிங்கம் | ,, |
| திரு. இ. தனராசசிங்கம் | ,, |
| திரு. இ. ஜெயராசசிங்கம் | ,, |
| திரு. த. கோபாலகிருஷ்ணன் | ,, |
| திரு. த. செல்வநாயகம் | ,, |
| திரு. இ. சேனாதிராசா | ,, |
| திரு. சி. நடராசா | ,, |
| திரு. இ. பூலோகசிங்கம் | ,, |
| திரு. சு. சச்சிதானந்தம் | ,, |
| திரு. கோ. இராகவமூர்த்தி | ,, |
| திரு. செ. கமலநாதன் | ,, |
| திரு. க. வேலுப்பிள்ளை | ,, |
| திரு. பொ. பூபாலசிங்கம் | ,, |
| திரு. ந. சுப்பிரமணியம் | கீரிமலை |
| திரு. பொ. கனகரசா | ,, |
| திரு. சு. வெற்றிவேலாயுதம்பிள்ளை | பொற்கலம்தம்பை |
| திரு. த. குணரத்தினம் | தெல்லிப்பழை |
| திரு. நா. கந்தசாமி, ஜெயரூம்ஸ் | ,, |
| திரு. ஐ. இராசா | ,, |
| திரு. பொ. அருணாசலம் | அளவெட்டி |
| திரு. செ. சின்னத்துரை | ,, |
| திரு. சி. முத்துலிங்கம் | ,, |
| திரு. செ. கதிரேசபிள்ளை | ,, |
| திரு. பொ. நடராசா | தையிட்டி |
| திரு. வே. கந்தசாமி | கொத்தாவத்தை |
| திரு. வீ. சிவசுப்பிரமணியம் | சுன்னாகம் |
| வைத்தியகலாநிதி வீ. பஞ்சாட்சரம் | பலாலி |
| திரு. மு. கார்த்திகேசு | கொழும்பு |

## நிர்வாகத்தர்

தலைவர்:
திரு. ச. த. சின்னத்துரை சமாதான நீதவான்,
சிந்தனைச் சிற்பச் செல்வர், லீலா ஸ்டோர்ஸ்,
நியூ லீலா அச்சகம், கொழும்பு.

உப தலைவர்கள்:
திரு. ஐ. தருமலிங்கம்
புகையிரதப்பகுதி, காங்கேசன்துறை
திரு. கி. பொன்னுத்துரை
ஈஸ்வரி இரும்பு வர்த்தக நிலையம், சுன்னாகம்

செயலாளர்:
திரு. வ. குமாரசாமி
பட்டினசபை நூல்நிலையம்,காங்கேசன்துறை.

உப செயலாளர்:
திரு. மு. இராசலிங்கம் ,,

பொருளாளர்:
திரு. ச. விக்கிரமசிங்கம் ,,
அடைவு நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞான குரு தரிசனம்

கருடன் உருவங் கருதும் அளவிற்
பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோல்
குருவின் உருவங் குறித்தஅப் போதே
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே.

"ஒரு பொல்லாப்பு மில்லை யென்ற வாக்கு
உணர்ந்துணர்ந் தின்பத்தில் தேக்கு
கருமத்தில் கையை நீ வைத்துக்
கடமையைப் பயமின்றி ஆக்கு."

— எங்கள் யோகசுவாமி

1. நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வது கூடாது. நமது மனச்சான்று தருமம் என்று காண்பிக்கும் மார்க்கத்தினின்று நாம் எவ்வளவு விலகியிருப்பினும் உண்மையைக் கண்டு திகைத்துப் பயப்படாமல் சென்ற வழி திரும்பவேண்டும்.
2. நான் தருமவான். மற்றவர்களிலும் மேலானவன். சிறந்தவன் என்னும் எண்ணங்களை ஒழித்தல் வேண்டும். அத்தகைய செருக்கு றின் அதை தாழ்மையுடன் ஒப்புக்கொள்ளவேண்டும்.
3. எனது உயிரையும், பிறர் உயிரையும் காப்பதற்கு, இன்றியமையாத உழைப்பு நியமத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

—டோல்ஸ்டோய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறந்துவிட்டோம்!

"பன்மொழி ஆராய்ச்சிக் கலாநிதி"
தென்புலோலியூர், மு. கணபதிப்பிள்ளை
தலைமைத் தமிழ் மொழி பெயர்ப்பாளர்,
தொழில் அமைச்சு.

மறந்துவிட்டோம்! மறக்கக்கூடாததை-மறக்கவொண்ணுததை - மறந்துவிட்டோம்! "மக்கள் மாண்பு" அதுதான். "தமிழன் மாண்பு" என்றும் கூறிவிடலாம். தமிழன், மறக்க முடியாதவற்றையே மறந்து விடுபவன். பழைய வரலாறுகள் அந்த உண்மையைத் தெளிவாகக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

இந்த உலகத்திலே மக்களினமாக முதலிலே தோன்றியவன் தமிழன். அவன் நாடுதான் இந்த உலகத்திலேயே முதன்முதலாகத் தோன்றியது. அந்த உண்மையையே அவன் மறந்துவிட்டான், உண்மையைச் சொன்னுலும் ஏற்றுக்கொள்ள மறுக்கிருன். அப்படி இருக்காது என்று கூறிவிடுகின்ருன். உண்மையை அறிந்துகொண்ட வேளைகளிலும், அதை ஒரு சிறிது வெளிக்காட்டினுலும் தனது பதவியும் பதவியுயர்ச்சிகளுக்கான வாய்ப்புகளும் போய்விடும் என்று பயப்படுகிருன்: பயங்கொள்ளி. பாவம்!

"கல் தோன்றி மண் தோன்ருத காலத்தே முன் தோன்றி" வளர்ந்த கதையே தன் இனத்தின் கதை என்பதை அறிந்தும், அறியாதவன்போல் நடிக்கின்ருன். அவன் அப்படி நடித்துக்கொண்டிருந்தாலும்-ஏதோ ஒரு வகையாக வெளிநாட்டார் அந்தக் கதையினைக் கண்டு எடுத்துக் கூறினுலும் - கண்டும் காணுதவனுகக் காட்டித் தலை குனிந்து திரிகின்ருன்: பார்க்கப் பரிதாபமாய் இருக்கிறது!

சூரியனிலிருந்து பிரிந்து விழுந்த ஒரு கூறு அண்ட வெளியிலே ஓயாது இன்று போலவே அன்றும் சுற்றிச் சுழன்று கொண்டிருந்ததாம். அந்தச் சுற்றற் சுழற்சி காரணமாக அது கோளமாகி, மேற்பகுதி படிப்படியாகப் பல்லாயிரம் ஆண்டுகளாகக் குளிர்ந்து கல்லாக மாறியதாம். காலப் போக்கிலே அந்தக் கல் உடைந்துதான் மண் தோன்றியதாம். அந்தக் "கல்" தோன்றி "மண்" தோன்ருததொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைப் பழங் காலத்திலேதான் மூத்த "தமிழ்க் குடி" தோன்றியதாம்! அந்தக் காலத்திலே "மண்" தோன்றாததால், தமிழ் மக்கள், ஒரே கற்பாறையாகக் கிடந்ததை "பார்" என்றார்கள். "உலகம்" என்ற சொல் அன்று வழக்குக்கு வரவில்லை. "பார்முதிர் பனிக் கடல்" (திருமு. 45.). "பாயிரும் பனிக்கடல் பார் துகள் படப் புக்கு" (பரி. 5. 1.)., "பாருடைப் பனிக் கடல்" (சீவக. 274.) 'பார் முதிர் பனிக் கடல்" (பாக. 3. கரு. 50.) என்னும் பழந்தமிழிலக்கிய வழக்குகள் சான்று பகர்கின்றன. "பார்" என்பதனை அறியாத வடமொழியாளர், பாரினை அண்டியிருந்த "பார்க் கடல்" என்பதனை (பார் + கடல்) "பாற் கடல்" (பால் + கடல்) ஆக்கிக் கொண்டு புராணம்படைத்துவிட்டார்கள். பார்க் கடலைக் "கடந்தமை", அவர்களுக்குப் "பாற் கடல்" என்னும் கடலினைக் "கடைந்தமை" ஆகிவிட்டது. புணர்ச்சி நுட்பம் உணர்ந்து கொள்ளாமையால் ஏற்பட்ட அவலம் இது. இப்படியாக தமிழ்ச் சொற்களின் பொருளீட்டத்தினையுணர்ந்து கொள்ளாமல் - வட மொழியாளர் பட்ட அவலத்தால், எமது பழந்தமிழ் நாட்டின் வரலாறும், தமிழ் மொழியின் விழுப்பமும், தமிழர் சமயத்தின் முன்மையும் பழஞ் சிறப்பும் திரிக்கப்பட்டுவிட்டன. இவற்றையெல்லாம் நாம் மறந்து விட்டோம்!

குமரி மலைக்குத் தெற்கே "மகேந்திர மலை" என ஒரு மலை இருந்ததாகச் சமய இலக்கியங்கள் கூறுகின்றன. கந்தபுராணத்திலேயே, திருச்செந்தூருக்குத் தெற்கே கடலில் மகேந்திர மலையும் நாடும் இருந்தமையும், சூரபதுமன் அந் நாட்டினை ஆண்டமையும் கூறப்படுகிறது. இந்த மகேந்திரத்தையும் நாம் மறந்து விட்டோம்! பொதியிலுக்குத் தென்புறமாக மகேந்திர மலை என்னும் மலைத்தொடர் இருந்ததெனவும். அதன் அடியில் "பொன் மயமான" இலங்கை இருந்ததெனவும் கூறப்படுகிறது.

"துங்கமலி பொதித்தென்பால்
துடர்ந்த அடி வாரத்தில்
அங்கனக இலங்கையுமேழ்
வரைச் சாரல் அடித் தேசம்"

எனச் சிவதருமோத்திர ஆகமம் தெளிவு பெறக் கூறுகின்றது. அதன் உரையாசிரியரோ, "இலங்கையின் பகுதி கடலுள் மறைந்தமை" பற்றியும் எடுத்தோதுகின்றார். இதனையும் நாம் மறந்து விட்டோம்!

"மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியும்"

என மாணிக்கவாசகர் கூறியிருப்பதையும் மறந்து விட்டோம்!

இப்படியிப்படி நாம் மறந்துபோனவற்றுள்ளே எத்தனையோ பலவற்றை எடுத்துக் கூறலாம். மிகமிகப் பழைய காலப் பகுதியை விட்டுவிட்டு, இராமாயணக் கதை நிகழ்ந்த காலத்துக்கு வருவோம். இராமாயணக் கதை, இராமன் இராவணன் முதலியவர்களின் கதை. அந்தக் கதையில் வரும் இராமனை நன்கு அறியாவிட்டாலும், இராவணனை நாம் அறிவோம். இராவணன் இலங்கை மன்னன். இலங்கையர்களாகிய நாங்கள் அப் பெருமன்னன் பெருமையையே மறந்து விட்டோம்!

மறந்தவை:

திருநாவுக்கரசு சுவாமிகள், அவன் பெருமையினைத் தமது தேவாரங்களிலே எடுத்துக் கூறுவார்கள்.

"தென்னவன் மலையெடுக்கச் சேயிழை
நடுங்கக் கண்டு
மன்னவன் விரலாலூன்ற மணிமுடி
நெரிய வாயாற்
கன்னலின் கீதம் பாடக் கேட்டவர்
காஞ்சி தன்னுள்
இன்னவர்க் கருளிச் செய்தார் இலங்கு
மேற்றருளியனாரே." என்றும்,
"எடுத்தன னெழிற் கயிலை யிலங்கையின்
மன்னன் தன்னை
அடுத்தொரு விரலாலூன்ற அலறிப்
போயவனும் வீழ்ந்து
விடுத்தன கைநரம்பால் வேத
கீதங்கள் பாடக்
கொடுத்தனர் கொற்றவாணாள்
குறுக்கைவீ ரட்டனாரே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் அவர்கள் பாடியுள்ள தேவாரங்களை நோக்கலாம்.

திருஞானசம்பந்தப் பெருமானும், திருநாவுக்கரசு சுவாமிகளைப் போலவே இராவணனின் பெருமையினை அடிக்கடி எடுத்தோதுவார்.

"சாமவேதமோர் கீதமோதியத்
தசமுகன் பரவு
நாமதேயம துடையார் நன்குணர்ந்
தடிகளென்றேந்தக்
காமதேவனை வேவக் கனலெரி
கொளுவிய கண்ணூர்
வாமதேவர் தண்புகலூர் வர்த்தமா
னீச்சரத்தானே." என்றும்,

"கடுத்தவாளரக்கன் கைலையன்றெடுத்த
கரமுரஞ் சிரநெரிந் தலற
வடர்த்ததோர் விரலால் அஞ்செழுத்
துரைக்க வருளினன்றடமிகு நெடுவாள்
படித்த நான்மறை கேட்டிருந்த பைங்
கிளிகள் பதங்களை யோதப் பாடிருந்த
விடைக்குலம் பயிற்றும் விரிபொழில்
வீழி மிழலையானென வினை கெடுமே."

என்றும் அவர்கள் பாடியுள்ள தேவாரங்களை நோக்கலாம்.

## மண்டோதரி

இராவணனை மாத்திரமின்றி, இராவணன் மனைவியாகிய மண்டோதரி (வண்டோதரி) யினையும் மாணிக்கவாசக சுவாமிகள்,

"ஆர்கலி சூழ் தென்னிலங்கை அழகமர்
வண்டோதரிக்குப்
பேரருளின்ப மளித்த பெருந் துறைமேய
பிரான்"

என வரும் திருவாசகப் பகுதியிலே போற்றுவதைக் காணலாம். சிவபெருமானைத் துதிக்கும்போது மண்டோதரியும் தனிப்புகழ் பெறுகின்றாள்.

## இராவணன்

பழந் தமிழ் நாட்டினை - தென்னாட்டினை-தென்னகத்தினை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலே ஆண்டுகொண்டிருந்தவன் இராவணன். அவனைப் பழந்தமிழ் மக்கள் "தென்னவன்" எனவே குறித்துச் சுட்டி வந்தார்கள். அவன் யாண்டும் "இலங்கை மன்னன்", "இலங்கையர் கோன்" எனப் போற்றப்படுகிறான். இராவணன் புலத்தியரின் பேரன். பெரும் புயவலி படைத்தவனாய் விளங்கி, மூவேழ் உலகங்களையும் ஆண்டு வந்தவன் அவன். "மூவுலகினுக்குமொரு நாயக முடித்தேன்." என இராவணன் கூற்றாக வைத்துக் கூறுகிறார் கம்பர். இராவணன் தன்னொப்பில்லாத சிவ பக்தன். வேத வேதாந்தங்களிலே பாண்டித்தியம் பெற்றவன். இராவணன் மாமனான மயன் முதன்முதலாக இராவணனைச் சந்தித்தபோது, அவனது தோற்றத்தையும் முக விலாசத்தையும் பார்த்து வியந்து, "நீ யார்? எக் குலத்தவன்?" என்று கேட்டபோது, 'மறைகள் ஓராயிரம் யான் வல்லேன்.' என இறுமாப்புடன் விடையளித்தானும், இராவணன். வேதங்கள் இராவணனுக்கு மனப்பாடமாக இருந்தனவாம். வேண்டும் வேளைகளிலெல்லாம் கல்லுங் கனியும்படி வேதம் ஓதுவானும். "குன்றெடுக்கும் பெருந்தோளான்" எனப் போற்றப்படும் இராவணன் மலை எடுத்த கதை யாம் அறிந்தது. சிவபெருமான் ஒரு விரலால் ஊன்ற, "அலறிப்போய் அவனும் வீழ்ந்து விடுத்தன கைநரம்பால் வேத கீதங்கள்" பாடியமையும் யாம் தெரிந்ததொன்றே. அவன் காலத்திலே வடமொழி வேதங்கள் தோன்றவில்லை. அவன் பாடியவை யாவும் தமிழ் வேதங்களே என்பது கூறாமலே அமையும். 'தமிழர் மூதாதை' அல்லவா?

## சிவபக்தி

இராவணன் மாபெரும் வீரனாயிருந்த போதிலும், தனது புயபல பராக்கிரமங்களைப் பெரிதாக மதித்துக்கொண்டிருக்கவில்லை. சிவபெருமான் தனக்கு அளித்த வரபலத்தினையே அவன் முக்கியமாக மதித்துக்கொண்டிருந்தான். இராவணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதைப் படலத்தில் வருகின்ற ஒரு பாடலினால் அவனது பக்தி விழுப்பமும் தெய்வ நம்பிக்கையும் தெளிவாக விளங்குகின்றன. இராமன்மீது 'மாயாஸ்திரம்' விடுவதற்கு நினைந்தபோது,

" பூசனைத் தொழில் புரிந்து தான்
முறைமையிற் போற்றும்
ஈசனைத்தொழு திருடியும் சந்தமு
மெண்ணி
ஆசை பத்திலும் அந்தரப் பரப்பிலும்
அடங்கா
வீசி மேற்செல வில்லிசைத்
தொடைகொண்டு விட்டான்.'

எனக் கம்பர் கூறுகிறார்.

இராவணன் சிவபக்தன். சிவபூசை செய்து வந்தவன். படையினை ஏவுவதற்கு முன்னதாகவும் " தான் முறைமையிற் போற்றும் ஈசனைத் தொழுது இருடியும் சந்தமும் எண்ணி"த்தான் செயற்படுகின்றான். கம்பரோ அவனது பக்தியினையும் தவ வலியினையும் எப்பொழுதும் பாராட்டுகின்றார். அவனது மனைவியாகிய மண்டோதரி புலம்பலிலே, "வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி" எனத் திட்பத்துடன் கூற வைக்கிறார்.

இலிங்கக் கதை!

இவர்கள் எவரேனும் எடுத்துக் கூறாத ஒரு செய்தியினை, துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் " சித்தாந்த சிகாமணி" யிலே எடுத்துக் கூறுகிறார். இலங்கையிலே ஒன்பது கோடி இலிங்கங்களைத் தாபிக்கத் தொடங்கிய இராவணன், இராமனுடன் போர் புரியத் தொடங்குவதற்கு முன்னே "ஆறு கோடி" இலிங்கங்களை இலங்கையின் பல பாகங்களிலும் தாபித்துவிட்டானும். இராமன் வாளிக்கு இலக்காகி வீழ்ந்து கிடக்கும் "உயிர்போகும்" தறுவாயிலே, எதிரில் நின்ற தன் தம்பியான விபீடணனை அழைத்து, தான் தாபிக்காதிருக்கும் "மூன்று கோடி" இலிங்கங்களையும் இலங்கையிலே தாபிக்குமாறு வேண்டுகின்றான், இராவணன். தனது "கடைசி ஆசை" அது என்றும் அதனை முடித்து விடுதல் வேண்டும் என்றும் மன்றுடிக்கேட்கிறான். இதனைச் சிவப்பிரகாச சுவாமிகள் தெளிவாக எடுத்தோதியிருக்கிறார்கள், விபீடணன் வாயிலாக :-

" இலங்கை யொன்ற விலிங்கம் புதியவாய்
நிலங்க ளொன்பது கோடி நிறுவுவான்
மலங்க லின்றி மனங்கொண் டவற்றினு
ளலந்த யங்கறு கோடிக ணட்டினேன் "

" மூன்றுகோடி லிங்கங்க ளிங்கொழிந்தன
முறைநி
யூன்றுவாயென வுரைத்திறந்தன
னவனுரையா
லான்ற வாகம முறையது செயத்துணிந்
தகத்தெஞ்
ஞான்று நானினைத் திருந்தன னென்றிது
நலில்வான்."
- ( அந்திய கதை. 16, 17.)

திருக்கரைசைப் புராணம்.

இந்த ஒன்பது கோடி இலிங்கங்களைப் பற்றி இலங்கையிலெழுந்த " திருக்கரைசைப் புராண"மும் எடுத்தோதுகின்றது. "சூதமுனியருளிச் செய்த மிக்கதிரும் வடபாடைப் புராணத்தைத் தென்கலையின் விருத்தப் பாவால்" அந் நூல் இயற்றப்பட்டதாக ஆசிரியர் கூறுகிறார். மேலும், " மன்றுதனி லகலாதென்றும் விண்டசிவ சித்தாந்த வேதாந்தப் பொருள் விளக்கும் விளக்கமாகி..." எனவும் " கொற்றங்குடி வாழும் பிரான் சரணத் துறுதி கொண்டே..." எனவும் வரும் பாடற்பகுதிகள் ஆசிரியரை அடையாளங் காட்ட உதவுகின்றன. ஆசிரியர் யாரென அறிந்து கொள்ள இயலவில்லை.

திருக்கரைசைப் புராணத்தினைத் திருக்குணமலையினைச் சார்ந்த திரு. வே. அகிலேசபிள்ளையவர்கள், பரிசோதித்து, சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவரவர்களின் பொழிப்புரையுடன், 1890-ம் ஆண்டிலே மயிலிட்டி மு. நல்லையாபிள்ளையுடைய வச்சிரயந்திரசாலையிலே பதிப்பித்திருக்கிறார்கள். இப் புராணம், திருக்குணமலைக்கு அண்மையாகவிருக்கும் "அகத்தியத் தாபனம்" எனப்படும் கரைசையம்பதிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் கொண்ட சிவபெருமானுடைய மகத்துவங்களை எடுத்து விரித்துக் கூறுவதாகும்.

**சிங்கபுயன்**

சூரிய குலத் தோன்றலும் அயோத்தி புரி வேந்தனுமாகிய சிங்கபுயன் என்பான் நாடு நகரங்களையும் படைகளையும் இழந்து, ஈழநாட்டினை வந்தடைந்து ஈழத்துக்கு அதிபதியானான் எனவும் இப் புராணம் எடுத்தோதுகின்றது. இலக்குமியும் இச் சிங்கபுயனும் இத் தலத்திலே பூசனை செய்து பெற்ற பெரும்பலன்களையும் இப் புராணம் எடுத்தோதுகின்றது.

அகத்திய முனிவர் மாவலி கங்கையிலே தீர்த்தமாடும்போது இறைவன் அசரீரியாக அந்தத் தீர்த்தத்தின் மாண்பினை எடுத்துரைத்து, சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வதற்கான இடத்தினையும் குறித்துக் காட்டினார் என்றும், இறைவன் ஆணைப்படி கரைசையம்பதிலே தாபிக்கப்பட்டதே "அகத்தியத் தாபனம்" என்றும் இப் புராணம் எடுத்தோதுகின்றது.

**பதும புராணம்**

பதும புராணத்திலே "மாருதன் வேள்விச் சிதைப்பு" என்று ஒரு அத்தியாயம் இருக்கின்றது. அந்த அத்தியாயத்திலே கூறப்படும் நிகழ்ச்சி நம்மைச் சிந்திக்க வைக்கின்றது. "மாருதன் என்னும் பெயர் கொண்டிருந்த ஓர் அரசன் வடநாட்டிலே ஒரு பெரிய யாகம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தான். அவ்வேளையில், வானத்திலே சென்று கொண்டிருந்த நாரதன் அதனைக் காண்கின்றான். பற்பல விலங்குகள் தூண்களிலே கட்டப்பட்டிருப்பதையும், வேதவினைஞர்கள் யாககாரியங்களைக் கவனித்துக் கொண்டிருப்பதையும் பார்த்ததமை காரணமாக அவன் மனம் துடித்தது. கீழே இறங்கிவந்து, மாருத மன்னன் இயற்றப் போகும் யாகத்தின் பொய்மையை விளக்கி, விலங்குகளைக் கொல்வதால் ஏற்படும் பாவத்தை விளக்கி, யாகத்தைத் தவிர்க்கும்படி வேண்டினார். மாருதனும் மத குருமாரும் நாரதனைக் கண்டித்து, தம் காரியங்களிலே தலையிட்டால், நாரதனைக் கொன்று விடுவதாக அச்சுறுத்தினார்கள். இந் நிகழ்ச்சி தென்னகத்தின் தலைவனான இராவணன் ஆட்சியெல்லைக்குள்ளே நடைபெற்றமையால், அவனுக்கு அறிவிக்கப்பட்டது. இராவணன் உடனே நிகழ்ச்சி நடைபெற்ற இடத்துக்கு எழுந்தருளி வந்து, மாருதனையும் யாகக் குரு மாரையும் அச்சுறுத்தி, யாகத்தைத் தடுத்து நிறுத்தி விலங்குகளைக் காப்பாற்றினான். இராவணனின் அறிவுரையால் மாருத மன்னன் மனம் மாறிக் கொல்லாமையின் பெருமையினை உணர்ந்து "இடபதேவர்" குழுவிலே சேர்ந்துகொண்டான்.

இந்த "இடபதேவர்" குழு சைன இலக்கியங்களிலே மிகுதியாக எடுத்துரைக்கப்படுகிறது. சைவர்களின் சிறந்த கொள்கைகள் பலவற்றைத் தெரிந்தெடுத்து, தமது சமயக் கொள்கைகளுடன் பிறமதத்தவர் சேர்த்துக்கொண்டமைக்கு இது ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும். சைவப் பெருமன்னனாகிய இராவணனைச் சைன சமயத்தவர் தம்மவனாகக் காட்டுவதன் காரணத்தினை யாம் உணர்ந்து கொள்ளலாம். சைனர்கள், அரக்கர்களை "வித்தியாதரர்" என்று குறிப்பிடுவார்கள். இயக்கர் நிசாசரர் எனவும் அவர்கள் குறிக்கப்பட்டதுண்டு. இக் கூட்டத்தினர் பல நூற்றாண்டுகளாக யாகங்கள் புரிவதற்குத் தடையாக இருந்தார்கள். எங்கேயாவது யாகம் செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றால், அம் முயற்சிகளைக் குலைத்து விலங்குகள் கொல்லப்படுவதைத் தடுப்பதற்காக ஓர் இயக்கம் அவர்களால் நடாத்தப்பட்டது. அந்த இயக்கத்தில் பெண்டுகள் கூட முன்னணியில் நின்று போராடிக் கொண்டிருந்தார்கள் என்பதை வான்மீகியார் இயற்றிய இராமாயணமே தெளிவாகக் காட்டுகின்றது. கொல்லாமை போற்றி, முதன் முதலாக அலக்கண் (அஹிம்சை)க் கொள்கையினைக் கடைபபிடித்து வந்தவர்கள் அவர்களே. யாகங்களை அரக்கர்கள் அழிப்பதைத் தடுப்பதற்காகவே விசுவாமித்திர முனிவர் இராமலக்குவர்களை அழைத்துச் சென்றார் என்றும் யாம் அறிவோம். அதை வான்மீகியாரே கூறிக் கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் ஆட்சிக் காலத்தை "இராசாவழி" எனினும் நூல் தொடர்பாக ஆராய்ச்சி செய்தோர் "கி.மு.2387" வரையிலிருக்கும் என எடுத்தோதுகின்றார்கள். அந்தப் பழைய காலத்திலே பௌத்தமோ சமணமோ உருவாகவில்லை என்பதை யாம் நினைவிலிருத்திக்கொள்ளுதல் வேண்டும். இராமாயணத்துக்கு முன்னதாக, பாரதக் கதையும், அதற்கு முன்னதாகக் கந்த புராணக் கதையும் நடந்தமை தமிழன் தொன்மையினை மேலும் பழமையாக்குகின்றன என்பதையும் யாம் மறந்து விடுதலாகாது.

" வ்ருஷப "

விடை எனும் சொல்லுக்குத் தமிழ் மொழியில் 5 பொருள்கள் கூறப்படும் :-

1. எருது, காளை.

" தோடுடைய விடையேறி "
(தேவாரம்)

" பீடுடைய போர் விடையன் "
(தேவாரம்)

2. எருமைக் கடா.

' மதர் விடையிற் சீறி ' (புற.வெ.7.14)

3. வெள்ளாட்டுக் கடா.

'மாடந்தோறும் மைவிடை வீழ்ப்ப'
(புறம். 33)

4. ஆண் மரை

'மரையான் கதழ்விடை '
(மலைபடு. 331)

5. ஆண் வெருகு

'வெருக்கு விடையன்ன' (புறம். 324)

"விடை" என்னும் சொல், விலங்கினத்தின் ஆண் வகுப்பினவற்றையே குறித்துச் சுட்டும் பொதுச் சொல்லாயிருந்தாலும், வழக்கு மிகுதி காரணமாகச் சிறப்பாகக் 'காளை' (எருது-இடபம்) என்னும் பொருளினையே உணர்த்துவதாக வழங்கப்பெற்று வருகின்றது.

"காளை"யினை "வ்ருஷப" என வடமொழியாளர் குறிப்பர். "வருஷப" என்னும் சொல்லினுக்கு 'வ்ருஷ்'' (மழைபெய்) என்பதையே மூலமாகக் காட்டுவர். 'மழைபெய்' என்னும் பொருளிலிருந்து "ஆண்மைக்"'க் கருத்தினைப் பெறுவது சாலாது. 'ருஷப" என்பது அதன் முதற்குறையாகும். அதனை அறிந்துகொள்ளாமல் 'ருஷப' என்னும் சொல்லுக்கு 'ருஷ்' என்பதே மூலம் எனக் காட்டுவர். 'ருஷ்' என்னும் சொல்லினுக்கு 'செல் இயங்கு, குத்து, கொல், உந்து, தள்ளு' என்பனவே பொருள்களாகும்.

'விடை' என்னும் சொல்லின் திரிபு ஆதலினாலேயே 'வ்ருஷ்' என்பதில் வகரம் (வ்) வந்துள்ளது. 'ருஷப' என்னும் முதற்குறைத் திரிபுச் சொல்லினையும் வேறொரு சொல்லாகக்கொண்டு பொருந்தாததொரு பொருள் காட்டினர்.

உண்மையில், 'விடை' எனும் சொல், கொச்சை வடிவில் 'விட' என நிற்பதாகும். இடையின இடைச் செருகல் வழக்கப்படி 'வி' - 'வ்ரு' எனத் திரிந்தது. மெய்த் திரிபு மரபுப்படி 'ட' - 'ஷ' எனத் திரிந்தது.



பொற் சாசனச் சான்று

Courtesy - Ceylon Museum

நாங்கள் மறந்துவிட்ட பற்பல நிகழ்ச்சிகளை நினைவூட்டத்தக்கதாய் விளங்கும் பொற்சாசனம் ஒன்றினை இங்கே காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1937-ம் ஆண்டிலே, பருத்தித்துறைப் பகுதியிலுள்ள வல்லிபுரக்கோயில் வெளி வீதியினைச் சீராக்கும்போது நிலத்தினுள்ளே கண்டெடுக்கப்பட்ட பிராகிருதச் சாசனம் இது. இச் சாசனத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு, பின் வருவதாகும் :

"வசப அரசன் காலத்தில் நாகதீவினை ஆட்சிபுரிந்த அமைச்சன் இசிகிரயன் என்பான் பதகர அதனையிலே பியகுகதிச விகாரையைக் கட்டினான்.''

இச் சாசனத்தில் 'வசபன்' (பசவன்) என்னும் அரசனின் பெயர் வருகிறது. அம் மன்னன் கி. மு. 127-17 வரை அரசாண்டான் என இலங்கை வரலாறு கூறுகிறது.

வசபன்

'வசபர்' (பசவர்) என்பது நந்திதேவரின் பெயர். தெலுங்கு மொழியிலும், கன்னட மொழியிலுங்கூட நந்திதேவரின் பெயர் 'பசவர், பசவண்ணர், பசவேசர்' என வழங்கி வருகின்றது. 'விடை-வ்ருஷப--வசப - பசவ - விருஷப' என வரும் சொற்கள் யாவும் 'இடபம்' என யாம் குறிக்கும் 'எருது' எனப்படும் (சிவபெருமானது) 'விடை'யினையே குறிப்பன. அறத்தின் உருவே 'விடை' என்பர் சைவர். பல்லவர்களும், யாழ்ப்பாண மன்னர்களும் 'விடை' (எருது) க் கொடியினர் என்பது யாம் அறிந்தது.

இவ்வளவையும் யாம் அறிந்திருந்தும் - இவற்றையெல்லாம் - ஒன்றாக வைத்துச் சிந்திக்க மறந்துவிட்டோம்! தமிழர் மதமான சைவத்தை மறந்துவிட்டோம்! வீரசைவத்தையும், இராவணன், சூரபதுமன் ஆகியோரையும் மறந்துவிட்டோம்! 'மறந்துவிட்டோம்!' என்பதைக் கூட மறந்துவிட்டோம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றேம்!

மகாகுரு சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்களவர்களின் எழுபத்தைந்தாவது நிறைவினையொட்டி எடுக்கப்பெறும் 'வைர விழா' நாங்கள் நினைத்திருந்ததினும் பார்க்க மிகுந்த சீர் சிறப்புகளுடன் நடைபெறுவதைக் காண இதயம் குளிர்கின்றது. இவ் விழாவில் வெளியிடப்படும் "வைர விழா மலர்" தானும் நாங்கள் கருதியிருந்த அளவினும் பார்க்கப் பெரிதாயும், பொருட் பொதிவுடையதாயும், அச்சு நலம் பெற்றதாயும் உருவாகியிருப்பதைக் காண மகிழ்ச்சி மேலோங்குகின்றது. இவ் வகையிலே தோன்றாத் துணையாய் நின்று இயக்கிச் செயற்பட வைத்த சிவபரம்பொருளை மனமொழி மெய்களால் முதலில் வந்தித்து வழுத்துகின்றேம்!

யாம் எடுக்கும் இப் பெரு விழா இவ்வளவு சிறப்பாக இயல்வதற்கு எமக்கு உதவியளித்த புரவலர்களுக்கும், புலவர் பெருமக்களுக்கும் சிறப்பாக இளைஞர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேம். எம்மைச் சேர்ந்த இளைஞர் பரம்பரையினர், இவ் விழா நிகழ்ச்சிகளுக்கு வேண்டியவற்றையெல்லாம் செய்தமைப்பதில் அல்லும் பகலும் முயன்று உதவியளித்திராவிட்டால் இவ் விழா இவ்வளவு சிறப்புற நிகழ இயலாதிருந்திருக்கும்.

இவ் விழா பற்றிச் சிந்தை செலுத்தி, தமது முக்கிய அலுவல்களை யெல்லாம் ஒரு சாரில் ஒதுக்கிவைத்து, கடல் கடந்து எமது உள்ளங்களுடன் ஒன்றுகலந்து உலவி ஊக்கமளித்துக் கொண்டிருக்கும் மைசூர் குருபீட வீர சிம்மாசனுதிபதியும், ஸ்ரீ குருதாரு காச்சிரம (இராஜயோகி அந்தர் ஜோதிசி) வேதமூர்த்தி வீரய்ய சாஸ்திரிமுத் அவர்களும் எமது நன்றிக்குரியவர்கள். அவர்கள் இருக்கும் திசை நோக்கி அவர்களுக்கு நன்றி கூறுகின்றேம்!

"வைர விழா மலர்" குருக்களவர்களின் மாண்பு பேசுவது.பாரத நாட்டிலும் ஈழ நாட்டிலும் வாழும் பண்பாளர்களும் பேரறிஞர்களும் குருக்களவர்கள் பாற் கொண்டிருக்கும் பெருமதிப்பினை எடுத்துக் காட்டுவது; வீரசைவ விழுப்பத்தினை விரிவாக எடுத்துக் கூறுவது. இம் மலரினுக்குச் செய்தி வழங்கியும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் நல்கியும் துணை புரிந்த புரவலர்களுக்கும் பேரறிஞர்களுக்கும் யாம் பெரிதும் கடைமைப்பட்டுள்ளேம் அவர்கள் எல்லோருக்கும் எமது உள்ளார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேம்!

இவ் விழா மலரினை அச்சேற்றுவதற்காக யாம் 'நியூ லீலா, அச்சக உரிமையாளரும், சமாதான நீதவானும், 'சிந்தனைச் சிறபச் செல்வ'ரும், வைர விழாச் சபைத் தலைவருமாகிய திரு. ச. த. சின்னத்துரை அவர்களை நாடியபோது, அவர்கள் இன்முகங் காட்டி, அப் பணியினை ஏற்றுக்கொண்டார்கள். குறுகியதொரு காலத்தினுள்ளே சிறப்பு வாய்ந்த இம் மலரினை அச்சிடுவதற்காக நியூ லீலா அச்சகப் பணிவல்லோர் அல்லும் பகலும் இரண்டு வார காலமாக அயரா து உழைத்தமையை யாம் என்றும் மறக்க முடியாது. அவர்கள் எல்லோருக்கும் எமது இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேம்!

மீண்டும் எல்லோருக்கும் நன்றி கூறுகின்றேம்.

வாழ்க வீரசைவம்!

காங்கேசன்துறை,
6-4-1977.

இங்ஙனம்,
வ. குமாரசாமி,
செயலாளர்

நியூ லீலா அச்சகம், கொழும்பு-12.

University of Jaffna
107694
Library

107694

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மத்தியில் முதல் இடம்
வகிக்கும் சோப்புகளில் மிகச் சிறந்தவை

★ கௌரி பார் சோப்
★ சில்வ லயிற் பார் சோப்

தரத்தில் சிறந்தவை.
சிறந்த தூய்மையான சலவைக்கு
இன்றே வாங்கிப் பாவியுங்கள்

தயாரிப்பாளர்களும், ஏக விநியோகஸ்தர்களும்:

# லங்கா ஜோதி இன்டஸ்ரீஸ்

142, புதுச் செட்டித் தெரு,
கொழும்பு 13.

தொலைபேசி: 34554


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Beautify your home with export quality 'ANTONEX' Batiks and handicrafts.

For quality batik wall hangings, curios, polished wooden articles of kitchenware, table - ware like spice servers, trays, wine glasses, cups, mugs, ashtrays. lampstands etc, contact us.

Our another new speciality is Batik Wooden Bangles Foreign tourists are attracted by them. You too will like them if you see them at

'ANTONEXPO'

(Importers & Exporters)

106-1/1 & 1/3 Reclamation Road,

(1st Floor)

Colombo - 11.

T'Phone: 35687 T'Grams: "ANTONAIR"

வாசிக்காதீர்கள்!

உங்கள் அபிமான புகைப் படங்களுக்கு

ஸ்டியோ லிங்கம்ஸ்

பருத்தித்துறை வீதி,

காங்கேசன்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*of*

# M. J. CHELLIAH & SONS

IMPORTERS & DEALERS IN HARDWARE

**379, OLD MOOR STREET,**

**COLOMBO - 12**

*T'Phone :* 32806

*WITH BEST COMPLIMENTS*

*OF*

# NAGA TRADERS

APPROVED PAPER MERCHANTS FOR N. P.

**29/20, Maradana Road,**

**Hendala,**

**WATTALA.**

**&**

# N. K. STATIONERS

**80, A, NEW MOOR STREET,**

**COLOMBO - 12**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

of

## Kala Trading Co.

134, 2nd Cross Street,
COLOMBO-11.

பாடசாலைப் புத்தகங்களா ?
பலசரக்குச் சாமான்களா ?
மற்றும் ஏனைய பொருட்களையும்
சகாய விலையில் பெற்று மகிழ
நாடுங்கள்

## நாதன் ஸ்ரோர்ஸ்

நடேஸ்வராச் சந்தி,
காங்கேசன்துறை.

சிறந்த விதமான
**சாப்பாட்டு**
**வகைகளுக்கு**
தேநீர் மற்றும்
குளிர்பானங்களுக்கு

நாடுங்கள் :

## லக்கி ஹவுஸ்,

பஸ் நிலையம்,
காங்கேசன்துறை.

எல்லா விதமான
குளிர்பான வகைகளுக்கும்
ஐஸ் கிரீம், ஐஸ் சொக்
சகல விதமான இனிப்பு வகைகளுக்கும்
உண்மை கனிய நாடுங்கள்
அருந்திக் களிப்புறுங்கள் !

## வரன் 555 கூல் ஸ்பொட்

நடேஸ்வரா சந்தி,
காங்கேசன்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments*

*of*

# FREE LANKA STORES

268, Main Street, & 240, 4th Cross Street,

**COLOMBO 11.**

*T'phone:* 24820 & 35786

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*of*

# SOLOMON TRADING COMPANY

**461/B, Old Moor Street,**

**Colombo - 12.**

T'phone: 32571

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*of*

# TILLYS HARDWARE STORES

**424, SRI SANGARAJAH MAWATHA,**
**COLOMBO-10.**

**T'phone :** 27439 - 35420

**STANLEY ROAD,**
**JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

of

# MAHAWELI TRADERS

410, OLD MOOR STREET,

COLOMBO 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments*

*of*

# V. T. V. DEIVANAYAGAMPILLAI & CO.

**IMPORTERS & EXPORTERS**

*Distributors for Products of* : B. C. C. Ltd., O. C. C. Ltd.
& B. C. M. Ltd.

**37, 5th CROSS STREET,**
**COLOMBO - 11.**

*T'phone*: 23105 & 31741

*T'grams*: DEIVOO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments*

*of*

# SIVAGI PAINT HOUSE

**134, JUSTICE AKBAR MAWATTE,**

**COLOMBO-2.**

*With Best Compliments*

*of*

# *P. Thevathasan*

C/o. **A. BASTIAMPILLAI**

280, MAIN STREET,

COLOMBO - 11.

*T'phone:* 29185

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org